REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
20பக்கங்கள் 30/-
வரு. 90 இல. 63
Tuesday 15, March, 2022




2022 மார்ச் 15 செவ்வாய்க்கிழமை
# தினகரன்
THINAKARAN

# மாற்றமுறும் உலகுக்கு ஏற்ப மாசற்ற ஊடக கலாசாரம்




தினகரன்
THINAKARAN
2022 மார்ச் 15 செவ்வாய்க்கிழமை
வரு. 90 இல. 63
Tuesday 15, March, 2022
16பக்கங்கள் 30/-

புலம்பெயர் அமைப்புகள்
## இலங்கையில் முதலீடு செய்ய எந்தத் தடைகளும் கிடையாது
வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்க அரசு தயார் வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவிப்பு

## குறைந்தபட்ச கட்டணம் 3 ரூபாவால் அதிகரிப்பு

நீர் வழங்கல்துறை அமைச்சர் வாசு
## அமைச்சு வாகனம், உத்தியோக பூர்வ வீட்டை நேற்று கையளிப்பு

## இலங்கையருக்கு சவூதி தொழில் சந்தையில் அதிக வேலைவாய்ப்பு
சவூதி அமைச்சருடனான சந்திப்பில் அமைச்சர் பீரிஸ் கோரிக்கை

பாராளுமன்ற அமைச்சு சார் ஆலோசனைக் குழு
## பயங்கரவாதத் தடுப்பு திருத்த சட்ட மூலத்துக்கு அனுமதி

## பொறியியலாளராக வந்து மக்களுக்கு சேவையாற்றுவதே எனது நோக்கம்

## போதுமானளவு எரிபொருள் கையிருப்பில்: மீண்டும் விலை உயராது
விநியோக நடவடிக்கைகளும் வழமைக்கு என்கிறார் அமைச்சர் காமினி

## சீனாவில் மீண்டும் வேகமெடுக்கும் கொரோனா
ஒரே நாளில் 3,400 பேர் பாதிப்பு

## நல்லிணக்கத்திற்கு எதிராக கருத்து; ஞானசார தேரருக்கு எதிரான வழக்கு
ஜூன் 28 இல் விசாரணை

Doc Call 247

TRIPLE BLASTER
Dialog



# 18வது வருடமாக தொடர்ந்து முதலாவது இடத்தில் இருக்கும் செலிங்கோ லைஃப்

இலங்கையின் ஆயுள் காப்புறுதிப் பிரிவில் செலிங்கோ லைஃப் அதன் தலைமைத்துவ நிலையை தொடர்ந்து 18வது வருடமாகவும் தக்க வைத்துள்ளது.

2021 டிசம்பர் 31ல் முடிவடைந்த 12 மாத காலத்தில் அதன் பதியப்பட்ட மொத்த வருமான வளர்ச்சி 15.8% ஆல் அதிகரித்து 25.565 பில்லியன்களாக உள்ளது.

முதலீடுகள் மற்றும் ஏனைய வருமானங்களாக குறிப்பிட்ட ஆண்டில் 15.129 பில்லியன்கள் பதிவாகி உள்ளது. ஒருங்கிணைந்த வருமானமாக 40.694 பில்லியன்கள் உள்ளன.

இது 2020 ஐ விட பத்து வீதம் அதிகமாகும். செலிங்கோ லைஃப்பின் முதலீட்டு பிரிவு வளர்ச்சி 20.748 பில்லியன் ரூபா அல்லது 15.52 வீத வளர்ச்சியை கடந்த 12 மாதத்தில் அடைந்து, வருட இறுதியில் 154.455 பில்லியன்களாக உள்ளது.



கம்பனியின் ஆயுள் நிதிய வளர்ச்சி 12 வீதமாக வளர்ச்சி கண்டு 119.634 பில்லியன்களாக 31 டிசம்பர் 2021ல் பதிவாகி உள்ளது.

2020ஐ விட 25 வீதம் அதிகமாக 11.803 பில்லியன்கள் மாற்றப்பட்டதை தொடர்ந்து இந்த அதிகரிப்பு காணப்படுகின்றது.

சொத்துக்கள் 22.9 பில்லியன் களாக அல்லது 15.23 வீதத்தால் அதிகரித்து, மாதாந்த சராசரி அதிகரிப்பாக 1.9 பில்லியனுக்கும் அதிகமான தொகையைப் பதிவு செய்து மீளாய்வுக்கு உற்பட்ட வருட முடிவில் 173.762 பில்லியன்களாக உள்ளது.

செலிங்கோ லைஃப்பின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான துஷார ரணசிங்க கம்பனியின் இந்த அடைவுகள் பற்றிக் குறிப்பிடுகையில் “2021க்கான எமது புள்ளிகள் ஆயுள் காப்புறுதி மூலம் மேலும் மேலும் இலங்கையர்களின் எதிர்காலத்தை ஆபத்தற்றதாக ஆக்குவது என்ற எமது அடிப்படை நோக்கத்தில் இருந்து எம்மை திசை திருப்ப வெளிக் காரணிகளுக்கு நாம் இடம் கொடுக்கவில்லை என்பதை உணர்த்தி நிற்கின்றன. பொருளாதார நிச்சயமற்ற நிலையின் அழுத்தம், நிலையற்ற கொள்கைகள் என்பன 2021ல் பல வர்த்தகங்களுக்கு பெரும் சவாலாக அமைந்தன.

ஆனால் செலிங்கோ லைஃப் சுழன்று வரும் தேவைகளிலும் அதன் வாடிக்கையாளர் தளத்திலும் தொடர்ச்சியான கவனங்களைச் செலுத்தி தனது வளர்ச்சி வேகத்தையும் தக்க வைத்துள்ளது” என்றார்.



இலங்கையின் முன்னணியில் உள்ள பல்வகைப்பட்ட கூட்டு நிறுவனங்களில் ஒன்றான DIMO நிறுவனம், TATA வாகனங்களுக்கான ஒரேயொரு அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தராகவும் உள்ளது. அது சமீபத்தில் NEM Construction (Pvt) Ltd நிறுவனத்திற்கு 30 TATA LPK 1618 4 Cube BLASTER டிப்பர்களை வழங்கியது. உத்தியோகபூர்வமாக வாகனங்கள் கையளிக்கப்பட்ட போது.




## Lanka Wall Tiles வலையமைப்பினூடாக சந்தைக்கு வரும் Rajarata tiles

Rajarata tiles ஆனது தற்போது Lanka Wall Tiles வலையமைப்பிலும் கிடைக்கும்என்பதை, கட்டுமானப் பொருட்கள் மற்றும் கட்டுமானத்துறையின் இரண்டு ஜாம்பவான்களான Samson Rajarata Tiles (Pvt) Ltd மற்றும் Lanka Tiles PLC ஆகியன இணைந்து அறிவித்துள்ளன.

இந்த கூட்டு வலையமைப்பின் மூலம் இலங்கையின் terracotta தயாரிப்புகள் மற்றும் முதன்மையானசுவர் மற்றும் தரை ஓடுகளைக் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்பை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் ஒரு வரவேற்கத்தக்க மற்றும் வசதியான முயற்சியாக இதுநடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. Samson Rajarata மற்றும் Lanka Tiles இடையேபுரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தன் பின்னர் இந்தமுயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

Samson Rajarata Tiles (Pvt) Ltd உலகத்தரம் வாய்ந்த பல்வேறுவகையான களி (டெர்ரா கோட்டா) மூலப்பொருளைக் கொண்ட தயாரிப்புகளை உற்பத்திசெய்கிறது. அவர்கள் DSI Samson குழுமத்தின் ஒருஅங்கமாகவும் விளங்குகின்றனர். இத்தயாரிப்புகள் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட ஜப்பானியதொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்றன.

ரஜரட்டடைல்ஸின்பொதுமுகாமையாளர்விபுல்குலரத்னவின்கருத்துப்படி, “இந்தமுயற்சியானது Rajarata Tiles, Lanka Wall Tiles மற்றும் உயர்தர வர்த்தக நாமங்களை ஒரேவசதியான இடத்தில்அனுபவிக்கும் உள்ளூர்நுகர்வோர்ஆகியஇரு தரப்பினருக்கும் பரஸ்பரநன்மை பயக்கும் ஒன்றாகஅமைகின்றது. " என்றார்.






## இலங்கை விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட ரத்னா அப்பியாசப் புத்தகங்கள்

ரத்னா அப்பியாசப் புத்தகங்கள் 65 ஆண்டு காலங்களுக்கும் மேலாக ஆழமாக வேரூன்றிய வரலாற்றைக் கொண்டவர்கள். இவர்கள் இலங்கையின் பயிற்சிப்புத்தகங்கள் துறையில் வளர்ந்து வரும் தலைவராக விளங்குவதுடன்“ ஷில்பய பிஹிடன்ன "திறன்களுடன் ஆசீர்வதித்திடுங்கள்”என்ற தலைப்பில் உணர்ச்சிகரமானதோர் பிரசாரத்தை வெளியிட்டனர்.

புத்தகங்களையும் ஆசிரியர்களையும் வணங்கும் இலங்கையில் மிகவும் உறுதியாக உட்புகுத்தப்பட்ட விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது.

புகழ்பெற்ற ஆளுமையால் நடித்து மற்றும் பாடல் பாடப்பட்டு மனதைத் தொடும் வகையிலான இசை வீடியோ ஒன்றில் டாக்டர். பிரதீப் ரங்கன மற்றும் சக நடிகராக இன்னொரு தலைமுறையைச் சேர்ந்த ஆளுமைபெற்ற நிஸ்ஸங்க தித்தெனியவும் பங்குகொள்கிறார். பிரபல பாடகரும் பாடல் ஆசிரியருமான டாக்டர். பிரதீப் ரங்கன, ரத்னா அப்பியாசப் புத்தகங்களின் வர்த்தகநாம தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். குழுமப் பிரதம நிறைவேற்று



அதிகாரி ஷனில் செனரத், அண்மையில் இடம்பெற்ற வணிகவிளம்பர வெளியீட்டு விழாவின் போது டாக்டர். பிரதீப் ரங்கனவுடன் அடையாள ரீதியான ஒப்பந்தங்களை கைச்சாத்திட்டார்.






## எரிவாயு தட்டுப்பாட்டால் உல்லாச வலயம் வெறிச்சோட்டம்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

பலாங்கொடை பெலிஹுல்ஓயா உல்லாசப் பயண வலயத்தில் அமை ந்துள்ள உல்லாச ஹோட்டல்களில் அதிகமானவை எரிபொருள் தட்டுப்பாட்டால் மூடப்பட்டுள்ளதாக இப்பிரதேச ஹோட்டல் உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையால் இப்பிரதேசத்துக்கு உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் வருகை தருவதில்லை எனவும் வருகை தந்த ஒரு சிலர் உரிய உணவு வசதிகள் இல்லாமையா ல் அதிருப்தியுடன் திரும்பி செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் புகழ்பெற்ற இயற்கை வளங்கள் காணப்படும் இப்பிரதேசத்திக்கு உல்லாபிரயாணமாக வரும் வெளிநாட்டு, உள்நாட்டு பயணிகள் அதிகளவில் வருகை தருகின்ற போதிலும் தற்போதைய நிலையில் இப்பிரதேசம் எங்கும் வெறிச் சோடி காணப்படுகிறது. இதனால் ஹோட்டல் தொழிற்துறை மட்டுமன்றி இப்பிரதேசத்தில் உல்லாச பயணிகளை நம்பி சிறு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் அனைத்து துறையும் முடக்கமடைந்துள்ளதாகவும் இப்பிரதேச துறைசார் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.



REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 மார்ச் 15 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN
තිනකරන්




வரு. 90 இல. 63 | Tuesday 15, March, 2022 | 20பக்கங்கள் | 30/-

## புலம்பெயர் அமைப்புகள்

# இலங்கையில் முதலீடு செய்ய எந்தத் தடைகளும் கிடையாது



### வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்க அரசு தயார் வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வலநாயகம்**

புலம்பெயர் அமைப்புக்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு எந்தத் தடையும் கிடையாது. அதற்கான வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க அரசாங்கம் தயாரென வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

அது தொடர்பான பேச்சுவார்த்தைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இலங்கையில் அவர்கள் முதலீடுகளை மேற்கொள்ள முன்வந்தால் அதற்கான வசதிகள் செய்துகொடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற தொழில்நுட்ப 05



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள சவூதி வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் இளவரசர் பைசல் பின் ஃபர்ஹான் பின் அப்துல்லா அல் சௌத் மற்றும் அவரது தூதுக்குழுவினர் நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி செயலகத்தில் நேற்று சந்தித்து பேச்சு நடத்தியபோது.

# குறைந்தபட்ச கட்டணம் 3 ரூபாவால் அதிகரிப்பு



04

## நீர் வழங்கல்துறை அமைச்சர் வாசு

# அமைச்சு வாகனம், உத்தியோக பூர்வ வீட்டை நேற்று கையளிப்பு



நீர் வழங்கல் துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, தமது உத்தியோகபூர்வ வீட்டையும், வாகனங்களையும் அமைச்சின் செயலாளரிடம் நேற்றுக் கையளித்துள்ளார்.

அமைச்சுப்பணிகளில் இருந்து ஒதுங்கி இருக்கவும், அமைச்சரவைக் கூட்டங்களில் கலந்து கொள்வதில்லை எனவும் முடிவு செய்திருந்த நிலையில், அமைச்சருக்கான சிறப்புரிமைகளை அனுபவிப்பது நியாயமற்ற செயல் என்று உணர்ந்ததன் காரணமாக அவற்றை 05

# இலங்கையருக்கு சவூதி தொழில் சந்தையில் அதிக வேலைவாய்ப்பு

### சவூதி அமைச்சருடனான சந்திப்பில் அமைச்சர் பீரிஸ் கோரிக்கை



சவூதி அரேபிய தொழில் சந்தையில் இலங்கையர்களுக்கு அதிக வேலைவாய்ப்புக்களை எதிர்பார்ப்பதாக இலங்கை வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், சவூதி வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் இளவரசர் பைசல் பின் ஃபர்ஹான் பின் அப்துல்லா அல் சௌத்திடம் நேற்று கேட்டுக் கொண்டார்.

சவூதி வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் இளவரசர் பைசல் பின் ஃபர்ஹான் பின் அப்துல்லா அல் சௌத் மற்றும் அவரது தூதுக்குழுவினர் இலங்கைக்கு 05

## பாராளுமன்ற அமைச்சு சார் ஆலோசனைக் குழு

# பயங்கரவாதத் தடுப்பு திருத்த சட்ட மூலத்துக்கு அனுமதி

பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) (திருத்தம்) சட்டமூலத்தை இரண்டாவது மதிப்பீட்டுக்காக பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு கடந்த (11) வெளிநாட்டு அலுவல்கள் பற்றிய அமைச்சு சார் ஆலோசனைக் குழு அனுமதி வழங்கியது.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தலைமையில் கூடிய வெளிநாட்டு அலுவல்கள் பற்றிய அமைச்சு சார் ஆலோசனைக் குழுவிலேயே, இதற்கான அனுமதி வழங்கப்பட்டது. இந்தச் சட்டமூலம் முதலாவது வாசிப்புக்காக கடந்த 05

# பொறியியலாளராக வந்து மக்களுக்கு சேவையாற்றுவதே எனது நோக்கம்



### 198 புள்ளிகள் பெற்று முதலிடம் பெற்ற யாழ் கொக்குவில் மாணவன் கஜலக்சன் தெரிவிப்பு

**யாழ்.விஷேட நிருபர்**

எதிர்காலத்தில் பொறியியலாளராக வந்து தமிழ் மக்களுக்கு சேவையாற்றுவேன் என 2021 புலமைப் பரிசில் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் முதல் இடத்தைப் பெற்றுக்கொண்ட யாழ், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் 05

# கிரிக்கெட் போட்டியை கண்டு களித்துவிட்டு வீடு திரும்பியவர்

### கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

**ஹற்றன் சுழற்சி நிருபர்**

பொகவந்தலாவை - செல்வகத்தை பகுதியிலுள்ள கிணறொன்றிலிருந்து பாடசாலை மாணவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது சடலம் நேற்று முன்தினம் மாலை 05

## போதுமானளவு எரிபொருள் கையிருப்பில்:

# மீண்டும் விலை உயராது

### விநியோக நடவடிக்கைகளும் வழமைக்கு என்கிறார் அமைச்சர் காமினி



**லோரன்ஸ் செல்வநாயகம்**

மீண்டும் எரிபொருள் விலையை உயர்த்தும் எதிர்பார்ப்பு கிடையாது என எரிசக்தி அமைச்சர் காமினி லொகுகே தெரிவித்துள்ளார். நாட்டுக்கு போதுமானளவு பெற்றோல் மற்றும் டீசல் தற்போது கையிருப்பிலுள்ளதாகவும் மின் உற்பத்தி நிலையங்களுக்கு தேவையானளவு எரிபொருள் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் மக்களுக்கு தேவையானளவு எரிபொருளை பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கைகளும் 05

# சீனாவில் மீண்டும் வேகமெடுக்கும் கொரோனா

### ஒரே நாளில் 3,400 பேர் பாதிப்பு



கொரோனா வைரஸ் உருவான சீனாவில் மீண்டும் புதிய வகை வைரஸ் வேகமாக பரவத் தொடங்கியுள்ளது. நேற்றுக் காலை நிலவரப்படி சீனாவில் புதிதாக 3,400 பேர் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 2019ம் ஆண்டு சீனாவின் வூஹான் நகரில் முதன் முதலாக கொரோனா 05

# நல்லிணக்கத்திற்கு எதிராக கருத்து; ஞானசார தேரருக்கு எதிரான வழக்கு

### ஜூன் 28 இல் விசாரணை

ஊடக மாநாடு நடத்தி இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை குழப்பும் வகையில் கருத்து வெளியிட்டதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள ஜனாதிபதி செயலணியின் தலைவரும் பொதுபல சேனாவின் தலைவருமான ஞானசார தேரருக்கு எதிரான வழக்கை, ஜூன் (28) விசாரணைக்கு எடுக்க கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகே 05



தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2022 மார்ச் 15 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN

**தொழுகை நேரம்**
14முதல் 18 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 05.03 |
| லுஹர் | 12.21 |
| அஸர் | 03.35 |
| மஃரிப் | 06.22 |
| இஷா | 07.31 |

**இன்றைய சுபதினம்**
பிலவ வருடம் மாசி 30
ராகுகாலம் : பகல் : 03.00 - 04.30வரை
சுபநேரம் : காலை : 06.00 - 07.30வரை
யோகம்: சித்தயோகம்
திதி: திரையோதசி

## மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக
# இந்திய துணைத் தூதுவருடன் நவாஸ்கனி எம்.பி ஆலோசனை

இலங்கைக்கான இந்திய துணைத் தூதர் மற்றும் தூதரக ஆலோசகர் ஆகியோரை சந்தித்து தமிழக மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ்கனி சுமார் ஒரு மணி நேரம் ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனையில் மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக ஆலோசனை செய்யப்பட்டு மீனவர்கள் தாக்குதல் தொடர்பாகவும், எல்லை தாண்டி மீன் பிடிப்பது தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது. ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 25வது மாநாட்டில் பங்கேற்க இலங்கை சென்ற இந்திய யூனியன் முஸ்லிம் மாநில துணைத் தலைவரும், இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினருமான கே. நவாஸ்கனி இலங்கைக்கான இந்திய துணை தூதர் வினோத் கே. ஜேக்கப் மற்றும் இந்திய தூதரக ஆலோசகர் கௌஸ்லேந்திரகுமார் ஆகியோருடன் சந்திப்பில் கலந்து கொண்டார்.



இச்சந்திப்பில், மீனவர்கள் பிரச்சனைகள் தொடர்பாக துணை தூதர் இல்லத்தில் சுமார் ஒரு மணி நேரம் ஆலோசனை செய்யப்பட்டது. இந்த ஆலோசனையில் இராமநாதபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் கே நவாஸ்கனி எம்பி, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படும் தமிழக மீனவர்கள் மற்றும் அவர்களின் படகுகளை விடுவிப்பது உள்ளிட்ட பல்வேறு தமிழக மீனவர்கள் பிரச்சினை குறித்தும் அவர்களுக்கு தேவையான மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறதா என்பதையும் பற்றியும் விரிவாக கேட்டறிந்தார். இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்துதான், அதிக அளவில் மீனவர்கள் மீன் பிடிக்க வருகிறார்கள்.

அவர்கள் படகுகள் மூலமே வருமானம் கிடைக்கிறது. அதையும் இலங்கை அரசு பறிமுதல் செய்து ஏலத்திற்கு விடுவதால், குடும்ப வாழ்வதாரம் பாதிக்கப்படுவதாக வும் கே. நவாஸ்கனி எம்.பி., விரிவாக இலங்கைக்கான இந்திய துணை தூதரிடம் விரிவாக எடுத்து கூறினார்.

# தமிழ் மொழியில் பணியாற்றக்கூடிய பொலிஸாரை நியமிக்க நடவடிக்கை
## கனகராயன் குளத்தில் பயிற்சிக் கல்லூரி; வட மாகாண ஆளுநர்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மக்கள் எதிர்நோக்கும் மொழிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அரச துறையில் இரண்டு மொழியிலும் பணியாற்றக் கூடியவர்களுக்கு தமிழ் பிரதேசங்களில் முன்னுரிமை அளிக்கப்படுமென வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

அதன் ஒரு அம்சமாக வடக்கில் தமிழ் மொழியில் பணிபுரியக்கூடிய பொலிஸாரை நியமிக்கும் நடவடிக்கையில், முதற்கட்டமாக கனகராயன்குளம் பகுதியில் பொலிஸ் பயிற்சிக் கல்லூரி ஒன்றை எதிர்வரும் மே மாதத்தில ஆரம்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அதேவேளை, வட பகுதியில் முதற்கட்டமாக 50 மொழி பெயர்ப்பாளர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்த அவர், அரச துறையில் இரண்டு மொழிகளில் பணியாற்ற வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். அரச நிறுவனங்கள் மாகாண சபைக்குட்பட்ட நிறுவனங்கள் உள்ளூராட்சி சபை நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு இரண்டு மொழிகளிலும் பணியாற்றக்கூடியவர்கள் நியமிக்கப்படுவது அவசியம்.

அதற்கான உறுதிப்பாடு அரசியல் அமைப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ளதென்றும் அவர் தெரிவித்தார். அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரச ஊழியர்களுக்கு கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுள்ளதுடன், அவர்கள் மக்கள் சேவைக்கு முன்னுரிமை அளிக்கவேண்டியது அவசியம். அபிவிருத்தி உள்ளிட்ட ஏனைய தொழில் துறைகளில் செயற்படுவோருக்கு தடையின்றி அதற்கு வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல் அவர்களின் பொறுப்பாகும். அதிலிருந்து அவர்கள் நழுவமுடியாது. அவ்வகையில் கிடைத்துவரும் முறைப்பாடுகளைக் கவனத்தில் கொண்டு, மிகுந்த கவனம் செலுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(ஸ)

# பஸ் கட்டண திருத்தம் தொடர்பில்: சங்கங்களுக்கு இடையில் கருத்து வேறுபாடு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பஸ் கட்டண திருத்தம் தொடர்பில் பஸ் உரிமையாளர் சங்கங்களுக்கு இடையில் கருத்து முரண்பாடு நிலவுகின்றது. பஸ் கட்டண அதிகரிப்பு தொடர்பில் திருப்தி அடைவதாக இலங்கை தனியார் பஸ் போக்குவரத்து சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ள நிலையில், பஸ் கட்டண அதிகரிப்பு போதுமானதல்ல என அகில இலங்கை தனியார் பஸ் நிறுவன சம்மேளனங்களின் செயலாளர் அஞ்சன பிரியஞ்சித் தெரிவித்துள்ளார். எரிபொருள் விலை உட்பட செலவுகள் அதிகரித்துச் செல்லும் நிலையில், தற்போதைய பஸ் கட்டண அதிகரிப்பை ஏற்றுக்கொள்வதாக கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

அதேவேளை, எரிபொருள் மற்றும் பஸ் வண்டிகளின் உதிரிப்பாகங்கள் தொடர்பில் நிவாரண வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமாறு போக்குவரத்து அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை எவ்விதத்திலும் தற்போதைய பஸ் கட்டண அதிகரிப்பு திருப்தியளிக்கவில்லை என தெரிவித்துள்ள அகில இலங்கை பஸ் நிறுவன சம்மேளனத்தின் செயலாளர் அது தொடர்பில் பஸ் உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி அடுத்த கட்ட நடவடிக்கையை மேற்கொள்ளப் போவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.(ஸ)

# குறைந்தபட்ச கட்டணம் 3 ரூபாவால் அதிகரிப்பு

குறைந்தபட்ச பஸ் கட்டணத்தை மூன்று ரூபாவால் அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, குறைந்தபட்ச கட்டணம் 20 ரூபாயாக அதிகரிக்கப்படும். ஏனைய கட்டணங்கள் 15 சதவீதத்தினால் அதிகரிக்கப்படும் என்று அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். பஸ்கட்டண உயர்வு தொடர்பாக அமைச்சருக்கும் பஸ்சங்கங்களுக்கும் இடையில் ஞாயிறன்று பேச்சுவார்த்தை நடைபெற்றது. அமைச்சரவைக்கு அறிவித்ததன் பின்னர் பஸ் கட்டணங்கள் திருத்தப்படும் என போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்திருந்தார்.இந்த நிலையில் நேற்று அமைச்சரவை கூட்டத்தில் இது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

பஸ் கட்டண திருத்தம் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று (15) அல்லது நாளை வெளியிடப்படும் எனவும், கட்டண அதிகரிப்பு தொடர்பான உரிய அறிவிப்புகள் போக்குவரத்து ஆணைக்குழு ஊடாக வெளியிடப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். பஸ் கட்டண அதிகரிப்புடன் புகையிரத கட்டணத்தை அதிகரிக்குமாறு ரயில்வே திணைக்களம் கோரியுள்ளது. இலங்கை போக்குவரத்து சபையும் பஸ் கட்டணத்தில் திருத்தம் செய்யுமாறு கோரிக்கை விடுக்கவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் பேச்சாளர் தெரிவித்தார்.

இதே வேளை கட்டண அதிகரிப்பு போதுமானதல்ல என சில பஸ் சங்கங்கள் தெரிவித்துள்ளன.(பா)

## வரலாற்றில் முதன்முறையாக பவுண் 150000 ரூபாவாக உயர்வு



இலங்கையில் வரலாற்றில் முதன்முறையாக 24 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 150,000 ரூபாவை எட்டியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. 22 கரட் தங்கப் பவுண் ஒன்றின் விலை 139,000 ரூபாவாக பதிவாகியுள்ளது. இதேவேளை, இலங்கையில் கடந்த 2017ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 கரட் தங்கம் 51,600 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட நிலையில், 22 கரட் தங்கம் 48,200 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டிருந்தது. அத்துடன், கடந்த ஆண்டு இலங்கை சந்தையில் ஒரு பவுண் தங்கத்தின் விலை செய்கூலியுடன் சேர்த்து 124000 ரூபாவை கடந்திருந்தது. இலங்கையில்,கொவிட் தொற்று நிலைமை தீவிரமடைய ஆரம்பித்ததாலே, தங்கத்தின் விலை தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது. பொருளாதார நெருக்கடி நிலையில், தொடர்ச்சியாக தங்கத்தின் விலை அதிகரித்து வருவதாக அறிய வருகிறது.

## ஜனாதிபதியின் வீட்டுக்கருகில் மீட்கப்பட்ட பெட்டிக்குள் விளையாட்டுத் துப்பாக்கிகள்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வீட்டுக்கு அருகாமையில் சந்தேகத்திற்கிடமாக கிடந்த பெட்டி ஒன்றினால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. அம்புல்தெனிய சந்தியில் காணப்பட்ட இப்பெட்டியினுள் இரண்டு விளையாட்டு துப்பாக்கிகள் காணப்பட்டதாக மிரிஹான பொலிஸார் தெரிவித்துள்ளனர். பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில், இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.சம்பவ இடத்தில் நேற்று முன்தினம் இரவு நாடகம் ஒன்று படமாக்கப்பட்டுள்ளது. அதற்காக கொண்டு வந்த பொம்மை துப்பாக்கிகளை நாடகக் குழுவினர் சம்பவ இடத்தில் விட்டு சென்றதும் தெரியவந்தது. இந்த நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தேர்தல்களில் பெண்களுக்கு 25 வீத முன்னுரிமை

(மினுவாங்கொடை நிருபர்)

தேசிய நல்லிணக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, நாட்டைக் கட்டியெழுப்ப ஒத்துழைப்பு வழங்க முன்வருமாறு, ஸ்ரீல.சு.க. மத்திய கொழும்பு அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான ஜனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா, சகல தரப்பினர்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளார். கட்சியின் கொழும்பு மாவட்ட சம்மேளன மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறினார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கும்போது, இன்றைய காலத்தில், மக்களுக்கு மத்தியில் புரிந்துணர்வையும், தேசிய நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதே சிறந்தது. இதை விடுத்து, அரசியல் இலாபம் கருதி அல்லது நாட்டைக் காட்டிக் கொடுக்கும் நோக்குடன் சமூகங்களுக்கு மத்தியில் பிரச்சினைகளை ஏற்படுத்தக் கூடாது.அவ்வாறு செய்வோரை மன்னிக்கவே முடியாது என்றார்.

# தவக்கால சிந்தனை



## தாழ்ச்சி - உயர்ச்சி

மனிதர்கள் ஒவ்வொருவரும் புகழைத் தாங்கள் அடைய வேண்டுமென விரும்புகிறார்கள். புகழை அடைவதற்காக சிலர் தம்மை அழகுபடுத்துகிறார்கள். சிலர் செல்வத்தை சேர்க்கிறார்கள். சிலர் அதிகாரத்தை தேடிப் பெற்றுக் கொள்கிறார்கள். அழகோ அதிகாரமோ செல்வமோ என்றும் நமக்கு புகழைப் பெற்றுத் தராது. மாறாக நாம் எந்த அழவிற்கு பணிவோடு நம்மையே நாம் தாழ்த்திக்கொண்டு பணிபுரிகிறோமோ அந்த அளவிற்கு நாம் புகழை அடைய முடியும்.

இயேசுவின் சமகாலத்தில் வாழ்ந்த யூதர்களில் சிலர் போலியான ஆன்மீக செயல்பாடுகளை மக்கள் பார்க்க வேண்டும் என்பதற்காக செய்தார்கள். அதனூடாக மக்களிடம் புகழை அடைய வேண்டும் என விரும்பினார்கள். அது போல விருந்துகளிலும் தொழுகை கூடங்களிலும் முதன்மையான இருக்கைகளை தேடிப் பெற்றுக்கொண்டார்கள். இம்மாதிரியான செயல்கள் தங்களுடைய மதிப்பை கூட்டும் என அவர்கள் கற்பனை செய்து கொண்டார்கள். இப்படிப்பட்டவர்களைப் பார்த்து இயேசு தெளிவாகச் சொன்னார். 'தம்மைத் தாமே தாழ்த்துகிற எவரும் உயர்த்தப்பெறுவர்'. போலி செயற்பாடுகளால் எந்த ஒரு மனிதனும் புகழை அடைய முடியாது என்று இயேசுவினுடைய வாழ்க்கையிலே அவர் தம்மையே தாழ்த்தினார். அவர் எந்த அளவிற்கு தாழ்த்திக்கொண்டார் என்றால் யூத சமுதாயத்தால் மிகவும் இழிவானதாக கருதப்பட்ட சிலுவை மரணத்தை ஏற்றுக் கொள்ளும் அளவிற்கு அவர் தம்மை தாழ்த்தினார்.

அதே வேளை தன்னையே தாழ்த்திய இயேசுவை இறைமகன் புகழின் உச்சத்திற்கு கொண்;டு சேர்த்தார். சிலுவை மரணதிற்குப் பின்புதான் இயேசுவினுடைய புகழ் இந்த உலகெங்கும் ஓங்கி ஒலித்தது. ஆகவே எந்த ஒரு மனிதன் தன்னையே தாழ்த்தி பணிவோடு வாழ்கிறானோ அந்த மனிதனால் தான் புகழை அடைய முடியும். இதற்கு இயேசுவே சாட்சி.

அருட் தந்தை அருண்ரெக்ஸ்...

# வென்னப்புவவில் 39 இளைஞர்கள் போதைப் பொருட்களுடன் கைது

சிலாபம், வென்னப்புவ பகுதியில் முகநூலூடாக ஏற்பாடு செய்யப்பட்ட களியாட்டத்தில் ஈடுபட்டிருந்த 39 இளைஞர்கள், போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வென்னப்புவ பொலிஸ் பிரிவில் வைக்கால பிரதேசத்திலுள்ள ஹோட்டலொன்றில் இந்த களியாட்டம் இடம்பெற்றுள்ளது.பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமையவே, சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 20, 30 வயதுக்கு இடைப்பட்ட மட்டக்குளி, கனேமுல்ல, நீர்கொழும்பு, அநுராதபுரம், வத்தளை மற்றும் மீரிகம உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.



சவுதி வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் இளவரசர் பைசல் பின் ஃபர்ஹான் பின் அப்துல்லா அல் சௌத் நேற்று வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிசை சந்தித்தபோது.

## கொத்மலை ஒருங்கிணைப்புக் குழு
# தலைவர் பதவியில் இருந்து பியதிஸ்ஸ எம்.பி ராஜினாமா

(தலவாக்கலை குறூப் நிருபர்)



கொத்மலை பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக இருந்த தேசிய சுதந்திர முன்னணியின் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமல் பியதிஸ்ஸ நேற்று (14) முதல் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். இவ்வாறானதொரு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பதவியை, தான் வகிப்பது மனசாட்சிக்கு விரோதமானசெயல். எனவே நுவரெலியா மாவட்ட கொத்மலை பிரதேச அபிவிருத்தி குழுவின் தலைவர் பதவியிலிருந்து இராஜினாமா செய்துள்ளதாக நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமல் பியதிஸ்ஸ தெரிவித்துள்ளார். இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். சிறிய, சிறிய கட்சிகளை இணைத்துக் கொண்டு தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பின்னர் அவைகளை புறந்தள்ளிவிட்டு தன்னிச்சையாக அரசாங்கம் செயற்படுகின்றது என்றார்.

# அரசின் மீதுள்ள ஆத்திரத்தில் சர்வகட்சி மாநாட்டை புறக்கணித்துவிட வேண்டாம்

அரசாங்கத்தின் மீதுள்ள ஆத்திரத்தில் சர்வகட்சி மாநாட்டை புறக்கணித்துவிட வேண்டாமென சகல கட்சிகளிடம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கேட்டுள்ளது. நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்காகவே, சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுமாறு வலியுறுத்தப்பட்டதேயன்றி, தேசிய அரசாங்கம் அமைப்பதற்காக அல்ல என்று ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேக்கர தெரிவித்தார்.

மொனராகலையில் ஞாயிறுக்கிழமை நடைபெற்ற கட்சி மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,



நாடு தற்போதுள்ள நிலைமையில், மக்களுடன் இணைந்து வீதிக்கிறங்கி போராடுவதைத் தவிர மாற்று வழியில்லை. பொருளாதார நிபுணத்துவமுடையவர்களுக்கு நிதி அமைச்சை வழங்காது, ஜனாதிபதிகள் நிதி அமைச்சர்களாக செயற்பட்டமையே, இன்றைய இந்த நெருக்கடி நிலைக்கு பிரதான காரணமாகும்.

இந்த நெருக்கடி நிலைமையிலிருந்து நாட்டை மீட்பதற்கு புதிய வேலைத்திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். தற்போது நியமிக்கப்பட்டுள்ள பொருளாதார பேரவையில் எந்தவொரு பொருளாதார நிபுணர்களும் உள்வாங்கப் படவில்லை. இவ்வாறான நடவடிக்கைகள் பிரயோசனமற்றவை.

எனவே, பொருளாதார நிபுணர்களை அழைத்து அவர்களிடம் ஆலோசனை பெறுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

நாடு இவ்வாறு வீழ்ச்சியடையும் போது ஆக்கிரமிப்புக்கள் அதிகரிக்கும். 1,000 பில்லியன் டொலர்களை தருவதாகக் கூறி, இலங்கையின் பொருளாதார கேந்திர நிலையங்களை அமெரிக்கா கோரும். இதற்கு இடமளிக்கக் கூடாது. எனவே அரசாங்கம் அழைத்தது என்பதற்காக சர்வகட்சி மாநாட்டில் ஒதுங்கியிருக்காமல், வேலைத் திட்டங்களை முன்வைக்குமாறு ஏனைய கட்சிகளிம் கோருகின்றோம்.

அரசாங்கம் முன்னெடுத்த செயற்பாடுகளுக்கு நாடு பழியல்ல. சர்வ கட்சி மாநாட்டைக் கூட்டுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை, நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு மாத்திரமேயாகும்.

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 183.25 | 192.37 |
| கனடியன் டொலர் | 195.26 | 204.12 |
| யூரோ | 278.29 | 288.81 |
| ஜப்பான் யென் | 2.1570 | 2.2543 |
| சிங்கப்பூர் டொலர் | 185.58 | 192.47 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 263.51 | 271.91 |
| சுவிஸ் பிராங்க் | 270.59 | 281.79 |
| அமெரிக்க டொலர் | 249.96 | 259.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 608.26 | கட்டார் ரியால் | 62.81 |
| குவைத் டினார் | 755.13 | சவூதி ரியால் | 61.12 |
| ஓமான் ரியால் | 595.66 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 62.43 |

## இலங்கையருக்கு சவூதி தொழில்...

உத்தியோகபூர்வ விஜயம் செய்துள்ளனர்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அவர், நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரை சந்தித்த பின்னர் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸை வெளிநாட்டலுவல்கள் அமைச்சில் சந்தித்தார். இதன்போதே அமைச்சர் இவ்வாறான கோரிக்கையை முன்வைத்தார்.

சவூதி அரேபிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரை வரவேற்ற அமைச்சர் பீரிஸ், இலங்கை சவூதி அரேபிய இருதரப்பு உறவுகளை முடிவுகள் சார்ந்த, பன்முகக் கூட்டாண்மையாக மாற்றுவதற்கான இலங்கையின் ஆர்வத்தை வெளிப்படுத்தினார்.

தற்போதைய உலகளாவிய சூழலில், பரஸ்பர நலனுக்காக இருதரப்பு ஆர்வமுள்ள பல துறைகளில் வலுவான உறவுக்கு இரு அமைச்சர்களும் ஒப்புக்கொண்டனர்.

ஐ.நா.வில், குறிப்பாக ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையின் 49வது அமர்வின் போது, இலங்கைக்கு சவூதி அரேபியா நல்கிய வலுவான ஆதரவையும் அனுதாப அணுகுமுறையையும் அமைச்சர் பீரிஸ் பாராட்டினார்.

கொழும்புத் துறைமுகம், ஹம்பாந்தோட்டை துறைமுகம், ஹம்பாந்தோட்டையில் பிரத்தியேகமான மருந்து வலயங்கள், புதிதாக அடையாளம் காணப்பட்ட சர்வதேச தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள், மட்டக்களப்பில் துணி / ஆடை வலயம் ஆகியவற்றில் சவூதி அரேபியாவின் முதலீடுகளை ஊக்குவித்த வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், சவூதி அரேபிய தொழில் சந்தையில் இலங்கையர்களுக்கு அதிகமான வேலை வாய்ப்புக்களை எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டார்.

அபிவிருத்தி ஒத்துழைப்பு என்பது இருதரப்பு பங்காளித்துவத்தின் முக்கிய அங்கம் எனக் குறிப்பிட்ட அமைச்சர் பீரிஸ், இலங்கைக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி உதவிகளை வழங்கியமைக்காக சவூதி அரேபியாவுக்கு இலங்கையின் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தையின்போது, இரு நாடுகளுக்குமிடையே ஏற்கனவே நிலவுகின்ற உற்சாகமான இருதரப்பு உறவுகளை மேலும் ஆழப்படுத்துவதற்கான சவூதி அரேபிய அரசாங்கத்தின் உறுதிப்பாட்டையும், பொருளாதார ஒத்துழைப்பையும் சவூதி அரேபிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் மீண்டும் வலியுறுத்தினார். சவூதி அரேபியாவை தற்போதைய எண்ணெய் சார்ந்த நிலையில் இருந்து மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு மாற்றுவதற்கான வழிமுறையாக, சவூதி அரேபியாவின் 2030 இலக்கை அவர் சுட்டிக்காட்டினார்.

## பொறியியலாளராக வந்து மக்களுக்கு...

தமிழ்ச்செல்வன் கஜலக்சன் தெரிவித்துள்ளார்.

வெளியாகியுள்ள 2021 தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு அடிப்படையில், அகில இலங்கை ரீதியில் யாழ் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை மாணவன் தமிழ்ச்செல்வன் கஜலக்சன் முதலிடத்தை பெற்றுள்ளார். தனது சாதனை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலையே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## பயங்கரவாதத் தடுப்பு திருத்த...

பெப்ரவரி (10) பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

உயர் நீதிமன்ற தீர்ப்புக்கு அமைய திருத்தங்களுடன் கூடிய சட்டமூலத்துக்கு அமைச்சுசார் ஆலோசனைக் குழு அனுமதி வழங்கியிருப்பதுடன், இது குறித்த அறிக்கையை அடுத்த பாராளுமன்ற அமர்வு வாரத்தில் சமர்ப்பிப்பதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில், நீதி அமைச்சர் அலி சப்ரி, பாராளுமன்ற உறுப்பினர்களான மயந்த திஸாநாயக, மதுர விதானகே, (கலாநிதி) சுரேன் ராகவன், (பேராசிரியர்) சரித ஹேரத், இசுறு தொடங்கொட ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## போதுமானளவு எரிபொருள் கையிருப்பில்...

மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அதுதொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது எரிபொருள் விலை அதிகரிப்பே பேசுபொருளாகியுள்ளது. அத்துடன் மின்சாரம் துண்டிக்கப்படுவதும் அதில் உள்ளடங்கியுள்ளது. எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தாலும் உலக சந்தையில் எரிபொருளில் விலை அதிகரிக்கும்போது இங்கும் எரிபொருள் விலைகளில் மாற்றங்களை மேற்கொள்ளவே நேரும். எமது நாட்டில் 2015 இல் நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியமைத்தபோது, பெரும் பொருளாதார நெருக்கடிகள் காணப்படவில்லை. எனினும் அந்த அரசாங்கத்தின் காலத்தில் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் இடம்பெற்றதும் நெருக்கடிகள் ஆரம்பித்தன. அதனையடுத்து சுற்றுலா பயணிகளின் வருகை தடைப்பட்டது. வெளிநாட்டு உதவிகள் நிறுத்தப்பட்டன. அத்துடன் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேரடியாக எரிபொருள் கொள்வனவு செய்யும் முறைமையை மாற்றியது. பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது 190, 180, 85 என நீண்டகால கடனுடன் எரிபொருளைப் பெற்றுக் கொண்டது. அந்த அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ள எரிபொருளுக்கான பாரியளவு நிதியை தற்போது நாம் செலுத்தவேண்டியுள்ளது.

அதேபோன்று உலகில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக எரிபொருளை கடனுக்கு வழங்கும் முன்னைய முறைமை மாற்றப்பட்டுள்ளது. நாம் மிக நெருக்கடியான நிலைக்கு முகம் கொடுத்து வருகின்றோம். (ஸ)

## அமைச்சு வாகனம், உத்தியோபூர்வ...

திரும்ப ஒப்படைத்ததாக வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தான், பயன்படுத்தி வந்த இரண்டு வாகனங்கள் மற்றும் உத்தியோகபூர்வ வீட்டையும் அமைச்சின் செயலாளரிடம் கையளித்ததாகவும் தனது பயணங்களுக்காக சகோதரரின் வாகனத்தையோ அல்லது நெருக்கமானவர்களிடம் வாகனம் ஒன்றை பெற்றுக்கொண்டு பயன்படுத்த போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

"பொது மக்களுக்கு செய்ய வேண்டிய பணிகளுக்காக தொடர்ந்தும் குரல் கொடுக்க வேண்டும் என்பதால், அமைச்சு பணிகளில் இருந்து விலகிக் கொண்டேன்"

"எனினும் அமைச்சு பதவியில் இருந்து விலகுவது பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை"எனவும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

விமல் வீரவங்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோரை அமைச்சு பதவிகளில் இருந்து நீக்க ஜனாதிபதி அண்மையில் எடுத்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து, அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, அமைச்சு பணிகளில் இருந்து விலகிக்கொண்டதுடன் அமைச்சரவைக் கூட்டங்களிலும் கலந்துக்கொள்வதில்லை என தீர்மானித்து இருந்தார்.

அமைச்சரின் சார்பின் அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் சரத் ரணசிங்க இவற்றை நேற்று கையளித்தார். (பா)

## நல்லிணக்கத்திற்கு எதிராக கருத்து...

நேற்று உத்தரவிட்டார்.

ஞானசார தேரர் நேற்று நீதிமன்றில் ஆஜராகியிருந்த நிலையில் விசாரணைக்கான திகதி நிர்ணயிக்கப்பட்டது.

அவருக்கு எதிரான வழக்கு குற்றவியல் சட்டத்தின் 291 (பி) பிரிவிற்கு உட்பட்டது எனவும், நீதவான் நீதிமன்றத்தின் மூலம் இதற்கு தீர்வு காண முடியும் எனவும் ஞானசார தேரரின் சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதன்படி, சட்டமா அதிபருடன் கலந்துரையாடி வழக்கை குறுகிய காலத்தில் முடித்து வைப்பதற்கான சாத்தியக்கூறுகளை பரிசீலித்து வருவதால் வழக்கை ஒத்திவைக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்தார். (பா)

## சீனாவில் மீண்டும் வேகமெடுக்கும்...

வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து உலக நாடுகள் அனைத்திலும் பரவிய இந்த வைரஸ் கடும் பாதிப்புகளை ஏற்படுத்தியது.

கொரோனா வைரசை கட்டுப்படுத்த உலக நாடுகள் தடுப்பூசிகளை தயாரித்து மக்கள் அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளில் இறங்கின. இருப்பினும் கொரோனா வைரஸ் பல்வேறு வகைகளில் உருமாற்றமடைந்து மக்களை அச்சுறுத்தி கொண்டே இருந்தது. கடந்த சில மாதங்களாக உலக நாடுகள் முழுவதிலும் கொரோனா தொற்றின் பாதிப்பு வெகுவேகமாக சரிந்து வருகிறது. இதனால் மக்கள் நிம்மதி பெருமூச்சு விட்டு வருகின்றனர். இந்நிலையில், கொரோனா வைரஸ் உருவான சீனாவில் மீண்டும் புதிய வகை வைரஸ் வேகமாக பரவ தொடங்கியுள்ளது. நேற்றுக் காலை நிலவரப்படி சீனாவில் புதிதாக 3,400 பேர் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 02 வருடங்களாக குறைந்திருந்த தொற்று தற்போது உயர தொடங்கி இருப்பது அந்த நாட்டு மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக ஜிலின் மாகாணத்தில் 500க்கும் அதிகமாமோனர் பாதிக்கப்பட்டுள்ளனர். தொற்றுப் பரவல் மீண்டும் அதிகரித்ததை அடுத்து, அந்நாட்டு அரசு பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. கொரோனா பரவல் அதிகரிக்கும் இடங்களில் மட்டும் ஊரடங்கு கட்டுப்பாடுகளை அமுல் படுத்த உள்ளூர் நிர்வாகங்களுக்கு சீன அரசு உத்தரவிட்டு வருகிறது.

கொரோனா பரவல் அதிகமுள்ள ஷாங்காய் மாகாணத்திலுள்ள யூசெங், ஜில்லின் மாகாணத்திலுள்ள சாங்சுன் ஆகிய நகரங்களில் முழு முடக்கம் அமல்படுத்தப்பட்டுள்ளது. அங்கு பள்ளி, கல்லூரிகள், தொழில் நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளது. பொதுமக்கள் வெளியில் நடமாடுவதற்கும் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர சுகாதாரத்துறையினர் வீடு, வீடாக சென்று மாதிரிகளை சேகரித்து வருகின்றனர்.

இதுகுறித்து ஜில்லின் மாகாண சுகாதார அதிகாரி ஒருவர் கூறுகையில், ஒமிக்ரோனின் மாறுபாட்டின் பரவலான இந்த வைரஸ் மிக வேகமாக பரவுகிறது. ஆரம்ப கட்டத்தில் இதனை கண்டறிவது மிகவும் கடினமாக உள்ளது என்றார்.

உலக நாடுகள் அனைத்தும் தற்போது தான் மெல்ல, மெல்ல கொரோனாவிலிருந்து விடுபட்டு பொருளாதாரத்தை மீட்டெடுத்து வருவதுடன், சீனாவில் மீண்டும் புதிதாக பரவ தொடங்கியுள்ள வைரஸ் உலக நாடுகள் இடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

## இலங்கையில் முதலீடு செய்ய...

மூலமான நேரடிக்கலந்துரையாடல் நிகழ்வில் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே, வடமாகாண ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வடக்கின் அபிவிருத்தி முதலீடுகள் உள்ளிட்ட சிக்கல்கள் தொடர்பில், பல்வேறு கேள்விகள்எழுப்பப்பட்டன. அதற்கு பதிலளித்த அவர்: பிரதமர் அலுவலக அதிகாரிகளுடன் விஷேட பேச்சுவார்த்தையொன்று அது தொடர்பில் இன்று நடைபெறுவதாகவும் குறிப்பிட்டார். எவ்வாறாயினும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது எவ்வித வேறுபாடுமின்றி அனைவருக்கும் அதற்கான வாய்ப்புகளும் வசதிகளும் பெற்றுக் கொடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள வாக்குறுதிகள் வடக்கு, தெற்கு என எந்த பாரபட்சமுமின்றி அனைவருக்கும் சமமாகப் பெற்றுக்கொடுக்கப்படும். அதில் எந்த வேறுபாடுகளுக்கும் இடம் கிடையாதென்றும் அவர் தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வட மாகாணத்தில் 40,000 அரச ஊழியர்கள் உள்ளனர்.

அரச ஊழியர்கள் அரசாங்கத்தின் சேவைகளை மக்களுக்கு முறையாக கிடைக்கச் செய்து அரசாங்கம் மீதான நம்பிக்கையை மேம்படுத்துவதற்காகவே அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றன. எனினும் சில குறைபாடுகள் உள்ளன. வடக்கில் கல்வி சுகாதாரம், மீன்பிடி, விவசாயம் போன்ற துறைகளில் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் அவற்றில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் ஆளுநர் என்ற வகையில் மக்களிடம் நேரடியான கலந்துரையாடலை மேற்கொண்டு அவர் அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றோம். (ஸ)

## கிரிக்கெட் போட்டியை கண்டு...

கண்டெடுக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயர்தரம் கற்கும் மாணவன் ஒருவரின் சடலமே இவ்வாறு கண்டெடுக்கப்பட்டதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொகவந்தலாவை - செல்வகந்தை பகுதியைச் சேர்ந்த 18 வயதான பாரதிதர்ஷன் என்ற மாணவன்

பொகவந்தலாவை - சென்மேரீஸ் மத்திய கல்லூரி பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கிரிக்கெட் சுற்று போட்டியை கண்டுகளித்து விட்டு வீடு திரும்பியபோது, காணாமல் போயுள்ளார்.

வெளியில் சென்ற மாணவனை நீண்ட நேரம் காணவில்லையென உறவினர்கள் தேடியபோது, மாணவனின் சடலம் கிணறொன்றில் கிடப்பதை உறவினர்கள் கண்டுள்ளனர்.

இதனையடுத்து சடலம் மீட்கப்பட்டு பொகவந்தலாவை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவன் உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை, சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







தினகரன்
THINAKARAN
35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் பங்குனி மாதம் 01ம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1443 ஷஃபான் பிறை 11

### குறள் தரும் சிந்தனை



இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை
வாயின் அதுவொப்பது இல்

ஒருவரிடம், மறவாமை என்னும் பண்பு தவறாமல் பொருந்தியிருக்குமேயானால், அதைவிட அவருக்கு நன்மைதரக்கூடியது வேறு எதுவும் இருக்க முடியாது.

## ஒன்பது தசாப்த காலம் தளராத மக்கள் பணியில் தினகரன்

இலங்கையின் முன்னணி தமிழ் தேசியப் பத்திரிகையாக விளங்கும் 'தினகரன்' தனது 90 வது அகவையில் இன்று பெருமையுடன் தடம்பதிக்கின்றது. இலங்கை பிரித்தானிய காலனித்துவத்திற்கு உள்ளாகி இருந்த இறுதிக் காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகை தினகரன். இந்நாட்டில் முன்னெடுக்கப்பட்ட சுதந்திரப் போராட்டம் தொடர்பான செய்திகள், தகவல்களையும் சுதந்திரத்தின் தேவை மற்றும் முக்கியத்துவத்தையும் தமிழ் பேசும் மக்களுக்கு கொண்டு செல்வதையும் அவை தொடர்பிலான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதையும் பிரதான நோக்காகக் கொண்டு 1932.03.15 ஆம் திகதி தினகரன் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நாட்டின் அச்சு ஊடகத் துறையை ஒழுங்கமைத்து இத்துறை தொடர்பில் நாட்டில் நம்பிக்கையையும் புதிய எதிர்பார்ப்பையும் உருவாக்கிய அமரர் டி.ஆர். விஜேவர்தன அவர்கள் இப்பத்திரிகையை ஆரம்பித்தார். அதுவும் தெற்காசியாவின் செய்திப் பத்திரிகை வெளியீட்டுத் துறையின் மிகப் பெரிய நிறுவனங்களில் ஒன்றாக விளங்கிக் கொண்டிருக்கும் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் ஊடாக இப்பத்திரிகை வெளியிடப்பட்டது.

இந்நாட்டின் தமிழ் பேசும் மக்களை இலக்காகக் கொண்டு இப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அதன் ஆரம்ப கால வெளியீடுகளில் தமிழக எழுத்தாளர்கள்தான் அதிகம் இடம்பிடித்திருந்தனர். இதன் விளைவாக தினகரனின் மொழிநடை, வசன அமைப்பு மற்றும் ஆக்கங்களில் தமிழக மண்வாசனையே பெரிதும் வீசியது. இதற்கு தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் பத்திரிகை ஆசிரியர்களாக இருந்ததும் காரணமாக அமைந்தது. இந்த நிலையில் டி.ஆர் விஜேவர்தன அவர்கள், 'தினகரனில் உள்நாட்டு எழுத்தாளர்களுக்கு அதிகம் இடமளிக்குமாறும் இந்நாட்டு தமிழ் பேசும் மக்களின் மண்வாசனையைப் பிரதிபலிக்கக் கூடிய வகையில் இப்பத்திரிகை மிளர வழி செய்யுமாறும்' ஆசிரியர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்நிலையில் தினகரனில் உள்நாட்டு எழுத்தாளர்களுக்கு அதிகம் இடமளிக்கப்பட்டது. அதன் பயனாகச் சொற்ப காலத்தில் தினகரன் இந்நாட்டு தமிழ்பேசும் மக்களின் மண்வாசனை வீசும் பத்திரிகையானது. இதன் ஊடாக 1940 களாகும் போது நாட்டின் தமிழ்ப் பத்திரிகைத் துறையில் முன்னேற்றகரமான கொள்கையையும் தேசிய பார்வையையும் முன்னெடுக்கும் பத்திரிகையானது தினகரன்.

அதேநேரம் இந்நாட்டுக்கென தேசிய தமிழ் கலை இலக்கியத்தை உருவாக்கிய பெருமையையும் தினகரனே கொண்டிருக்கின்றது. அத்தோடு நாடக இலக்கிய வளர்ச்சிக்கும் இப்பத்திரிகை அதிக இடமளித்துள்ளது. இவ்வாறான கட்டத்தில் லேக் ஹவுஸ் நிறுவனம் 1973 இல் அரசுடைமையாக்கப்பட்டது. ஆன போதிலும் தனது தேசியப் பார்வையுடன் தினகரன் தனது பயணத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது.

இந்நாட்டின் தமிழ் பேசும் புத்திஜீவிகள், கல்விமான்கள் மற்றும் எழுத்தாளர்களும் மாத்திரமல்லாமல் வாசகர்களும் ஆதரவாளர்களும் விளம்பரதாரர்களும் இப்பத்திரிகைக்கு அளித்து வரும் பங்களிப்புகள் என்றும் மெச்சிப் பாராட்டத்தக்கவையாகும்.

அதேநேரம் உள்நாட்டில் கலை, இலக்கியவாதிகளும், எழுத்தாளர்களும், ஊடகவியலாளர்களும் உருவாவதற்கான முக்கிய களமாக அமைந்துள்ளது தினகரன். ஆரம்ப காலம் முதல் செய்திகளுக்கு அப்பால் கட்டுரை இலக்கியத்திற்கு முக்கியத்துவம் அளித்து வரும் இப்பத்திரிகை, கவிதை இலக்கியத்திற்கும் உரிய இடமளிக்கத் தவறியதில்லை. தினகரனில் வெளியான கட்டுரைகள், கவிதைகள், சிறுதைகள் உள்ளிட்ட நவீன இலக்கியங்கள் பல நூல் வடிவில் வெளியாகியுள்ளன. அத்தோடு கடந்த இரு தசாப்த காலப்பகுதியில் தினகரனில் வெளியான பல கட்டுரைகள் ஜனாதிபதி விருது உள்ளிட்ட பல தேசிய விருதுகளை வென்றுள்ளன.

இவ்வாறு இந்நாட்டின் கலை, இலக்கியம் மற்றும் வெகுஜன ஊடகத் துறையின் மேம்பாட்டுக்கு அளப்பரிய பங்களிப்பை நலகிவரும் தினகரன், ஊடகவியலாளர்களைப் பயிற்றுவிக்கும் களமாகவும் திகழ்கின்றது. இந்நாட்டில் ஆயிரக்கணக்கான எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், இலக்கியவாதிகளை உருவாக்கிய பெருமையையும் தன்னகத்தே கொண்டுள்ள இப்பத்திரிகை, எழுத்தாளர்களும் ஊடகவியலாளர்களும் உருவாவதற்கான களமாகவும் தொடர்ந்து விளங்கி வருகின்றது.

இலங்கை பத்திரிகைத் துறை வரலாற்றில் குறிப்பாக தமிழ்ப் பத்திரிகை வரலாற்றில் அழியாத்தடம் பதித்து விளங்கும் இப்பத்திரிகை அதன் வாசகர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் மாத்திரமல்லாமல் முழுநாட்டுக்கும் பெருமை சேர்க்கும் வகையில் 90 வது அகவையில் பிரவேசிக்கின்றது. அயராது மக்கள் சேவையில் ஈடுபடும் இப்பத்திரிகை இன்னும் பல தசாப்த காலம் நீடித்து நிலைக்கக் கூடிய உறுதியுடன் வெற்றிப் பயணத்தைத் தொடர்கின்றது.

editor.tkn@lakehouse.lk

# சமூகநலன் குறிக்கோளிலிருந்து எக்காலமும் தடம்புரளாத இலட்சியப் பத்திரிகை தினகரன்

தினகரன் THINAKARAN

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

## வெற்றிப் பயணத்தின் 90 ஆவது ஆண்டு

'இப்பத்திரிகை யாருக்காகப் பிரசுரம் செய்யப்படுகிறதோ அவர்கள் எம் மீது வைக்கும் நம்பிக்கைப் பொறுப்புக்கு நாம் பாத்திரமாயிருப்பதற்கு மனப்பூர்வமாய் முயலுவோம். இலங்கையிலேனும் வேறெந்த நாட்டிலேனும் உள்ள கட்சியாளர்களில் எவராவது ஒரு கட்சியினரின் முகமனைப் பெறுவது எமது நோக்கமல்ல. எமது பத்திரிகை கட்சி பேதங்களுக்கு அப்பாற்பட்டதாகும். எவராவது ஒருவருக்கு மாத்திரம் பணியாற்றுவதற்கு அன்றி ஏதாவது விசேட உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இது தோன்றியதன்று. தமிழ் பாஷையைப் பேசும் மக்கள் எவரெவரோ அவரவர்களின் நலவுரிமைகளைப் பாதுகாப்பதே இப்பத்திரிகையின் பெரும் பணியாகும். ஆகவே எல்லோருக்கும் பொதுவாக நன்மை பயக்கத்தக்க நீதியான வழியில் நடப்பதே எமது நோக்கம்'.

1932ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி ஏரிக்கரையிலிருந்து வெளிவந்த தினகரனின் ஆசிரியத் தலையங்கத்தின் ஒரு பகுதி இது. இத்தலையங்கத்தின் மூலம் தினகரனின் இலக்கினையும் போக்கினையும் நாம் கண்டுகொள்ள முடியும். சுமார் 90 வருடங்களைக் கடந்தும் இப்போக்கிலிருந்து தினகரன் தடம் புரளவில்லை என்றே சொல்ல வேண்டும். அவ்வப்போது அரசாங்கக் கட்சிகளின் ஆக்கிரமிப்பிற்குட்பட்ட போதும் தினகரன் இனரீதியாக மக்களைப் பிரிப்பதற்கு துணைபோகவில்லை.

இந்த தேசத்தின் நலன்விரும்பிகள் யாவரும் வாசிக்கக் கூடிய பத்திரிகையாகவே அது என்றும் திகழ்ந்தது.

இலங்கையில் தமிழ் பேசும் சமூகங்களான தமிழர்களும், முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் என்றும் இப்பத்திரிகையை நேசித்து வருகின்றனர்.



அன்று ஒரு காலம் இருந்தது: திங்கட்கிழமை 'இந்துமஞ்சரி'யுடன் அந்த வாரப் பத்திரிகைத் தொடங்கும். செவ்வாயன்று 'சிறுவர் உலகம்', புதன்கிழமை 'கல்வி அரங்கு', வியாழக்கிழமை 'இதய கோலங்கள்', வெள்ளியன்று 'ஆலமுல் இஸ்லாம்', சனிக்கிழமை 'கிறிஸ்தவ மஞ்சரி', ஞாயிற்றுக்கிழமை வாரமஞ்சரியாகவும் தினகரன் வெளிவந்தது.

இந்த பிரதிபலிப்புடனேயே என்றும் தினகரன் தனது கருத்துகளை வெளியிட்டது.

அதனோடு ஈழத்து அரசியலை தேசிய நலனோடு பிரதிபலிப்பதும் கல்வி, சமூக, பொருளாதார நலன்களுக்காக பாடுபடுவதும் தினகரனின் நோக்காக இருந்தது. எந்தச் சந்தர்ப்பத்திலும் தினகரன் சமூக நலன் தொடர்பான தனது குறிக்கோளை விட்டுக் கொடுக்கவில்லை. இன்றும் அதேபாணியில் தொடர்ச்சியாக இயங்கிக் கொண்டு வருகிறது. ஒரு நல்ல பத்திரிகை எல்லா விதமான வாசகர்களுக்கும் தீனி போடும். அப்போதுதான் அப்பத்திரிகை எல்லோராலும் விரும்பப்படுவதாகவும் அமையும்.

காத்திரமான ஒரு பத்திரிகையின் உள்ளடக்கத்தில் அரசியல் செய்திகள் முக்கியத்துவம் பெறுவது போல இலக்கிய விடயங்களும் முக்கியத்துவம் பெறுவது உண்டு. அவ்வகையில் தினகரன் ஈழத்து இலக்கிய வளர்ச்சிக்காக ஆக்கபூர்வமான பல பணிகளை செய்திருக்கிறது. அதனூடாக ஒரு இலக்கிய பட்டாளத்தையே உருவாக்கியுள்ளது. அதேபோல நல்ல மாணவர் சமூகத்தையும் நல்ல வாசகர்களையும் தினகரன் அக்காலத்தில் சம்பாதித்துக் கொண்டது.

### இலங்கையில் தமிழ்பேசும் மக்கள் மத்தியில் வாசிப்புப் புரட்சியை முதன் முதலில் ஏற்படுத்திய தேசிய நாளிதழ்

தினகரன் வரலாற்றில் கைலாசபதியின் காலம் பொற்காலமாகத் திகழ்ந்தது. பல இலக்கியக்காரர்களை அவர் அறிமுகப்படுத்தினார். இலக்கியத்தின் வளர்ச்சிக்கு அவர் மிகப் பெரும் பங்காற்றினார். ஈழத்து இலக்கியத்தில் மரபும் நவீனமும் குறித்த விவாதங்களை தொடக்கி வைத்தார்கள். இதில் சி. தில்லைநாதனின் பங்கு முக்கியமானது.

இவ்வாறு இலக்கியக்காரர்களுக்கும் பத்திரிகைகளுக்கும் அக்காலத்தில் மிக நெருங்கிய தொடர்பு இருந்தது. அப்பத்திரிகைகள் காத்திரமான இலக்கிய ஆக்கங்களுக்கு வழிவகுத்தன. பின்னர் அந்நிலைமை மாறியது. ஞாயிறு இதழில் வெளிவந்த உமா வரதராஜனின் தயாரிப்பிலான 'பிரதிபிம்பம்' பகுதி மிக காத்திரமான இலக்கிய அறிமுகத்தை வாசகர்களுக்கு வழங்கியது. இவ்வாறு பத்திரிகைகளுக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் இடையே மிக நெருக்கமான தொடர்பு இருக்கிறது. இதனை இன்னும் பயன் உடையதாக மாற்றவேண்டும்.

### ஏரிக்கரையிலிருந்து வெற்றியுடன் தொடர்ந்தும் இசைத்துக் கொண்டிருக்கும் ஓர் இனிய கீதம்

இன்று பொதுவாக வாசிப்பு ஆர்வம் சகல தரப்பினரிடமும் குறைந்திருக்கிறது. இந்த ஆர்வத்தை மீள ஏற்படுத்துவதில் பத்திரிகைகளுக்கு பெரும் பங்கு இருக்கிறது. பத்திரிகைகள் மாத்திரமன்றி அந்த முயற்சியை ஆசிரியர் சமூகமும் மேற்கொள்ள வேண்டும். வகுப்பறைகளுக்கு பத்திரிகைகள் கொண்டு செல்லப்பட வேண்டும். அதேநேரம் வகுப்பறைகளுக்கு கொண்டு செல்லப்படக் கூடிய பத்திரிகைகளாகவும் அவை இருக்க வேண்டும். இந்த வாசிப்புப் புரட்சியை நாம் ஏற்படுத்த வேண்டும். ஒரு காலத்தில் இத்தகைய பணியையும் தினகரன் நிறைவேற்றியது.



றமீஸ் அப்துல்லா...
பேராசிரியர்
(தென்கிழக்கு பல்கலைக்கழகம்)

சிறுவர்கள், இளைஞர்கள், பெண்கள் முதலானோரும் சமூகத்தின் தனித்துவமான முக்கிய அங்கமாவார்கள். இவர்களை பிரதிநிதித்துவப்படுத்துகிற பணியையும் பத்திரிகை நிறைவேற்ற வேண்டும். இந்த பிரதிபலிப்பும் தினகரனிடம் எப்போதுமிருந்து வந்திருக்கிறது. இதனை காத்திரமிக்கதாக மாற்றுகின்ற போது வாசகர்களின் எல்லை இன்னும் விரிவடையும்.

இவ்வாறு 1930களில் ஏரிக்கரையிலிருந்து வெளிவந்த இந்த கீதம் நூற்றாண்டை எட்டப் போகும் இவ்வேளையிலும் இன்னும் தொடர்ந்து இசைத்துக் கொண்டே இருக்கிறது.

அன்றிலிருந்து இன்று வரை ஆயிரக்கணக்கானவர்கள் இதனால் பயன்பெற்றுக் கொண்டே வந்திருக்கின்றனர். முன்னமே குறிப்பிட்டது போல பல தரப்பினரையும் தினகரன் கவர்ந்திருக்கிறது. இந்த கவர்ச்சியுடன் இன்னும் நீண்ட காலம் தினகரன் பயணிக்க வேண்டும். இடையிடையே வந்து சேரும் சோதனைகளைக் கடந்து இந்த பயணம் காத்திரமிக்கதாக அமைய வேண்டும்.

# இலங்கையில் திறமையான ICT துறையாளர்களை உருவாக்கும் முயற்சியில் முதலாவது காலடி

### மொரட்டுவை பல்கலைக்கழகம், Dhammika & Priscilla Perera அறக்கட்டளை புரிந்துணர்வு உடன்படிக்கை

மொரட்டுவை பல்கலைக்கழகம் (UoM) மற்றும் *Dhammika & Priscilla Perera* அறக்கட்டளை (DP Foundation) இணைந்து கடந்த ஜனவரி 04 ஆம் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கையில் (MoU) கையெழுத்திட்டதன் மூலம் இலங்கையின் ICT கல்வியில் ஒரு முக்கிய மைல்கல்லான, திறந்த ஒன்லைன் ICT பாடநெறியான *development and delivery* (வளர்ச்சி மற்றும் விநியோகம்) இனை கற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.



இலங்கையிலுள்ள ICT ஆர்வலர்களுக்கு இலவச கற்றல் மற்றும் ICT அறிவிற்கான வரையறையற்ற அணுகலுக்கான வாய்ப்புகளை வழங்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். DP அறக்கட்டளையானது, அதன் DP Education பிரிவின் ஊடாக, மொரட்டுவை பல்கலைக்கழகத்திற்குத் தேவையான நிதியுதவி, உட்கட்டமைப்பு மற்றும் மனித வளங்களை ஒன்லைன் பாடநெறிக்கு வழங்குவதன் மூலம் இந்த புதிய முயற்சிக்கு உதவும். தற்போது, *'University of Moratuwa BIT Online'* எனும் YouTube சேனலானது, *Mathematics for IT, Web Programming, Database Management Systems, ICT Applications* போன்ற பாடங்களை கற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக செயற்பாட்டில் உள்ளது.

தம்மிக மற்றும் பிரிசில்லா பெரேராவின் ஒரு பரோபகார முயற்சியான DP அறக்கட்டளையானது, அறிவு சார்ந்த சமூகத்தை உருவாக்குவதற்கும், ஒவ்வொரு இலங்கையரினதும் திறன்களை மேம்படுத்துவதற்குமாக, இலங்கையின் மிகப் பெரிய இலவச ஒன்லைன் கற்றல் தளமான DP Education இனை உருவாக்கியுள்ளது.

DP Education பற்றிய மேலதிக விபரங்களுக்கு: https://www.dpeducation.lk

# செய்நன்றி மறக்காமல் இந்தியாவுக்கு எரிபொருள் உதவி வழங்கும் ரஷ்யா

இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை உயரும் என்ற அச்சம் நிலவி வரும் நிலையில் ரஷ்யா இந்தியாவிற்கு உதவ முன்வந்துள்ளது. உக்ரைன்_ ரஷ்யா இடையிலான போர் காரணமாக உலகம் முழுவதும் மசகு எண்ணெய் விலை உயர்ந்து வருகிறது. போர் காரணமாக ரஷ்யாவில் இருந்து மசகு எண்ணெயை ஏற்றுமதி செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அமெரிக்கா உள்ளிட்ட பெரும்பாலான நாடுகளுக்கு ரஷ்யாதான் மசகு எண்ணெய் அனுப்பி வந்தது.

ஆனால் போர் காரணமாக மசகு எண்ணெயை ரஷ்யாவிடம் இருந்து இறக்குமதி செய்ய அமெரிக்கா மறுத்துள்ளது. அதேபோல் ரஷ்யா மீதும் பல்வேறு பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டு இருக்கின்றன. இந்த பொருளாதாரத் தடைகள் காரணமாக ரஷ்யாவிடம் பணம் கொடுத்து எண்ணெய் இறக்குமதி செய்வதும் சிக்கலாகி உள்ளது. இதனால் அமெரிக்கா மட்டுமின்றி மற்ற ஐரோப்பா நாடுகளிலும் மசகு எண்ணெய் தட்டுப்பாடு காரணமாக பெட்ரோல், டீசல் விலை உயர்ந்துள்ளது.

இந்தியாவிலும் மசகு எண்ணெய் விலை உயர்வால் பெட்ரோல் 100_ 110 என்ற அளவில் விற்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் இந்தியாவிற்கு ரஷ்யா உதவ முன்வந்துள்ளது. அதன்படி இந்தியாவிற்கு தள்ளுபடி விலையில் மசகு எண்ணெய் வழங்க ரஷ்யா முன்வந்துள்ளது. அதேபோல் மற்ற சில பொருட்களையும் தள்ளுபடி விலையில் வழங்க ரஷ்யா முன்வந்துள்ளதாக கூறப்படுகிறது. இந்தியா தனது எண்ணெய்த் தேவையில் 80 சதவீதத்தை வெளிநாடுகளில் இருந்து வாங்குகிறது. இதில் 3 சதவீதம் வரை மட்டுமே ரஷ்யாவிடம் இருந்து வாங்குகிறது. ஆனால் கடந்த இரண்டு வருடத்தில் இந்தியாவில் எண்ணெய் தேவை அதிகரிப்பால் பெட்ரோல், டீசல் விலை இந்தியாவில் 40 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. தற்போது மேலும் பெட்ரோல் டீசல் விலை உயரலாம் என்ற அச்சம் நிலவும் நிலையில்தான், தள்ளுபடி விலையில் மசகு எண்ணெயை வழங்க ரஷ்யா முடிவு செய்துள்ளது. ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் உள்ளிட்ட எந்த மேடையிலும் ரஷ்யாவிற்கு எதிராக இந்தியா வாக்களிக்கவில்லை. ரஷ்யாவை இந்தியா நேரடியாக எதிர்க்கவில்லை. ரஷ்யாவிற்கு இந்தியா செய்த மறைமுக உதவியாகவே இது பார்க்கப்பட்டது.

இந்த நிலையில்தான் இந்தியாவிற்கு ரஷ்யா கைமாறு செய்ய முன்வந்துள்ளது. ரஷ்யாவின் தள்ளுபடியால் பெட்ரோல், டீசல் விலை இந்தியாவில் குறையும் வாய்ப்புகள் உள்ளன. அமெரிக்காவின் பொருளாதாரத் தடைக்கு அஞ்சாமல் இந்தியா துணிச்சல்களாக இந்த முடிவை எடுத்துள்ளது.

தினகரன்
THINAKARAN

90 ANNIVERSARY 1932 - 2022

# இலங்கையில் தமிழ் வளர்ச்சியில் தினகரன் ஆற்றிய பெரும் பங்கு

## சவால்களைக் கடந்து, 90 ஆண்டு கால தடையற்ற வெற்றிப் பயணம்

கலாசாரம், பொருளாதாரம், அரசியல் துறைகளில் மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்த காலம் 1930ஆம் ஆண்டாகும். அக்காலத்தில் தமிழ்த் தலைவர்கள் பொதுமக்கள் மத்தியில் தேசிய கலாசாரம், பொருளாதாரம் மேன்மையுறச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துக்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராடிக் கொண்டிருந்தார்கள்.

ஏககாலத்தில் இந்தியாவிலும் இதே போராட்டங்கள் நடைபெற்றன. செய்திகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும் என்ற நிலைமை தோன்றியது. இக்காலத்தின் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற நிலையில் 1932 இல் 'தினகரன்' பத்திரிகை வெளிவந்தது. இதன் உரிமையாளராக இருந்த அமரர் டி.ஆர். விஜேவர்தனவுக்கு இந்திய விடுதலை இயக்கங்கள் போன்று இலங்கையிலும் இயக்கங்கள் தோற்றம் பெற வேண்டும் என்ற நோக்கம் காணப்பட்டது.






இந்தியாவில் அக்காலத்தில் வெளிவந்து கொண்டிருந்த பாரதிதேவி, சுதேசமித்திரன் போன்ற பத்திரிகைகளின் செய்திகள் தினகரன் பத்திரிகையில் ஆரம்ப காலத்தில் இடம்பிடித்திருந்தன. சொற்பிரயோகம், மொழிநடை என்பன இந்தியப் பத்திரிகைகளைப் பின்பற்றியதாகக் காணப்பட்டன.

தினகரன் இலக்கியச் செல்நெறிகளை இயல்பாகக் கொண்டிருந்தது. கவிதை, கட்டுரை, கதைகளை வெளியிட்டு பல எழுத்தாளர்களை உருவாக்கியது. ஆய்வுத்துறை, பழந்தமிழ் இலக்கியம், மொழிபெயர்ப்புகள், இஸ்லாமிய இலக்கியம், நாட்டார் வழக்கியல், சமயச் செய்திகள், நாடகம், சினிமா விமர்சனம் என்று பல முகங்களுடன் சிறப்பாக வெளிவந்து கொண்டிருந்தது தினகரன்.

இந்தியத் தாக்கத்திற்கு உட்பட்டிருந்த தினகரன் காலம் செல்லச் செல்ல அதிலிருந்து விலகியது. 1930 களில் வீரகேசரி வெளிவந்திருந்தது. 1966 இல் தினபதி வெளிவந்திருந்தது. ஆனாலும் தினகரன் பத்திரிகையின் வளர்ச்சியை அப்பத்திரிகைகள் பாதிக்கவில்லை. இலங்கை அறிஞர்களான பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, சோ.இளமுருகன், நவாலியூர் சோமசுந்தரப் புலவர், பேராசிரியர் வி.செல்வநாயகம், பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை, மகாவித்துவான் சி.கணேசையர், பேராசிரியர் சு.வித்தியானந்தன், வித்துவான் வேந்தனார், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, எப்.எக்.சி.நடராஜா போன்ற பலர் எழுதிய கட்டுரைகள் விடயச் செறிவு மிக்கதாக தினகரனில் பிரசுரமாகின. அந்த ஆக்கங்கள் உரைநடை இலக்கியத் துறையில் புதிய பரிமாணத்தைத் தோற்றுவித்தன. இன்று 90ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் தினகரன் ததொடர்ந்தும் தலைநிமிர்ந்து நிற்கின்றது என்றால் பல பிரதம ஆசிரியர்களும், அறிஞர்களும், அபிமான வாசகர்களுமே அதற்குக் காரணமானவர்களாவர்.

நான் அறிந்த வகையில் பேராசிரியர் கைலாசபதி பிரதம ஆசிரியராக இருந்து கோலோச்சிய காலம் தினகரனின் பொற்காலம் என்று சொல்லலாம். இதன் பின்னர் பலர் ஆசிரியர்களாக இருந்துள்ளார்கள். கலாசூரி இ.சிவகுருநாதன் நீண்ட காலமாக பிரதம ஆசிரியராக இருந்து தினகரனை வளர்த்தெடுத்த பெருமைக்குரியவர். அதன் பின்னரும் பல ஆசிரியர்கள் சிறப்பாகச் செயலாற்றியிருக்கின்றார்கள்.

தற்போது தெ.செந்தில்வேலவர் தினகரன், வாரமஞ்சரி ஆகிய இரு பத்திரிகைகளின் பிரதம ஆசிரியராக இருந்து சிறப்பாக செயலாற்றி வருகின்றார்.

தினகரனில் புதிய புதிய அம்சங்களைக் காண முடிகின்றது. தமிழ் பேசும் மக்கள் மனம் கவர்ந்த தினகரன் தொடர்ந்தும் மென்மேலும் வளர்ந்து செல்ல வேண்டும். அது பல்லாயிரம் ஆண்டுகள் வெற்றியுடன் பயணம் செய்ய வேண்டும் என்று வாழ்த்துகின்றேன். வாழ்க தமிழ்.



**ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி...**
பொதுச்செயலாளர்,
கொழும்புத் தமிழ்ச் சங்கம்

# இலங்கை மக்களின் நலன்கள் மீது மிகுந்த அக்கறை கொண்ட சகோதர நாடு இந்தியா

## வடமாகாண மனிதாபிமான உதவித் திட்டம், யாழ்ப்பாணத்தில் செயற்கைக்கால் பொருத்தும் முகாம் அங்குரார்ப்பணம்

வடமாகாணத்திலுள்ள மீனவர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கான மனிதாபிமான உதவிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே அவர்களால் கடந்த 13ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்திய அரசாங்கத்தின் நன்கொடை உதவியின் கீழ் இந்த நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள 1200 குடும்பங்கள் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உணவுப் பொருட்கள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக் கொள்கின்றன. இந்நிலையில் இத்திட்டத்தின் அங்குரார்ப்பண வைபவத்தின் போது யாழ் மாவட்டத்திலுள்ள பயனாளிகளுக்கு இப்பொருட்கள் கையளிக்கப்பட்டிருந்தன. மாகாணத்தின் ஏனைய பகுதியிலுள்ள பயனாளிகளுக்கு எதிர்வரும் நாட்களில் இந்நிகழ்ச்சித் திட்டம் மூலம் பொருட்கள் விநியோகிக்கப்படவுள்ளன. இந்நிகழ்வில் உரை நிகழ்த்திய உயர் ஸ்தானிகர், இலங்கை மக்களின் நலன்கள் மீது மிகுந்த அக்கறை கொண்ட சகோதர நாடே இந்தியா என்று கோடிட்டுக் காட்டியதுடன், இவ்வாறான மனிதாபிமான உதவிகளை எதிர்காலத்திலும் இந்தியா தொடர்ந்து வழங்கும் எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் இரு நாடுகளினதும் மீனவ சமூகங்களால் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்தியா மற்றும் இலங்கை அரசாங்கங்கள் ஒன்றிணைந்து செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். பாரம்பரியங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டியதன் தேவை தொடர்பில் சுட்டிக்காட்டியிருந்த அவர், கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவில் இந்திய மீனவர்களும் ஏனைய யாத்திரிகர்களும் கலந்து கொள்வதற்கு வழிசமைத்தமைக்காக மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்ட இலங்கையின் தலைமைத்துவத்திற்கு நன்றியினையும் தெரிவித்திருந்தார்.

இதேவேளை இந்த மனிதாபிமான உதவித் திட்டத்தினை முன்னெடுத்த இந்திய அரசாங்கத்திற்கு நன்றியினை தெரிவித்த அமைச்சர் தேவானந்தா, அடுத்த வருடம் கச்சதீவு ஆலய திருவிழாவில் கலந்து கொள்ளும் இந்திய யாத்திரிகர்களின் எண்ணிக்கை ஆயிரங்களாக மாற்றமடைய வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.





செயற்கைக் கால்களை பொருத்துதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய உதவிகளை விசேட தேவையுடையோருக்கு வழங்கி வரும் உலகின் பாரிய அமைப்பான 'பகவான் மகாவீர் விக்லங் சகாயதா சமித்தியால்' நடத்தப்படும் செயற்கைக் கால் பொருத்தும் முகாமினையும் உயர் ஸ்தானிகர் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைத்தார்.

இந்திய அரசாங்கத்தின் பூரண ஆதரவுடன் நடைபெற்று வரும் இந்த முகாம் யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுவுடன் இணைந்து நடத்தப்படுகின்றது. இந்நிகழ்வில் யாழ் மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதனும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்.

ரணவிரு சேவா அதிகார சபையுடன் இணைந்து இந்திய அரசாங்கத்தின் அனுசரணையின் கீழ் கம்பஹாவில் பகவான் மகாவீர் விக்லங் சகாயதா சமித்தி அமைப்பினால் நடத்தப்பட்ட முகாமைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் இந்த செயற்கைக்கால் பொருத்தும் முகாம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.



கம்பஹாவில் நடைபெற்ற இந்த முகாமில் அதிகளவில் இலங்கை ஆயுதப் படைகளைச் சேர்ந்தவர்களுக்கு பல்வேறு சேவைகள் வழங்கப்பட்டிருந்தன. இதில் விசேடதேவையுடைய 500 க்கும் அதிகமானோருக்கு ஜெய்ப்பூர் கால் பொருத்தப்பட்டிருந்தது. 2010 மற்றும் 2011 ஆகிய ஆண்டுகளிலும் வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இந்திய அரசாங்கம் இரு முகாம்களை நடத்தியிருந்தமை நினைவில் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். இந்த முகாம்கள் மூலம் 2500 க்கும் அதிகமானோர் பயனடைந்திருந்தனர்.

இந்திய அரசாங்கத்தால் மக்களை இலக்காகக் கொண்டு இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி பங்குடைமை திட்டங்களின் கீழ் கவனம் செலுத்தப்படும் ஒரு பிராந்தியமாக வடமாகாணம் உள்ளது. வீடு, கல்வி, சுகாதாரம், வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி போன்ற நாளாந்த மனித வாழ்வின் பல்பரிமாணங்களையும் கொண்ட பல்வேறு திட்டங்கள் இங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் ஏனைய பல்வேறு திட்டங்களும் அமுலாக்கத்தின் பல்வேறு மட்டங்களில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 33 ஆவது வருட நிறைவை கொண்டாடும்

# அக்குறணை STUDY CENTRE

## (ஸ்டடி சென்ரர்) பாலர் பாடசாலை


தவிசாளர்
S.H.M.Minsar ACPM, AMA, DIB, DCM


பணிப்பாளர்
Alhaj A.M.M. Simsan JP


போசகர்
Al Haj S.M.M. Rilwan

## ஸ்டடி சென்டரின் (Study Centre) முன்பள்ளி கல்வியின் முன்னேற்றம் அளப்பரியது



அக்குறணை பிரதேசத்தில் இயங்கிவரும் ஸ்டடி சென்டர் (Study Centre) நிறுவனத்தினால் பத்திரிகை அனுபந்தத்துக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

முன்பள்ளி பாலர் பாடசாலைகள், பிள்ளைகளை பாடசாலைக்கு செல்வதற்கு தயார் செய்வதில் பெரும் பங்காற்றி வருகின்றன. அன்னை மடியில் கற்கும் முறைசாரா கல்வியிலிருந்து பாடசாலையின் முறைசார் கல்வி முறைக்கு காலடி எடுத்து வைப்பதற்குத் தேவையான அடிப்படைத் திறன்களையும், நற்பழக்க வழக்கங்களையும் ஏற்படுத்துவதில் முன்பள்ளி பாலர் பாடசாலைகளின் பங்கு அளப்பரியதாகும்.

இந்த வகையில், அக்குறணை எங்கும் பல்வேறு கிளைகளைக் கொண்டு, தொடர்ச்சியாக முப்பத்தி மூன்று (33) ஆண்டுகளாக இரண்டு தலைமுறைகளாக கல்வி சேவையை வழங்கி வரும் இந்நிறுவனத்தின் வளர்ச்சி பாராட்டத்தக்கது. இந்நிறுவனத்தை உருவாக்கி சிறந்த முறையில் வழிநடாத்தும் எனது பள்ளித் தோழர்களான S.H.M.மின்சார், A.M.M. சிம்சான் மற்றும் S.M.M. ரில்வான் ஆகியோர்கள் மற்றும் இவற்றில் கடமையாற்றிய மற்றும் கடமையாற்றும் ஆசிரியர்கள் இதன் வெற்றிக்கு முக்கிய காரணகர்த்தாக்கள் ஆவர்.

அத்துடன், இந்நிறுவனம் காலத்தின் தேவைக்கேற்ப தங்களது நிறுவனத்தின் கலைத்திட்டத்தை முறையாக வடிவமைத்து நடத்தி வருவதும் இதன் வளர்ச்சிக்கு ஒரு முக்கிய காரணியாகும். மாணவர்களின் அடிப்படை திறன்களையும் நல்ல பழக்க வழக்கங்களையும் விருத்தி செய்வதுடன் விளையாட்டுப்போட்டி, சுற்றுலா, கலை விழா என்பன இவர்களின் கலைத்திட்ட செயற்பாடுகளில் முக்கிய அம்சங்களாகும்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக புதிது புதிதாக பல பாலர் பாடசாலைகள் தோன்றி மறைந்து வரும் நிலையில், 33 வருடங்களாக தொடர்ந்து இந்நிறுவனம் நின்று நிலைப்பதற்கு, இப்பிரதேச மக்களின் அபிமானத்தையும், நம்பிக்கையையும் இந்நிறுவனம் பெற்று இருப்பதும், ஒரு முக்கிய காரணமாகும்.

தொடர்ந்தும் இப்பிரதேச பிள்ளைகளின், கல்வி முன்னேற்றத்தில் பாரிய பங்களிப்பை செலுத்த வேண்டுமென கேட்டுக் கொள்வதுடன், இந்நிறுவனம் மென்மேலும் வளர்ச்சி அடைய எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

**S.H.M. பாரிஸ் (SLEAS),**
**உதவிக் கல்விப் பணிப்பாளர்,**
**கலேவல வலயம்.**

1989ம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி அக்குறணையில் STUDY CENTRE (ஸ்டடி சென்ரர் ) பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு இவ்வருட 33 வது வருட சேவை நிறைவைக் கொண்டாடுகிறது.

அன்றைய காலக்கட்டத்தில் பாலர் பாடசாலை கல்வி முறையும் அதன் தேவையும் வெகுவாக உணரப்படாதிருந்த போதிலும் ஸ்டடி சென்றரின் பாலர் பாடசாலை அதன் சிறந்த நெறி முறையினால் எமது மக்கள் மத்தியில் வரவேற்பினையும், நன்மதிப்பையும் பெற்றது. பொது மக்களின் வரவேற்பினாலும் அவ்வப் பகுதி பிரதேச பெற்றோர்களின் வேண்டுகோளுக்கிணங்க அக்குறணையைச் சூழ உள்ள இருபது கிராமங்களை உள்ளடக்கியதாக அக்குறணைதுனுவில வீதி, புளுகொஹதென்னசாஹிரா பஸார், பானகமுவ, கசாவத்தை, பள்ளியகொட்டுவ, நீரெல்ல, மல்வானஹின்ன, அக்குறணைஏழாம் கட்டை, உக்கலை, தெலும்புகஹவத்தை, குருகொடை ஆகிய பிரதேசங்களில் பாலர் பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளதுடன், சம காலத்தில் நாநூற்றுக்கும் (400) மேற்பட்ட பாலகர்கள் கல்வியை மேற்கொண்டு வருகின்றனர். இது காலவரை சுமார் 11,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் எமது ஸ்டடி சென்றர் பாலர் பாடசாலைகளில் கல்வியை வெற்றிகரமாக பயின்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் இன்று அக்குறணையில் ஒவ்வொரு வருடமும் முதலாம் தரத்திற்குப் பாடசாலைகளில் அனுமதி பெறும் மாணவர்களில் கூடுதலான மாணவர்கள் எமது இஸ்டடி சென்றர் பாலர் பாடசாலைகளில் கல்வி கற்றவர்களாகவே இருக்கின்றார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இப்பாலர் பாடசாலைகள் STUDY CENTRE (ஸ்டடி சென்றர்) என்ற ஒரே பெயரின் கீழ் இயங்குவதனால் அவ்வப்பகுதி பாலர் பாடசாலைகள் அப்பிரதேசத்தின் பெயரைக்கொண்டே அழைக்கும் முறை இயல்பாகவே உருவானது.

ஒரு மனிதனுக்கு கல்வியுடன் ஒழுக்கம் மிக முக்கியமானதாகும். ஒழுக்கம் எனும் போது சமயம், கலாசாரம், பண்பாடு இவற்றுடன் இணைந்ததாகும். அதனை சிறு வயதில் கொடுப்பது மிக முக்கியமானதாகும். எனவே அந்த அடிப்படையில் சிறுவயது முதலே சமயத்துடன் பின்னிப்பிணைந்த கலாசார விழுமியங்களையும் எமது பாலர் பாடசாலைகள் வழங்கி வருகின்றன.

பாலர் பாடசாலை என்னும் போது அது கற்றலுக்கு மாணவ, மாணவிகளைத் தயார்படுத்தும் ஒரு இடம் என்பது நாம் தெரிந்த உண்மை. அந்த அடிப்படையில் நாம் கல்விக்கு அடிப்படையான பல்வேறு பழக்க வழக்கங்களையும் அவர்களுக்கு ஏற்படுத்தி வருகிறோம். வருடந்தோரும் விளையாட்டுப் போட்டி மற்றும் கலை நிகழ்வுகள், சமய தினங்கள் போன்றவற்றையும் நாம் மேற்கொண்டு அவர்களை ஆளுமைப் பண்புள்ளவர்களாக்க முயற்சி செய்கிறோம்.

பலரினதும் பேரபிமானம் பெற்ற எமது பாலர் பாடசாலைகளுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டி முற்றிலும் வினோதங்களும் நகைச் சுவைகளும் உள்ளடக்கிய போட்டி நிகழ்ச்சிகளாக அமைந்துள்ளது. அத்துடன் பாலர் பாடசாலை மாணவர்கள் அனைவரும் இவ்விரண்டு நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள வாய்ப்பு அளிக்கப்படுவதினாலும் ஒவ்வொரு மாணவருக்கும் பரிசு கிடைக்கும் வகையில் இப்போட்டி நிகழ்ச்சிகள் அமைக்கப்படுவதினாலும் இவ்விளையாட்டுப் போட்டியானது பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

எமது மாணவர் செயல் நூல் முற்றிலும் பாடங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அதனை முதலாம் தவணையின் இறுதிப் பகுதியில் வழங்கப்பட்டு வருகிறது. இச் செயல் நூல் மாணவர்களின் கற்கும் விருப்பத்தினை வளர்க்கிறது, விவேகமாகச் சிந்திக்க வைக்கிறது, உளச்சார்பினை அதிகரிக்கிறது அத்துடன் திறமையை வளர்க்கிறது.

இப்பாலர் பாடசாலைகள் அடிக்கடி எமது பணிப்பாளர் சபையின் மேற்பார்வைக்கு ஆளாகுவதனால் எமது கல்வித்திட்டம் குறையின்றி மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்ய முடிகிறது.

குறைந்த செலவில் நிறைந்த பயனை தமக்கு அண்மித்த பகுதியில் பெற்றுக் கொள்ள STUDY CENTRE பாலர் பாடசாலைகளை நாடுவோர் எண்ணிக்கைக்கு இத்துடன் உள்ள புகைப்படங்கள் ஒரு சான்று என்பதைக் கூறுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.


எம். சதுர்தீன் ...
மாத்தளை சுழற்சி நிருபர்

### உதவியாளர்கள்


H.M.Rikaz Mohamed


M.I.M Saadh (sanan)


Study Centre ஆசிரிய குழாம்


பானகமுவ பாலர் பாடசாலை மாணவர்கள்


கசாவத்தை பாலர் பாடசாலை மாணவர்கள் 01


பள்ளியகொடுவ பாலர் பாடசாலை மாணவர்கள்


அக்குறணை ஏழாம் கட்டை பாலர் பாடசாலை மாணவர்கள் 01


ஸாஹிரா பஸார் பாலர் பாடசாலை மாணவர்கள் -01


அக்குறணை ஏழாம் கட்டை பாலர் பாடசாலை மாணவர்கள்


குருகொடைபாலர் பாடசாலை மாணவர்கள் 01


மல்வானஹின்ன பாலர் பாடசாலை மாணவர்கள் 02


நீரெல்ல பாலர் பாடசாலை மாணவர்கள்


அக்குறணை துனுவில வீதி பாலர் பாடசாலை மாணவர்கள் 03


தெலும்புகஹவத்தை பாலர் பாடசாலை மாணவர்கள் 01


கசாவத்தை பாலர் பாடசாலை மாணவர்கள் -02


தெலும்புகஹவத்தை பாலர் பாடசாலை மாணவர்கள் 01


ஸாஹிரா பஸார் பாலர் பாடசாலை மாணவர்கள் -03


உக்கல பாலர் பாடசாலை மாணவர்கள்


மல்வானஹின்ன பாலர் பாடசாலை மாணவர்கள் 01


அக்குறணை துனுவில வீதி பாலர் பாடசாலை மாணவர்கள் 04


குருகொடைபாலர் பாடசாலை மாணவர்கள் 01


அக்குறணை துனுவில வீதி பாலர் பாடசாலை மாணவர்கள் 01


அக்குறணை துனுவில வீதி பாலர் பாடசாலை மாணவர்கள் 02

# சர்வதேச செய்திகள்

# அமைதிப் பேச்சுக்கு மத்தியிலும் உக்ரைனில் தொடர்ந்து தாக்குதல்

## தலைநகரை நெருங்குகிறது ரஷ்யா

உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வரும் நிலையில் இரு தரப்புக்கும் இடையே மற்றொரு சுற்றுப் பேச்சுவார்த்தை நேற்று இடம்பற்றது.

ரஷ்யப் படையினர் உக்ரைன் தலைநகர் கியேவை நெருங்கி இருப்பதோடு முற்றுகையில் உள்ள தெற்கு துறைமுக நகரான மரியுபோலில் ரஷ்யா தனது இடைவிடாத குண்டுவீச்சை நேற்றும் தொடர்ந்தது.

இந்நிலையில் இரு தரப்பு பிரதிநிதிகளும் நேற்று திங்கட்கிழமை வீடியோ கொன்பிரன்ஸ் வழியாக சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

“இந்த சிக்கலான போராட்டம் மிக்க பேச்சுவார்த்தையில் அமைதி மற்றும் பாதுகாப்புக்கான முடிவை எட்டுவதே எமது இலக்கு” என்று இந்த பேச்சுவார்த்தைக்கு முன்னதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமர் செலென்ஸ்கி தெரிவித்தார்.

இரு ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு ஒன்றை உறுதி செய்வதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதாகவும். மக்கள் அதற்காகவே காத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கு இடையே இதற்கு முன்னர் பல சுற்று பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றபோதும் போர் நிறுத்தம் ஒன்றை கொண்டுவருவதில் தோல்வி அடைந்திருப்பதோடு ரஷ்யா தனது தாக்குதல்களை தணிப்பதற்கான எந்த சமிக்ஞையும் தெரியவில்லை.

நேட்டோ அங்கத்துவ நாடான போலந்துக்கு அருகாமையில் உக்ரைனின் எல்லையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ரஷ்யா நடத்திய அபாயகரமான தாக்குதலில் 35 பேர் கொல்லப்பட்டு, மேலும் 130 பேர் காயமடைந்ததாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

மேற்கு நகரான ல்விவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலை அடுத்து வான் தடை வலயத்தை அமைக்கும்படி நோட்டோவை உக்ரைன் ஜனாதிபதி நேற்று மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

“எமது வானை நீங்கள் மூடாவிட்டால் ரஷ்ய ஏவுகணைகள் உங்களது நிலத்தில் நேட்டோ மக்களின் வீடுகளில் விழுவதில் காலமே போதுமானது” என்று செலென்ஸ் தனது வீடியோ உரை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய கூட்டணி உக்ரைனுக்கு நிதி மற்றும் இராணுவ உதவிகளை



வழங்குவதோடு ரஷ்யா மீது முன்னெப்போதும் இல்லாத தடைகளை விதித்து வருகிறது. ஆனால் உக்ரைன் போரில் நேரடியாக தலையிடுவதை அமெரிக்கா மற்றும் நேட்டோ நிராகரித்துள்ளது. நோட்டோ, ரஷ்யா உடன் போரிடுவது என்பது மூன்றாம் உலகப் போராக இருக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கூறி இருந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பைடன், பிரான்ஸ் ஜனாதிபதி எமானுவேல் மக்ரோனுடம் பேசினார். ரஷ்யா மீதான நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவது மற்றும் உக்ரைன் அரசு மற்றும் மக்களுக்கு உதவுவதற்கு இரு தலைவர்களும் உறுதி கொண்டதாக கூறப்பட்டுள்ளது.

### கருங்கடல் முடக்கம்

உக்ரைனை சர்வதேச கடல் வர்த்தகத்தில் இருந்து தனிமைப்படுத்தும் வகையில் கருங்கடற்கரையில் கடற்படை தடுப்பு ஒன்றை ரஷ்யா ஏற்படுத்தி இருப்பதாக பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட புதிய உளவு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

“ரஷ்யக் கடற்படைகள் உக்ரைன் எங்கும் இலக்குகள் மீது ஏவுகணை தாக்குதல்களை தொடர்ந்து நடத்தியுள்ளது.” என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

கியேவின் புறநகர் பகுதியில் இடம்பெற்ற புதிய மோதல்களில் அமெரிக்க ஊடகவியலாளர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். ரஷ்ய படையெடுப்புக்குப் பின் வெளிநாட்டு செய்தியாளர் ஒருவர் கொல்லப்படும் முதல் சம்பவம் இதுவாகும்.

இதேவேளை பேரழிவை சந்தித்திருக்கும் தெற்கு நகரான மரியுபோலுக்கு உதவிகளை அளிக்கும் முயற்சிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. அந்த நகர் மனிதாபிமான பேரழிவை சந்தித்திருப்பதாக உதவி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. நகரை நோக்கி பயணித்த மனிதாபிமான உதவிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமையும் திரும்பிச் சென்றுள்ளன. ரஷ்யா தனது தாக்குதல்களை நிறுத்தாததால் இந்த நிலை ஏற்பட்டதாக அதிகாரி ஒருவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

இடைவிடாத தாக்குதலுக்கு இலக்காகி இருக்கும் அந்த நகரில் மொத்தம் 2,187 பேர் கொல்லப்பட்டிருப்பதாக அந்த நகர சபை கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தது.

“உண்மையான இனப்படுகொலையில் ஈடுபட்டு எதிரிகள் நகரை பணயக்கைதியாக பிடித்து வைத்துள்ளனர்” என்று உக்ரைன் பாதுகாப்பு அமைச்சர் உலெக்சி ரெஸ்னிகோவ் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா படையெடுப்பின் ஆரம்பத்தில் ரஷ்ய இனத்தினர் அதிகம் வாழும் உக்ரைனின் கிழக்கு மற்றும் தென் பகுதிகளில் அதிக அவதானம் செலுத்திய நிலையில் அண்மைய தினங்களில் மத்திய பகுதியை நோக்கி நகர ஆரம்பித்துள்ளது. இந்நிலையில் உக்ரைனின் மேற்கத்திய அண்டைய நாடுகளுக்கு நெருக்கமாக போலந்து எல்லைக்கு அருகில் இருக்கும் இராணுவத் தளத்தின் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

“ரஷ்யா தனது இலக்குகளை விரிவுபடுத்தியுள்ளது” என்று பெண்டகன் பேச்சாளர் ஜோன் கிர்பி குறிப்பிட்டுள்ளார். இதேவேளை தலைநகர் கியேவின் தெற்கில் உள்ள வீதிகள் மாத்திரமே திறந்திருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். நகர அதிகாரிகள் சோதனைச் சாவடிகளை அமைத்திருப்பதோடு முற்றுகை ஒன்றை எதிர்நோக்கும் அச்சத்தில் மக்கள் உணவு மற்றும் மருந்து பொருட்களை சேமித்து வருகின்றனர்.

வடமேற்கு புறநகர் பகுதியான புச்சா மற்றும் இர்பின் நகரின் பகுதிகள் முழுமையாக ரஷ்ய படையின் கட்டுப்பாட்டில் இருப்பதாக உக்ரைன் இராணுவம் ஏ.எப்.பிக்கு தெரிவித்துள்ளது. முன்னர் நன்றாக இருந்த சில புறநகர் பகுதிகள் தற்போது இடிபாடுகளாக மாறியுள்ளன.

### "இந்த படுகொலையை நிறுத்துங்கள்"

கியேவில் இருந்து 25 கிலோமீற்றருக்குள் ரஷ்ய படைகள் நிலைகொண்டிருப்பதாகவும் நகரின் வடக்கு பக்கமாக சுற்றிவளைக்கும் முயற்சி ஒன்று சிதறடிக்கப்பட்டதாகவும் பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சு கடந்த சனிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு ஒன்று கூறப்பட்டிருந்தது.

எனினும் தலைநகரின் கிழக்கு மற்றும் மேற்கு ஆகிய இருபக்கங்ளிலும் உக்ரைன் படையின் எதிர்ப்பை ரஷ்யா எதிர்கொண்டிருப்பதாக அங்கிருக்கும் ஏ.எப்.பி செய்தியாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

“உக்ரைன் படையினர் கடுமையாக எதிர்ப்பை காட்டிவரும் நிலையில் ஒவ்வொரு முன்னேற்றத்திலும் ரஷ்யா அதிக விலை கொடுத்து வருகிறது” என்று பிரிட்டன் பாதுகாப்பு அமைச்சு தனது உளவு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. உக்ரைனில் இருந்து சுமார் 2.7 மில்லியன் பேர் வெளியேறி இருப்பதாக ஐ.நா கணித்துள்ளது. இதில் பெரும்பாலானவர்கள் போலந்தில் தஞ்சம் பெற்றுள்ளனர்.

பாப்பரசர் பிரான்சிஸ் கடந்த ஞாயிற்றுக்கிழமை ரஷ்யாவிடம் உணர்வுபூர்வமான கோரிக்கை ஒன்றை விடுத்திருந்தார். “இறைவனின் பெயரால், இந்தப் படுகொலையை நிறுத்துங்கள்” என்று அவர் கேட்டுள்ளார்.

இந்தப் போரில் ரஷ்யா சுமார் 12,000 துருப்புகளை இழந்து கடும் இழப்பை சந்தித்திருப்பதாக செலென்ஸ்கி கூறிய போதும், 498 படையினரே கொல்லப்பட்டதாக ரஷ்யா குறிப்பிட்டிருந்தது. அது பற்றி ரஷ்யா கடந்த மார்ச் 2 ஆம் திகதி ஒரே ஒரு அறிக்கையை மாத்திரமே வெளியிட்டிருந்தது.

சுமார் 1,300 உக்ரைனிய படையினர் கொல்லப்பட்டதாக உக்ரைன் தெரிவித்துள்ளது. தெற்கு உக்ரைன் நகரான கெர்சொனில், ஆயிரக்கணக்கான உள்ளூர் மக்கள் படையெடுப்புக்கு எதிராக ஆர்ப்பட்டம் ஒன்றுக்கு ஒன்று திரண்டதை அடுத்து ரஷ்ய துருப்புகள் அவர்களை நோக்கி எச்சரிக்கை வேட்டுகளை செலுத்தியுள்ளன.

# வெளிநாட்டு நிறுவனங்களுக்கு எதிராக ரஷ்யா கடும் பதிலடி




ரஷ்யாவில் செயல்படுவதை நிறுத்த முனையும் வெளிநாட்டு நிறுவனங்களின் சொத்துகளை முடக்குவதுடன் அவற்றுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்படுவர் என்று ரஷ்ய அதிகாரிகள் மிரட்டியுள்ளனர்.

தொலைபேசி அழைப்பு, கடிதம், நேரடிச் சந்திப்பு ஆகியவற்றின் மூலம் ரஷ்ய வழக்கறிஞர்கள் அத்தகைய கடுமையான எச்சரிக்கைகளை விடுத்தனர்.

கொகா கோலா, மக்டொலாட்ஸ், பீட்சா ஹட், ஐ.பி.எம் போன்ற பெரிய நிறுவனங்களும் எச்சரிக்கப்பட்டன. ரஷ்ய அரசாங்கத்தைக் குறைகூறியோருக்கும் அதே நிலை ஏற்படும் என எச்சரிக்கப்பட்டது.

இந்நிலையில் ரஷ்யாவில் உள்ள சில வெளிநாட்டு நிறுவனங்கள், வெளிநாடுகளில் உள்ள அவற்றின் மற்ற கிளைகளுடன் தொடர்புகொள்வதைப் பெரிய அளவில் குறைத்துள்ளன. வெளிநாட்டு நிறுவனங்கள் ரஷ்யாவில் செயற்பாடுகளை நிறுத்தினால், வெளியில் இருந்து முகாமைத்துவம் ஒன்றை கொண்டுவந்து அதனை செயற்படுத்த விரும்புபவர்களுக்கு வழங்கப்போவதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் படையெடுப்பை அடுத்து நூற்றுக்கும் அதிகமான நிறுவனங்கள் ரஷ்யாவில் தமது வர்த்தகத்தை இடைநிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐரோப்பாவில் ஆயுத இறக்குமதி அதிகரிப்பு



2017 முதல் 2021 வரையான ஐந்தாண்டு காலத்தில் உலக அளவில் ஆயுத இறக்குமதி நாலரை வீதம் குறைந்துள்ள நிலையில் ஐரோப்பாவில் 19 வீதம் அதிகரித்துள்ளது.

சுவீடனின் ஸ்டாக்ஹோமில் உள்ள பன்னாட்டு அமைதி ஆராய்ச்சி மையம் ஓர் ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் உலக அளவில் ஆயுத ஏற்றுமதியில் 39 வீதத்தை அமெரிக்கா கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. ரஷ்யா 19 வீதமும், பிரான்ஸ் 11 வீதமும்', சீனா, ஜெர்மனி ஆகியன நாலரை வீத பங்கைக் கொண்டுள்ளன.

இதேபோன்று உலக ஆயுத இறக்குமதியில் இந்தியாவும் சவூதி அரேபியாவும் சமமாக 11 வீத பங்கைக் கொண்டுள்ளன. அதையடுத்த இடங்களில் எகிப்து, அவுஸ்திரேலியா, சீனா, கட்டார், தென் கொரியா ஆகியன உள்ளன.

இதில் ரஷ்யாவின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலேயே ஐரோப்பாவில் ஆயுத இறக்குமதி அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜப்பானில் திபெத்தியர் சீன எதிர்ப்பு போராட்டம்



ஜப்பான் நாட்டின் டோக்கியோ நகரிலுள்ள திபெத்திய சமூக அங்கத்தவர்களும் ஏனைய செயற்பாட்டாளர்களும் திபெத் எழுச்சியின் 63ஆவது வருட நிறைவை சீன தூதரகத்திற்கு முன்பாக நினைவு கூர்ந்துள்ளனர்.

சீனா 1950 ஆம் ஆண்டில் திபெத்தைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நடாத்தப்பட்ட இந்த நினைவுகூறும் நிகழ்வில் கலந்து கொண்ட திபெத்தியர்கள், சீன ஆக்கிரமிப்பினால் தங்கள் தாயகத்தை மாத்திரமல்லாமல் மொழி, கலாசாரம் மற்றும் வாழ்க்கை முறையை இழந்துள்ளதாகக் குறிப்பிட்டதோடு திபெத்தின் விடுதலைக்காக குரல் கொடுக்குமாறும் உலகைக் கோரினர்.

# ரஷ்யாவுக்கு உதவி: சீனாவுக்கு எதிராக அமெரிக்க எச்சரிக்கை

உக்ரைன் படையெடுப்பில் ரஷ்யாவுக்கு சீனா உதவி புரிந்தால் அந்த நாடு கடுமையான விளைவுகளுக்கு முகம்கொடுக்க வேண்டி வரும் என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

ரஷ்யப் படையெடுப்பை ஆரம்பித்த பின் அது சீனாவிடம் இராணுவ உதவிகளை கேட்டதாக பெயர் குறிப்பிடாத அதிகாரிகளை மேற்கோள்காட்டி அமெரிக்க ஊடகங்கள் பல செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த கோரிக்கை பற்றி தமக்கு தெரியாது என்று வொசிங்டனில் உள்ள சீன தூதரகம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அமெரிக்கா மற்றும் சீன அதிகாரிகள் நேற்று ரோமில் சந்திப்பதற்கு முன்னர், அமெரிக்கா, சீனாவுக்கு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இந்தப் பிரச்சினை ஆரம்பித்தது தொடக்கம் தனது நீண்ட கால நட்பு நாடான ரஷ்யாவுக்கு சீனா கருத்து அளவில் ஆதரவை வெளியிட்டு வருகின்றபோதும் இராணுவ அல்லது பொருளாதார உதவிகளை வழங்குவது பற்றி வெளிப்படையாக எதுவும் தெரியவில்லை.

எனினும் ரஷ்யா சீனாவிடம் ட்ரோன்கள் உட்பட



இராணுவ உபகரணங்களை கேட்டதாக அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ரஷ்யாவில் பல நூறு பேர் கைது



மூன்றாவது வாரத்தை எட்டி இருக்கும் உக்ரைன் படையெடுப்புக்கு எதிராக ரஷ்ய நகரங்களில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களில் 750க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

37 நகரங்களில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆர்ப்பட்டங்களில் குறைந்தது 756 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று சுயாதீன கண்காணிப்புக் குழுவான ஒ.வி.டி–இன்போ தெரிவித்துள்ளது. இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் பாதி அளவானோர் தலைநகர் மொஸ்வில் கைதாகியுள்ளனர்.

கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி உக்ரைன் மீது முழு வீச்சில் படையெடுத்தது தொடக்கம் இடம்பெற்ற போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ரஷ்யாவில் இதுவரை மொத்தம் 14,000க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டிருப்பதாக அந்தக் குழு மேலும் தெரிவித்துள்ளது. இதில் 170க்கும் அதிகமானவர்கள் தடுப்பக் காவலில் உள்ளனர்.

கடந்த மார்ச் 4 ஆம் திகதி ரஷ்யாவில் அமுலுக்கு வந்த புதிய சட்டம் ஒன்றின்படி சுயாதீன போர் அறிக்கைகள் மற்றும் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் குற்றங்களாக கூறப்பட்டிருப்பதோடு, அதற்கு 15 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கில் ஏவுகணை தாக்குதல்: ஈரானிய படை பொறுப்பேற்றது

ஈராக்கின் வடக்கு குர்திஷ் பிராந்திய தலைநகர் எர்பலில் நடத்தப்பட்ட பலிஸ்டிக் ஏவுகணை தாக்குதல்களுக்கு ஈரானின் புரட்சிக் காவல் படை பொறுப்பேற்றுள்ளது.

அந்த நாட்டில் இருக்கும் இஸ்ரேலிய 'மூலோபாய நிலையம்' இலக்கு வைக்கப்பட்டதாக ஈரான் இராணுவம் வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. 'இஸ்ரேலினால் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு தாக்குதலுக்கும் கடுமையான, தீர்க்கமான மற்றும் அழிவு தரும் பதிலளிக்கப்படும்' என்று கூறப்பட்டுள்ளது.

சிரியாவில் கடந்த வாரம் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் இரு ஈரான் காவல்படை வீரர்கள் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அமெரிக்க துணைத் தூதரகத்திற்கு எதிராக பயங்கரவாதத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது என்று எர்பில் ஆளுநர் ஒமேத் கொஷ்னொல் முன்னதாக குறிப்பிட்டிருந்தார்.

இந்த ஏவுகணை தாக்குதல்களால் புதிய துணைத்தூதரக கட்டிடத்தில் பொருட்சேதம் மாத்திரமே ஏற்பட்டதாகவும் பொதுமகன் ஒருவர் காயமடைந்ததாகவும் குர்திஷ் உள்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதனை ஆத்திரமூட்டும் தாக்குதல் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.






## இந்திய இழுவை மடித் தொழில்

# இலங்கை கடற் பரப்புக்குள் வருவதை ஒரு நிமிடமேனும் அனுமதிக்க முடியாது

**யாழ்.விசேட நிருபர்**

இலங்கை கடல் பரப்புக்குள் இந்திய மீனவர்களின் இழுவைமடித் தொழிலுக்கு ஒரு நிமிடம் கூட அனுமதி வழங்க முடியாதென இந்திய மீனவர்களிடம் தெரிவித்துள்ளதாக, யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ.அன்னரசா தெரிவித்துள்ளார்.

யாழில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய இலங்கை மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் சிநேகபூர்வமான கலந்துரையாடலொன்று கடந்த 11ஆம் திகதி கச்சதீவில் நடைபெற்றது.

இதில் நாம் இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக மட்டுமே போராடி வருகின்றோம். ஆனால் அதை, இந்திய தொப்புள் கொடி உறவுகளுக்கு எதிரான போராட்டமாக சிலர் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவகையில் கதைத்து வருகின்றனர்.



நாம் அங்கே தெளிவாக கூறினோம், 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆண்டு வரை வடக்கு மக்களுக்கு, இந்திய உறவுகள் செய்த உதவிகளை நாம் மறக்க மாட்டோம். ஆனால் ஒரு நிமிடம் கூட இலங்கை கடல் பரப்புக்குள் இழுவை மடித்தொழிலை செய்ய அனுமதிக்க மாட்டோம்.

நாட்டுப்படகோ இழுவை மடிப் படகோ எதுவாக இருந்தாலும் எமது நாட்டு கடற்பகுதிக்குள் அத்துமீறி வரும் பொழுது சட்டம் தன் கடமையை செய்யும். இந்திய மீனவர்கள் இழுவை மடி தொழிலை நிறுத்தினால் உங்கள் தரப்பிலுள்ள நியாயமான கோரிக்கைகளை நாம் வெளியுறவு அமைச்சின் ஊடாக ஆராய்வோமென கூறியிருந்தோம்.

அதேவேளை இந்திய நாட்டுப் படகு தொழிலாளர்கள், இழுவை மடித் தொழிலால் தாமும் பாதிக்கப்படுவதாக. அதற்கு எதிராக தாமும் செயற்படுவோம். என்றும் தமது பிரச்சினை தொடர்பில் முதலமைச்சர் மட்டம் வரை கொண்டு சென்றும் எந்தப் பிரயோசனமும் இல்லையென்றும் கூறியிருந்தனர்.

அத்துடன் எமது பிரச்சினையை அவர்கள் 90 வீதம் ஏற்றுக்கொண்டனர்.

இலங்கை மற்றும் இந்திய பாரம்பரிய கடற்றொழிலாளர்கள் கூட்டாக இணைந்து இலங்கை இந்திய கடல் வளத்தை பாதுகாக்கவும் தீர்மானித்துள்ளோமென தெரிவித்தார்.

## டெங்கு காய்ச்சலினால் உயிரிழந்த மாணவன் பரீட்சையில் சித்தி



யாழில் டெங்கு காய்ச்சல் காரணமாக அண்மையில் உயிரிழந்த பாடசாலை மாணவன் வ.அஜய் 2021 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலையில் தரம் 05 இல் கல்வி பயின்ற வ.அஜய் என்ற மாணவன் அண்மையில் உயிரிழந்தார்.

இந்நிலையில் புலமைப்பரிசில் பரீட்சைக்கான பெறுபேறுகள் நேற்றிரவு வெளியானது. இதில் குறித்த 155 புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளார். யாழ். மாவட்ட வெட்டப்புள்ளி 148 என்பது குறிப்பிடத்தக்கது.

மாணவன் டெங்கு நோயினால் உயிரிழந்த தினத்தன்று அவர் பரீட்சையில் சித்தியடைவார் என அவரது ஆசிரியர் பகிரங்கமாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## யாழ் .மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு அலுவலகத்துக்கு எதிராக ஈபிடிபி போராட்டம்




யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு அலுவலகத்தால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற மக்கள் அபிவிருத்தி திட்டங்கள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை என எதிர்ப்புத் தெரிவித்து ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினர் நேற்றைய தினம் திங்கட்கிழமை யாழ் மாவட்ட செயலகத்திற்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அரச சுற்று நிரூபங்களை முறையாக நடைமுறைப்படுத்து, மாவட்ட செயலகம் அரசியல் கட்சி அலுவலகமா?, மாவட்ட செயலாளரே அதிகாரியாக துணிந்து செயற்படுங்கள் போன்ற கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனிடம் மகஜர் ஒன்றை கையளித்தனர். இப்போராட்டத்தில் ஈழமக்கள் ஜனநாயக கட்சியை சார்ந்த நிர்வாக செயலாளர்களான இராமநாதன் ஐங்கரன், ஸ்ரீரங்கேஸ்வரன், சிவகுரு பாலகிருஷ்ணன், வேலணை பிரதேச சபை தவிசாளர் நமசிவாயம் கருணாகர குருமூர்த்தி, வேலணை பிரதேச சபை உறுப்பினர் அனுசியா ஜெயகாந்த், முன்னாள் மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா மற்றும் அக் கட்சியின் பிரதேச சபை உறுப்பினர்கள் மாநகர சபை உறுப்பினர்கள் கட்சி சார்ந்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## சைக்கிள் திருட்டு : சந்தேக நபர் கைது

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் பாடசாலை மாணவர்களின் துவிச்சக்கர வண்டிகளைத் திருடி வந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடமிருந்து 10 துவிச்சக்கர வண்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

தித்துறை சுப்பர்மடத்தைச் சேர்ந்த 45 வயதுடைய ஒருவரே நேற்றுமுன் தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டார். விசாரணைகளில் 20 துவிச்சக்கர வண்டிகளைத் திருடி விற்பனை செய்துள்ளதாக சந்தேக நபர் வாக்குமூலம் வழங்கியுள்ளார். அவற்றில் 10 துவிச்சக்கர வண்டிகளே கைப்பற்றப்பட்டுள்ளதாக. ஏனையவை தேடப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தார்.

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## கொக்குவில் இந்து மாணவன் 198 புள்ளிகள் பெற்று முதலிடம்



**யாழ்.விசேட நிருபர்**

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் தமிழ்செல்வன் கஜலக்ஸன் 2021 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 198 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு பரீட்சைகள் திணைக்கள உத்தியோகபூர்வ இணையத்தளங்களில் வெளியிடப்பட்டன. அதனடிப்படையில் யாழ்ப்பாணம் கல்வி வலயப்பிரிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் தமிழ்செல்வன் கஜலக்ஸன் 198 புள்ளிகளை பெற்றுள்ளார். யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கான வெட்டுப்புள்ளியாக 148 புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன.

## புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய மாணவன் சிறந்த பெறுபேறு



**யாழ்.விசேட நிருபர்**

பாடசாலையில் கற்கும் விடயங்களை வீட்டில் சென்று மீட்டு படித்ததன் மூலமே சிறப்பான சித்தி அடைய முடிந்ததென யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் 2021ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் அதிகூடிய புள்ளியான 193 புள்ளிகளைப் பெற்ற மாணவன் சுதர்சன் அக்சஜன் தெரிவித்தார் .

நேற்று வெளியிடப்பட்டபுலமைப்பரிசில் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் 193 புள்ளிகளைப் பெற்று சிறப்புச் சித்தியினை பெற்ற சுதர்சன் அக்சஜன் மேற்கண்டவாறு தெரிவித்தார். நான் பாடசாலையில் கற்கும் விடயங்களை வீட்டில் சென்று மீட்டு படிப்பேன்.

அவ்வாறு படித்ததன் மூலமே நான் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுகொண்டேன். நான் எதிர்காலத்தில் ஒரு விமான பொறியியலாளராக வர வேண்டும் என்பதே எனது இலட்சியமாகவுள்ளது. சிறப்பு தேர்ச்சி பெறுவதற்கு எனது பெற்றோர் மற்றும் எனக்கு கற்பித்த ஆசிரியர்கள் கொடுத்த ஊக்கமே காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

## 47 ஆண்டுகளின் பின்னர் பனிக்கன்குளம் அ.த.க.பாடசாலை மாணவி சித்தி



**(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)**

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பிரதேசத்தில் அமைந்துள்ள பனிக்கன் குளம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் 2021 ஆம் ஆண்டுக்கான புலமை பரிசில் பரீட்சையில் தவசீலன் புவணாயினி 162 புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளார். மாங்குளம் பனிக்கன்குளம் அ.த.க பாடசாலையில் 1975 ஆம் ஆண்டு மாணவி ஒருவர் மாவட்ட மட்ட வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்திருந்தார். அதன்பின்னர் 2021 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் பெறுபேறுகள் தற்போது வெளியாகியுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்திற்கான வெட்டுப்புள்ளி 147 ஆக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் பெருமளவான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

# இந்திய மீனவர்கள் 8 பேரும் நிபந்தனைகளுடன் விடுதலை

**பரந்தன்குறூப் நிருபர்**

கிளிநொச்சி இரணைதீவு கடற்பரப்பில் கடந்த 27ஆம் திகதி எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 08 இந்திய மீனவர்களுக்கும் ஏழு வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஒருவருட கால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு பிணையில் செல்ல கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

கிளிநொச்சி இரணைதீவு கடற்பரப்பில் கடந்த 27ஆம் திகதி எல்லை தாண்டி மீன் பிடித்துக்கொண்டிருந்த 08 இந்திய மீனவர்களையும் அவர்களின் படகையும் கைது செய்த கடற்படையினர் கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளனர். இந்திய மீனவர்களும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றதில் நீதவான் எஸ் பாலசுப்ரமணியம் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து கடந்த (11.03.2022) திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டு அன்றையதினம் இவ்வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நேற்று (1403 2022) வரை விளக்கமறியலில் வைக்குமாறும் அன்றைய தினம் மீனவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப்பத்திரத்தை தாக்கல் செய்யுமாறும் கட்டளையிடப்பட்டிருந்தது.

அதற்கமைவாக நேற்றைய தினம் 08 இந்திய மீனவர்களும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதவான் எஸ் லெனின் குமார் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டதுடன் குற்றச்சாட்டு பத்திரங்களும் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதனைதொடர்ந்து குற்றச்சாட்டுடன் தொடர்புபட்ட இந்திய மீனவர்கள் 08 பேருக்கும் தலா ஏழு வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட ஒரு வருடகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதுடன் பிணையில் செல்ல நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

இதேவேளை இவர்களை கைது செய்யும் போதுஇவர்களிடமிருந்தகைத்தொலைபேசிகள் மற்றும் நாணயங்கள் விடுவிக்கப்பட்டதுடன் படகு வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் என்பன அரசுடைமையாக்கப்பட்டுள்ளன. இந்திய மீனவர்கள் சார்பாக இந்தியத் துணைத் தூதரக அதிகாரி ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதே நேரம் இவ்வாறு கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டவர்களில்; 16,18 வயதுகளையுடைய சிறுவர்களும் அடங்குகின்றனர்.

## பயங்கரவாத தடை சட்டம் திருத்தப்படுவதைவிட முற்றாக நீக்கப்பட வேண்டும்



**ஓமந்தை விஷேட நிருபர்**

பயங்கரவாததடை சட்டம் திருத்தப்படுவதை விட முற்றாக நீக்கப்பட வேண்டும் என்பதுதான் ஈழத்தமிழ் மக்களது நிலைப்பாடாக உள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகரும், வழக்கறிஞருமான கனகரத்தினம் சுகாஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினுடைய கூட்டத்தொடர் நடைபெற்று வருகின்றது. இந்த கூட்டத் தொடரிலும் ஈழத் தமிழர்கள் எதிர்பார்த்தது போல இந்த விவகாரத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிலிருந்து விடுவித்து சர்வதேச யுத்த குற்றவியல் நீதிமன்றத்தை நோக்கிய ஒரு சர்வதேச விசாரணைக்கான நகர்வுகளுக்கான எந்தவிதமான ஏற்பாடுகளும் கூட்டத் தொடரிலும் காத்திரமாக மேற்கொள்ளப்படவில்லை என்பது ஈழத்தமிழர்களை பொறுத்தவரையில் வேதனையான விடயம்.

தொடர்ந்தும் பொறுப்பு கூறலை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குள் வைத்திருப்பதற்கு அரசாங்கமும், அரசாங்கத்துக்கு சார்பான சில சர்வதேச நாடுகளும் தமிழ் மக்களினுடைய, பெரும்பான்மையான வாக்குகளை பெற்ற தமிழ் தேசிய கூட்டமைப்பும் சேர்ந்து செயற்படுவது ஒரு கவலைக்கிடமான விடயம். இந்த பொறுப்பு கூறலை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குள் முடக்குவதனால் ஈழத்தமிழர்களுக்கு ஒருபோதும் எந்தவிதமான தீர்வோ, நீதியோ கிடைக்கபோவது கிடையாது.




# அகவை 28 இல் விரைவில் காலடி பதிக்கும் முகத்துவாரம் மிஸ்ப ஜெப மிஷனரி ஆலயம்

கொழும்பு, முகத்துவாரம் மிஸ்ப ஜெப மிஷனரி ஆலயம் 28 வது அகவையை அண்மிக்கின்ற இவ்வேளையில் இலங்கையின் மக்கள் அபிமானம் மிக்க புகழ் பெற்ற தேசிய நாளேடான தினகரன் இன்று தனது 90வது அகவையில் கால் பதிக்கின்றது. முகத்துவாரம் மிஸ்ப ஜெப மிஷனரி ஆலயம் ஏப்ரல் 13 ஆம் திகதி தனது 28 ஆவது அகவையில் கால்பதிக்கின்றது. அவ்வேளையில் தினகரன் பத்திரிகை தனது 90 ஆவது அகவையில் இன்று கால்பதித்துள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிறன்று கொழும்பு, முகத்துவாரம் மிஸ்ப ஜெப மிஷனரி ஆலயத்தில் நடைபெறவிருக்கின்ற சிறப்பு பிரார்த்தனையில், தினகரன் பத்திரிகையின் பணி தொடர்ந்தும் வெற்றியுடன் தொடர வேண்டுமென விசேடமாக பிரார்த்தனை நடத்தப்படவுள்ளது. இப்பிரார்த்தனையில் மூத்த போதகர்கள் பலர் மற்றும் பத்திரிகையாளர்கள் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அதேசமயம் தினகரன் நாளேட்டின் பணியைப் பாராட்டும் விதத்தில் முகத்துவாரம் மிஸ்ப ஜெப மிஷனரி ஆலயத்தின் சிறப்பு விருது இப்பத்திரிகைக்கு வழங்கப்படவுள்ளது. முகத்துவாரம் மிஸ்ப ஜெப மிஷனரி ஆலயத்தின் மக்கள் பணிகள் அனைத்துக்கும் தினகரன் அளித்து வரும் ஆதரவுக்கு அங்கு நன்றியும் தெரிவிக்கப்படவுள்ளது. தினகரன் பத்திரிகையானது நாட்டின் ஐக்கியத்துக்காகவும், சமூகசேவை கருதியும் இந்த ஆதரவை தொடர்ந்தும் நல்க வேண்டுமென மிஸ்ப ஜெப மிஷனரி ஆலயத்தின் சார்பில் வண. போதகர்கள் வேண்டுகோளும் விடுத்துள்ளனர்.

இறைவன் தமது வார்த்தைகளுக்கூடாக எம்மோடு பேசுபவராக இருக்கிறார். அன்பு, பாதுகாப்பு, சமாதானம் ஆகியவற்றை உணர்த்தி எம்மை வழிநடத்துகின்றார். அவரது வாக்குத்தத்தத்தின் பிரகாரம் பலமான அத்திவாரம் எமக்காக இடப்பட அவர் உதவுகின்றார்.

ஆறுதல், ஆதரவு அரவணைப்பு, இரக்கம், இரட்சிப்பு என்பன அவர் எம் மீது கொண்டிருக்கும் அளவற்ற அன்பின் அடையாளங்கள் ஆகும். எமது நம்பிக்கைக்கூடாக அவர் தரும் நற்செய்தியை நாளும் பொழுதும் அடுத்தவருக்குச் சொல்லும் பணியில் கடந்த 28 வருடங்களாக பூரண அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருகின்றது மிஸ்பா ஜெப மிஷனரி ஊழியம்.

'உம்மால் எல்லாம் செய்ய முடியும் என்று நான் அறிவேன். உமது திட்டம் ஒன்றும் தடைப்பட மாட்டாது' என்று கோபு கொண்டிருந்த நம்பிக்கையே மிஸ்பா ஊழிய பயணத்தின் ஊன்றுகோல்'.

'என் ஆண்டவராகிய இறைவா! என் முழு இருதயத்தோடு உமது புகழ் பாடுவேன். உமது திருப்பெயர் என்றென்றும் விளங்கிடச் செய்வேன்' (சங்: 3512) என்று சங்கீதக்காரன் சொன்னபடி தேவசெய்தியை நாடு மேவ எடுத்துச் செல்வதோடு தேவை உள்ளவர்களின் துயர் துடைக்கும் சேவையிலும் எம்மை ஈடுபடுத்தி வருகின்றோம்.

சவால்கள் நிறைந்த வாழ்க்கைப் பயணத்தில் விசுவாசத்தை விதைத்து சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் அறுவடை செய்வதற்கான பயிற்சியை வழங்குவதும் எமது பணிகளில் ஒன்று. இப்பிரதேசத்தில் ஆன்மீகத்தைப் போதிப்பதுடன் சமுதாய பங்களிப்பிலும் நல்ல சமாரியனாக இருப்பதே எமது குறிக்கோள். அந்த வகையில் ஊடகங்களோடு நெருக்கமான தொடர்பினை பல காலமாகவே பேணி வருகின்றோம். எமது சமூகப்பணிக்கு நாட்டின் பெரும்பாலான ஊடகங்கள் தமது ஆதரவை வழங்கி வருகின்றன.

எமது இறைபணியில் நாம் 27வது அகவையை அண்மிக்கும் இவ்வேளையில், இலங்கையின் பிரபல தேசிய நாளேடான தினகரன் 90 ஆவது அகவையைத் தொடுகின்றது என்பது சிறப்பான விடயமாகும். தினகரனின் 90 வருட கால வெற்றிப் பயணம் என்பது மிகப் பெரும் சாதனையாகும்.

இலங்கையின் தமிழ்ப் பத்திரிகை வரலாற்றைப் பொறுத்தவரை சவால்கள் பலவற்றையும் வெற்றி கொண்டவாறு தனக்கென ஒரு தனித்துவத்துடன் தொடர்ந்தும் வெற்றியுடன் பயணித்துக் கொண்டிருக்கின்றது தினகரன். அதன் காரணமாகவே தினகரன் பத்திரிகையானது தமிழ் பேசும் மக்கள் உள்ளங்களில் தனியான இடத்தைப் பிடித்திருக்கிறது.

நாடு, சமுதாயம், சமூகம் என்னும் வரையறை கொண்ட கோட்பாட்டுக்குள் நின்றவாறு செய்திகள், தகவல்கள் உள்ளிட்ட அனைத்து அம்சங்களையும் ஏந்தி வரும் தினகரன் தொடர்ந்தும் எழுத்தாளர்களுக்கு களம் வழங்கி வருகின்றது.

அத்துடன் புதிய ஆக்க இலக்கியவாதிகளுக்கு பயிற்சியளிக்கும் பாசறையாகவும் திகழ்கிறது. இன்றைய மூத்த எழுத்தாளர்கள் பலருக்கு முகவரி பெற்றுத் தந்த பத்திரிகையாகவும் தினகரன் திகழ்கின்றது. எழுத்தாளர்கள், கவிஞர்கள் போன்ற பலரின் முயற்சிகளுக்கும் ஊக்கம் வழங்கும் பத்திரிகையாக தினகரன் விளங்குகின்றது. இவ்வாறு இலக்கிய ஆர்வலர்களுக்கு பாரிய ஆதரவை வழங்கி வருகின்றது தினகரன். எழுத்துலகுக்குள் பிரவேசிப்போருக்கு கைகொடுக்கின்ற பத்திரிகையாகவே தினகரனை நாம் நோக்குகின்றோம்.

கொழும்பு, முகத்துவாரம் மிஸ்ப ஜெப மிஷனரி ஆலயத்தின் ஊழியப் பயணத்திலும் தினகரனின் ஒத்துழைப்பு வரவேற்புக்குரியதாகும். எமது ஊழியப் பயணத்திற்கு ஊடகப் பிரசாரம் வழங்கியதன் மூலம் தினகரன் எமக்கு உற்சாகம் அளித்து வருகின்றது.

மனித மனங்களில் அக இருளை அகற்றி, யதார்த்தத்தை உருவேற்றி, நம்பிக்கையைத் தூண்டுவதில் எமது மிஸ்பா ஊழியப் பணியைப் போலவே, தினகரனின் பணியும் உன்னதமானது. தினகரன் தனது 90ஆவது அகவையை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதையிட்டு நாமும் புளகாங்கிதம் கொள்கிறோம். முகத்துவாரம் மிஸ்பா ஜெப மிஷனரி ஆலயத்தின் தலைமைப் போதகர் வண.ஜே. ஜே சாரங்கபாணி தலைமையில் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விஷேட பிரார்த்தனை இடம்பெறவுள்ளது. இதன் போது தினகரனின் வெற்றிப் பயணம் தொடர வேண்டுமென விசேட பிரார்த்தனை நடத்தப்படவுள்ளது.

இப்பிரார்த்தனையில் பிரதம அதிதியாகப் பங்கேற்கவுள்ள தினகரன் மற்றும் வாரமஞ்சரி ஆகியவற்றின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் கௌரவிக்கப்பட உள்ளார். தினகரன் பத்திரிகையின் பணிகளைப் பாராட்டி மிஸ்பா சபையினால் நினைவுச் சின்னம் வழங்கப்படவிருக்கிறது. இவ்விஷேட பிரார்த்தனையில் ஆலய விசுவாசிகள், பிரதேச போதகர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் பெருமளவில் பங்கேற்க உள்ளனர்.

தமிழ் கூறும் நல்லுலகில் தினகரன் பத்திரிகை மென்மேலும் உயர வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

'இயேசு கிறிஸ்து உங்களை நிறைவாக ஆசிர்வதிப்பாராக'



தினகரன் THINAKARAN

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI

## 90 ஆவது பிறந்ததினத்தை இன்று கொண்டாடுகின்ற தினகரன் பத்திரிகைக்கு மனமுவந்த நல்வாழ்த்துகள்!



**தினகரனின் வெற்றிப் பயணம் தொடர்வதற்கு ஆசி வேண்டி எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிறன்று கொழும்பு, முகத்துவாரம் மிஸ்ப ஜெப மிஷனரி ஆலயத்தில் மூத்த போதகர்கள், ஆலய விசுவாசிகள் கலந்து கொள்ளும் விசேட பிரார்த்தனை; நிகழ்வைச் சிறப்பிக்கும் வகையில் பத்திரிகையாளர்களும் பங்கேற்பு**



## தினகரனுக்கு முகத்துவாரம் மிஸ்ப ஜெப மிஷனரி ஆலயத்தினால் சிறப்பு விருது







**மனித மனங்களில் அகஇருளை அகற்றி, யதார்த்தத்தை உருவேற்றி, நம்பிக்கையைத் தூண்டுவதில் எமது மிஸ்பா ஊழியப் பணியைப் போலவே, தினகரனின் பணியும் உன்னதமானது. தினகரன் தனது 90ஆவது அகவையை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதையிட்டு நாமும் புளகாங்கிதம் கொள்கிறோம்**







சிறப்புப் பக்கம் தயாரிப்பு:
சவரிமுத்து தேவதாஸ்...





தலைநகரில் அனைத்து வகையான
சைவ உணவுகளுக்கும் மிகச்சிறந்த இடம்
NEW
SARASWATHI CAFE
VEGITARIAN
230 Sea Street, Colombo 11. Phone: 0112 435 789


# "உங்கள் பகைவர்களையும் அன்பு செய்யுங்கள்"



## கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவில் குருமுதல்வர் பேரருட்திரு ஜெபரட்ணம் அடிகளாரின் மறையுரையிலிருந்து..

கச்சத்தீவு புனித அந்தோனியார் திருவிழா இலங்கை இந்திய பக்தர்களின் பங்கேற்புடன் கடந்த சனிக்கிழமை பக்தி பூர்வமாக கொண்டாடப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை கொடியேற்றப்பட்டு திருவிழா நிகழ்வுகள் ஆரம்பமானதுடன் அதனையடுத்து சிலுவைப்பாதை தியானம், திருப்பலிப் பூசை, நற்கருணை ஆராதனை, புனித அந்தோனியாரின் திருச்சொரூப பவனி ஆகிய நிகழ்வுகள் நடைபெற்றன.

இம்முறை இலங்கையிலிருந்து நெடுந்தீவு பங்கின் பங்குத்தந்தை அருட்திரு வசந்தன் அடிகளாரின் தலைமையில் சுமார் 100 யாத்திரிகர்கள் திருவிழாவில் கலந்து கொண்டனர்.

அதேபோன்று இந்தியாவின் இராமநாதபுரம் மறைமாவட்டத்தின் வேர்க்காடு பங்குத்தந்தை அருட்திரு தேவ சகாயம் அடிகளாரின் தலைமையில் இந்திய யாத்திரிகர்கள் திருவிழாவில் கலந்து கொண்டனர்.

இரு நாடுகளிலுமிருந்து அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகளும் திருவிழாவில் கலந்து கொண்டதுடன் யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் பேரருட்திரு ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் சனிக்கிழமை காலை இலங்கைஇந்திய அருட் தந்தையர்களின் பங்கேற்புடன் திருவிழா கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

நீண்ட காலத்திற்குப் பின் கச்சத்தீவு அந்தோனியார் திருவிழாவில் கலந்து கொண்ட இரண்டு நாடுகளின் யாத்திரிகர்களும் தம் அன்பைப் பகிர்ந்து கொண்டு சகோதரத்துவத்தை வெளிப்படுத்திய காட்சிகள் திருவிழாவுக்கு மேலும் மெருகூட்டின.








திருவிழா கூட்டுத்திருப்பலியில் யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் பேரருட்திரு ஜெபரட்ணம் அடிகளார் வழங்கிய மறையுரையிலிருந்து சில பகுதிகள்:

"உங்கள் பகைவர்களை அன்பு செய்யுங்கள். உங்களை துன்புறுத்துபவர்களுக்காக செபியுங்கள்."

என்ற ஆண்டவர் இயேசுவின் வார்த்தையை தன் வாழ்க்கையில் முழுமையாக வாழ்ந்து காட்டியவர் புனித அந்தோனியார்.

கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழாவில் கலந்து கொண்டுள்ள நாம் நம் ஆண்டவரின் சோதனையின் வெளிப்பாடாக இந்த நற்செய்தி வார்த்தைகளை பார்க்க முடியும்.

உங்களை அன்பு செய்பவர்களையே நீங்கள் அன்பு செய்தால் அதன் பலன் என்ன? பாவிகளும் அவ்வாறு செய்கின்றார்களே? ஆகவே உங்கள் பகைவர்களை அன்பு செய்யுங்கள். உங்களை துன்புறுத்துவோருக்காக செபியுங்கள் என்ற ஆண்டவர் இயேசு அதனை தன் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டினார். அதேபோன்று புனித அந்தோனியாரும் தமது வாழ்க்கையில் அதனை வாழ்ந்து காட்டினார்.

நற்செய்தி வாசகம் ஒன்றில் இயேசு, நீங்கள் பலி செலுத்த வரும்போது உங்கள் சகோதர சகோதரிகளிடம் உங்களுக்கு ஏதாவது மனஸ்தாபம் உண்டானால் முதலில் சென்று அவர்களுடன் ஒப்புரவாகி அதன் பின்பு வந்து உங்கள் காணிக்கைப் பலியை செலுத்துங்கள் என்றார்.

நாம் அனைவருமே அந்த வார்த்தையை எங்கள் வாழ்க்கையில் மீட்டுப் பார்க்க வேண்டும்.

கல்வாரி மலையில் இயேசு சிலுவையில் தொங்கி கொண்டிருந்தபோது தந்தையிடம் தம் உயிரை காணிக்கையாக கொடுக்கும் நேரம் வந்தபோது தாம் தனது தந்தையிடம் காணிக்கையை செலுத்துவதற்கு முன்பாக தம்முடன் மனத்தாங்கல் உள்ளவர்களோடு ஒப்புரவாக வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு வந்தது. "தந்தையே இவர்களை மன்னியும். இவர்கள் அறியாமல் செய்கிறார்கள்" என்று அந்த வேத வசனத்தை அவர் அந்த நிலையிலும் நிறைவேற்றுகின்றார்.

இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த போது யூதர்கள் அவரைப் பார்த்து ஏளனம் செய்து கொண்டிருந்தார்கள். நீ இறைவனின் மகன் என்றாள் உன் மீது அறையப்பட்டுள்ள மூன்று ஆணிகளையும் கழற்றிக் கொண்டு கீழே குதி. அப்பொழுதே நீர் மெசியா என்று நாங்கள் நம்புவோம். என்று அவரைப் பரிகசித்தார்கள்.

நாம் இப்போது அதை சிந்தித்துப் பார்த்தால்.

இயேசு அப்போது சிலுவையிலிருந்து கீழே குதிக்கவில்லை என்று நாம் சில நேரம் யோசிக்கலாம். உண்மையில் அவர் குதித்தார். அந்த மூன்று ஆணிகளையும் கழற்றிக் கொண்டு அவர் கீழே இறங்கினார். மக்களுக்கு தெரியாதவாறு அவர் அதனை செய்தார். கீழ சிலுவை அடியில் தன்னோடு மனத்தாங்கலுடன் இருந்த அத்தனை பேரையும் அவர் மன்னித்தார். நான் உங்களை அன்பு செய்கிறேன் எனக் கூறி அவர்களைக் கட்டியணைத்து முத்தமிட்டார். நீங்களும் என்னுடைய பிள்ளைகள். நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன் என அவர் வாக்குறுதியளித்து மன்னித்து ஏற்றுக் கொண்ட பின்புதான் அவர் மீண்டும் சிலுவை மீதிலேறி "தந்தையே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்" என்றார்.

எமது வாழ்க்கையிலும் பிறரை அன்பு செய்து எமது பகைவர்களையும்கூட அன்பு செய்து எம்மை துன்புறுத்துவோருக்காக நாம் ஜெபிப்போம். புனித அந்தோனியாரை போன்று நாமும் எமது வாழ்வில் ஆண்டவரின் திருவுளத்தை நிறைவேற்றுவோம்.

லோரன்ஸ் செல்வநாயகம்...



# ஜோசப்வாஸ் மன்றத்தின் ஏற்பாட்டில் பெரிய சிலுவைப்பாதை தியான நிகழ்வு

கொழும்பு புனித ஜோசப் வாஸ் மன்றம் நடத்திய பெரிய சிலுவைப்பாதை தியான நிகழ்வு கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் அண்மையில் நடைபெற்றது. கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் பேரருட்திரு அன்டன் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் நடைபெற்ற பெரிய சிலுவைப்பாதை நிகழ்வில் ஒவ்வொரு ஸ்தலங்களையும் அருட்தந்தையர்கள் வழி நடத்தியமை குறிப்பிடத்தக்கது. வருடந்தோறும் தவக்காலத்தில் ஜோசப் வாஸ் மன்றத்தின் பெரிய சிலுவைப்பாதை கொழும்பு கொச்சிக்கடை புனித வியாகுல மாதா ஆலயத்திலிருந்து கொட்டாஞ்சேனை புனித லூசியாள் ஆலயம் வரை பவனியாக முன்னெடுக்கப்படும்.

நம் ஆண்டவர் இயேசுவின் திருப்பாடுகளை சித்தரிக்கும் வகையில் திருச்சுரூபங்களுடன் நாட்டின் அனைத்து பகுதிகளிலுமிருந்து பல்லாயிரக்கணக்கான விசுவாசிகளின் பங்கேற்புடன் அந்த பெரிய சிலுவைப்பாதை விமரிசையாகவும் பக்தி பூர்வமாகவும் நடத்தப்பட்டன.. சிலுவைப்பாதை பவனியின் இறுதியில் கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலய முன்றலில் ஆயரின் தலைமையில் திருப்பலி பூசை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்படும்.

ஒரு சில வருடங்களாக நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு சிலுவைப்பாதை திருப்பவனி நடத்தப்படாமல் ஒரே இடத்தில் சிலுவைப்பாதை தியானமும் திருப்பலி பூசையும் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில் இம்முறையும் கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தில் பெருமளவு விசுவாசிகள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பொதுநிலையினரின் பங்கேற்புடன் பெரிய சிலுவைப்பாதை தியானம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

எல்.எஸ்....












# தனியார் பஸ்களுக்கு இ.போ.ச. டிப்போ டீசல் விநியோகம்

(பலாங்கொடை தினகரன் நிருபர்)

இலங்கை போக்குவரத்து சபையின் பலாங்கொடை டிப்போவினால் இப்பகுதி தனியார் பஸ் வண்டிகளுக்கும் பாடசாலை சேவை பஸ் வண்டிகளுக்கும் டீசல் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது. அதேசமயம் தேயிலை கொழுந்தினை தொழிற்சாலைகளுக்கு ஏற்றிச்செல்லும் லொறிகளுக்கும் இந்த டிப்போவினால் எரிபொருள் வழங்கப்படுகின்றன. இது தொடர்பில் இலங்கை போக்குவரத்து சபையின் முகாமையாளர் தர்மசிறி ஹரிச்சந்திர தெரிவித்ததாவது,

போக்குவரத்து அமைச்சர் திலும் அமுனுகம மூலம் முன்வைக்கப்பட்ட வேலைத்திட்டமான தனியார் பஸ் வண்டிகளுக்கு இலங்கை போக்குவரத்து சபை டிப்போ மூலம் எரிபொருள் பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது. மாகாணங்களுக்கு இடையில் பயணிக்கும் தனியார் பஸ் வண்டிகளுக்கும் பாடசாலை மாணவர்களை கொண்டு செல்லும் பஸ் வண்டிகளும் தங்களது பஸ் அனுமதிப்பத்திரத்தை காட்டி எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும் என முகாமையாளர் தெரிவித்தார்.

# தோட்ட தொழிலாளர்களுக்கு அங்கீகாரம் கிடைக்க தேயிலைத்துறையில் மாற்றங்கள் அவசியம்

## இ.தொ.கா. விலும் விரைவில் நல்ல மாற்றங்கள் வரும்



தோட்டத் தொழிலாளர்களுக்கு மதிப்பும் அங்கீகாரமும் கிடைக்கவேண்டுமெனில் தேயிலைத் துறையில் மாற்றங்களை கொண்டு வருவது அவசியம் என தெரிவித்த இ.தொ.கா பொது செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இலங்கை தொழிலாளர் காங்கிரஸிலும் எதிர்வரும் காலங்களில் நல்ல மாற்றங்கள் உருவாகும் எனவும் தெரிவித்தார்.

நுவரெலியா பரிசுத்த திருத்துவ கல்லூரி சௌமிய மண்டபத்தில் (13) மாலை மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நுவரெலியா பிராந்திய மகளிர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த மகளிர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நுவரெலியா ,வலப்பனை,இராகலை,நானுஓயா பிரதேச மகளிர்கள் பெருந்திரலாக கலந்து கொண்டதுடன் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதுபாண்டி ராமேஸ்வரன், முன்னால் மத்திய மாகாண சபையின் காங்கிரஸ் உறுப்பினர்கள், நுவரெலியா பிரதேச சபை தவிசாளர் மற்றும் உள்ளூராட்சி சபை பிரதிநிதிகள், காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதில் தொடர்ந்து உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் ஜீவன்,

பெருந்தோட்ட தொழிலாளர்களின் ஆயிரம் ரூபாய் சம்பள பிரச்சினை விடாத சாபமாக இருந்து வருகிறது. தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்தும் தினக்கூலிகளாகவே இருந்து வருகின்றனர். இந்த நிலை மாறவேண்டும் என்பதே எனது அவா. நாட்டில் எத்தனையோ தொழில்துறை மாற்றம் அடைந்துள்ளன.ஆனால் தேயிலைத் துறையில் மாத்திரமே மாற்றங்கள் ஏற்படவில்லை.தேயிலைத் துறையை முகாமைத்துவம் செய்து வரும் கம்பனிகள் சரியான முறையில் இத் துறையை கொண்டு செல்வதில்லை, மாறாக தொழிலாளர்கள் ஊடாக இலாபத்தை அனுபவிக்கின்றனரே தவிர தொழிலாளர்களை மனிதர்களாக மதிப்பதில்லை. என்னை பொருத்த வரையில் ஏனைய விவசாயத்துறையில் தொழிலாளர்களுக்கு கிடைக்கும் அங்கீகாரம் தேயிலைத்துறையில் ஈடுப்படும் தொழிலாளர்களுக்கும் கிடைக்க வேண்டும் என்பதாகும். தேயிலைத் துறையில் சுமார் ஐந்து லட்சம் தொழிலாளர்கள் இருந்துவந்த நிலையில் இன்று ஒன்றரை இலட்சம் தொழிலாளர்களே உள்ளனர். இதற்கு காரணம் சரியான மரியாதையையும் அங்கீகாரமும் நமக்கு கிடைக்கவில்லை என்பதுதான்.

இன்றும் கூட தோட்டத்தொழிலாளர்கள் தேயிலை துறையில் இருந்து வெளியேறி ஏனைய விவசாயத்துறைக்கு செல்கின்றனர். காரணம் விவசாயத்துறையில் கிடைக்கும் மதிப்பும் அங்கீகாரமும் தேயிலை துறையில் கிடைப்பதில்லை. எனவே தேயிலைத் துறையில் மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும். சிறு சிறு மாற்றங்களை கொண்டு வந்தால் போதும் அது எதிர்காலத்தில் பெரிய மாற்றத்தினை கொண்டுவரும் என நம்பிக்கை தெரிவித்தார்.

தோட்டங்களில் தொழிற்சங்க தலைவர்கள், தோட்ட துறைமார்களுடன் தேவையற்ற உரையாடல்களில் ஈடுபடுவதால் பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆளாக வேண்டியுள்ளது. அதே நேரத்தில் ஒரு சில தோட்ட கமிட்டிகள் நல்ல முறையில் செயல்படுகின்றன. தோட்ட மக்களுக்கு காணியை பிரித்து கொடுப்பது இலகுவான விடயமாக இருந்திருந்தால் அதை எப்போதோ செய்திருக்க முடியும். ஆனால் தோட்ட காணிகளை அவர்களுக்கு பிரித்து கொடுப்பது இலகுவான விடயம் அல்ல, அதில் சட்ட சிக்கல்கள் அதிகமாக உள்ளன. இதை நிறைவுக்கு கொண்டுவர வேண்டுமேயானால் இன்னும் இருபது வருடங்களுக்கு மேலாகும்.ஆகவே காணிப்பிரச்சினை இலகுவான பிரச்சினையாக சொல்லி தோட்ட மக்களை ஏமாற்ற வேண்டிய தேவை எனக்கில்லை.

கடந்த இரண்டு வருடங்களாக நாட்டில் கொரோனா தொற்று பொருளாதார சரிவு காரணமாக பாரியலவிலான அபிவிருத்திகளை தோட்ட மக்களுக்கு முன்னெடுத்து செல்லமுடியாத நிலையில் இருந்துள்ள நிலையிலும் சொல்லத்தக்க அபிவிருத்திகளை நாம் தோட்டங்களில் முன்னெடுத்து வருகின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்தியாவசியப்பொருட்களுக்கு

# கட்டுப்பாட்டு விலையை விதித்து மக்களுக்கு சலுகை வழங்கவும்

## வேலு குமார் எம்.பி அரசிடம் கோரிக்கை

அக்குறணை குறூப் நிருபர்



அத்தியாவசியப்பொருட்களுக்குகான கட்டுப்பாட்டு விலையை கொண்டு வந்து மக்களுக்கு சலுகை வழங்குங்கள். தோட்டத் தொழிலாளர்களுக்கு கோதுமைமா கொள்வனவிற்கு மானியம் வழங்குவதாகக் கூறிய போதும் இன்று கோதுமையின் விலை அதிகரித்துள்ளது. இதுவிடயமாக அரசு நடவடிக்க எடுக்க வேண்டும் என கண்டி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தார்.

கண்டியில் நடந்த ஊடக சந்திப்பு ஒன்றிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது,

தோட்டத் தொழிலாளர்களுக்கு எந் தத் தோட்டத்திலும் நாளாந்தம் 1000 ரூபா கிடைப்பதில்லை. கோதுமைக்கான மானியம் வழங்குவதாகக் கூறினர். அது இன்று என்னவானது? மானியத்திற்குப் பதில் விலை அதிகரித்துள்ளது. இப்படியாக பிரச்சினைக்கு மேல் பிரச்சினைகளுக்கு வழி வகுத்து நாட்டு மக்களை பட்டிணிச்சாவு போடவேண்டாம் எனக் கேட்கிறோம். முடியாவிட்டால் ஆட்சியை கைவிட்டு வீட்டுக்குப் போகவும். அமைச்சர்களின் பொறுப்புக் கூறல் இன்று கேள்விக்குறியாகியுள்ளது.

தேவைக்கு அதிகமாக எரிபொருளை கொள்வனவு செய்வதுதான் பெற்றோல் நிரப்பு நிலையங்களில் வரிசைகள் அதிகம் ஏற்படக்காரணம் எனக் கூறும் அமைச்சர்களிடம், குடும்பப் பெண்கள் வெற்று சிலிண்டர்களுடன் வரிசையில் நிற்பதும் எரிவாயுவை சேமிக்காவா என்று கேட்கவிரும்புகிறேன். பொறுப்பற்றவகையில் அரசு நடக்கிறது. தேவையான எரிபொருளையை வழங்குங்கள் என்று நாம் கேட்கிறோம். பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் உலருவதை நிறுத்த வேண்டும். இன்று டொலர் மற்றுமல்ல பொருட்களின் விலையும் மிதக்கவிடப்பட்டுள்ளன. நாட்டின் பெயரும் மிதக்கிறது. அத்தியாவசியப் பொருட்களுக்குகான கட்டுப்பாட்டு விலையைக் கொண்டு வாருங்கள். மக்களுக்கு சலுகை வழங்குங்கள் என்றார்.

# திருக்கோவில் பிரதேசத்தில் தெய்வீக கிராம எழுச்சி விழா

## திருமுன்னிலை அதிதியாக ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா பங்கேற்பு

திருக்கோவில் தினகரன், காரைதீவு குறூப் நிருபர்கள்



திருக்கோவில் பிரதேசத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், திருக்கோவில் பிரதேச செயலகம் மற்றும் இந்து சமய அமைப்புக்களில் ஒழுங்கு படுத்தலில், இந்து சமய பாரம்பரிய மரபு ரீதியான நிகழ்வுகளுடன் பிரதேச தெய்வீக கிராம மாபெரும் ஆன்மிக எழுச்சி பேரணி ஞாயிற்றுக்கிழமை (13) திருக்கோவில் பிரதேசத்தில் இடம்பெற்றது. தெய்வீக கிராம ஆன்மிக எழுச்சி விழாவானது திருக்கோவில்பிரதேசசெயலாளர்ரீ.கஜேந்திரன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய வளாகத்தில் இடம் பெற்றது.



தெய்வீக கிராம நிகழ்வானது தம்பிலுவில் பொதுச் சந்தை விநாயகர் ஆலயத்தில் இருந்து பூஜை வழிபாடுகளுடன் அதிதிகள் வரவேற்கப்பட்டு, அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வு பதாகையும் அதிதிகளால் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து இந்து சமய கலாசார பாரம்பரிய முறையிலான வீதி ஊர்வலம் தம்பிலுவில் பொது சந்தைக் கட்டடத்திற்கு முன்பாக ஆரம்பமாகி பிரதான வீதி வழியாக திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்திற்கு சென்று இருந்தனர். இதனை தொடர்ந்து ஆலயத்தில் தெய்வீக கிராம நினைவுக்கல் திரைநீக்கம் மற்றும் நந்திக்கொடி ஏற்றுதல் நிகழ்வைத் தொடர்ந்து ஆலயத்தில் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் திருமுன்னிலை அதிதியாக பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் இந்து மத விவகாரங்களுக்கான இணைப்பாளர் சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா கலந்து கொண்டு சிறப்பித்தார். நிகழ்வில் ஆன்மிக அதிதிகளாக ஸ்ரீசித்திரவேலாயுத சுவாமி ஆலய குரு சிவஸ்ரீ அங்குசநாதக் குருக்கள், பெரிய நீலாவனை ஸ்ரீவிஷ்ணு தேவஸ்தான குரு சிவஸ்ரீ பத்மலோஜன் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன், சிறப்பு அதிதிகளாக கல்முனை வடக்கு பிரதேச செயலக பிரதேச செயலாளர் ரீ.ஜே. அதிசயராஜ், திருக்கோவில் உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன் மாவட்ட கலாசார உத்தியோகத்தர் கே.ஜெயராஜ் என பலரும் கலந்து கொண்டனர்.

# இளைஞர் கூட்டமைப்பின் அங்குராப்பண நிகழ்வு

முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலுமுள்ள இளைஞர்களை ஒருங்கிணைத்து செயற்பட்டுவரும் மாற்றத்திற்கான இளைஞர் கூட்டமைப்பின் அங்குராப்பண நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (13 ) திருகோணமலை மாவட்ட நகராட்சி மன்றத்தின் ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வானது மாற்றத்திற்கான இளைஞர் கூட்டமைப்பின் தலைவர் செல்வி சுமையா மௌயூத் தலைமையில் நடைபெற்றது. இதன்போது கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் தம்பலகமம் பிரதேச செயலாளர் ஜெயகௌரி சிறிபதி பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக சட்டத்தரணி செல்வி பிரசாந்தினி உதயகுமார், திருகோணமலை மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் திருமதி.ஜெயசீலன் சுகந்தினி, அகம் மனிதாபிமான வள நிலையத்தின் இணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் மாற்றத்திற்கான இளைஞர் கூட்டமைப்பின் அங்குராப்பண வைபவமானது தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி. ஜெயகௌரி சிறிபதியின் தலைமையில் நடைபெற்றது. அதனை தொடர்ந்து பெண்களின் கலைநிகழ்வும் இடம் பெற்றதோடு, இறுதியாக சட்டத்தரணி செல்வி. பிரசாந்தினி உதயகுமாரினால் இளைஞர்களுக்கு "பாராபட்சத்தை உடைத்தெறிதலும் சமத்துவத்தினை மதித்தலும்" எனும் தலைப்பில் செயலமர்வும் மாற்றத்திற்கான இளைஞர் வலையமைப்பினரால் நடாத்தப்பட்டது.

எதிர்காலத்தில் இவ் இளைஞர் வலையமைப்பினரால் கிராமங்களில் புதைந்து கிடக்கும் இளைஞர்களின் திறமைகளை வெளிக்கொணரும் செயற்றிட்டங்களை மேற்கொள்ளவும் திட்டமிட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசை விட்டு சு.க வெளியேறினால் நடுத் தெருவில் நிற்க நேரிடும்

## பொதுஜன பெரமுன மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர்

பெரியபோரதீவு தினகரன் நிருபர்



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை விட்டு வெளியேறப் போகின்றோம் என தெரிவிக்கின்றார்கள். முடியுமானால் அரசாங்கத்தை விட்டு வெளியேறிக் காட்டட்டும். போனால் நடுத் தெருவில்தான் நிங்கவேண்டும் என பொதுஜன பெரமுனக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் ப.சந்திரகுமார் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கட்சியின் மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு தொகுதிக்கான இளைஞர் மாநாடு பெரியபோரதீவில் ஞாயிற்றுக்கிழமை (13) மாலை நடைபெற்றது. இதன்போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கிழக்கு மாகாண சபையில் ஒரு தமிழரை முதலமைச்சராக்கியது மகிந்த ராஜபக்சதான். ஆனால் நல்லாட்சி அரசாங்கத்துற்கு முட்டுக் கொடுத்தவர்கள் வேறு யாருக்கோ முதலமைச்சர் பதவியைத் தூக்கிக் கொடுத்தார்கள். நல்லாட்சி அரசாங்கம் இருந்திருந்தால் வெளிநாடுகளைப் போன்று கொரோனாவால் அதிகபேர் மரணித்திருப்பார்கள். எமது அரசாங்கம் மக்களின் உயிர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படுகின்றது.

எவர் வந்தாலும் கூச்சலிடலாமே தவிர நாட்டைக் கொண்டு நடாத்த முடியாது. நாட்டைக் கொண்டு நடாத்தக்கூடிய சக்தி மகிந்த ராஜபக்சவின் குடும்பத்திற்கு மாத்திரமே உள்ளது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்தை விட்டு வெளியேறப் போகின்றோம் என தெரிவிக்கின்றார்கள். முடியுமானால் வெளியேறிக் காட்டட்டும். மட்டக்களப்புக்கு அதிகளவு அபிவிருத்திகள் இன்னும் வர இருக்கின்றது. பொதுஜன பெரமுன கட்சியைக் கொண்டு வந்ததன் காரணமாகத்தான் மாவட்டத்திலிருந்து ஒரு அமைச்சரை உருவாக்க முடிந்துள்ளது எனத் தெரிவித்தார்.

# அம்பாறையில் முதலிடம்

கல்முனை விசேட நிருபர்



2021 ஆம் ஆண்டுக்கான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்தை சேர்ந்த 58 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதுடன், முஹம்மட் ரீஹான் முஹம்மட் யூசுப் எனும் மாணவன் 191 அதிகூடிய புள்ளிகளைப் பெற்று அம்பாறை மாவட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளார்.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் இப்படசாலைக்கு நேரடியாக விஜயம் செய்து இம் மாணவனைப் பாராட்டி, வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்.

இம் மாணவன் கல்முனையைச் சேர்ந்த மகப்பேற்று வைத்திய நிபுணர் முஹம்மட் ரீஹான் தம்பதியரின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

# முள்ளிப்பொத்தானை பாத்திமா பாலிகாவில் 05 மாணவிகள் சித்தி




முள்ளிப்பொத்தானை குறூப், கந்தளாய் தினகரன் நிருபர்கள்

கிண்ணியா வலய கல்வி அலுவலகத்திற்குட்பட்ட முள்ளிப்பொத்தானை பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்தில் வெளியான புலமை பரிசில் பரீட்சையில் 93 வீத சித்தியுடன் கிண்ணியா வலயத்தில் முதல் நிலையுடன் ஐந்து மாணவர்கள் சித்தி அடைந்துள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

எம்.ஆர்.பாத்திமா சுகாட் 175, எஸ்.கே.பாத்திமா சபா 169, எல்.ஏ. பாத்திமா சம்னா 159, பௌசுல்லா சமாஹ் 151,வை.றிசா கனி 148 ஆகிய ஐந்து மாணவிகளும் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளதாக அதிபர் தெரிவித்தார். மாணவர்களை நெறிப்படுத்திய ஏ.எச்.எம்.தௌபீக் மற்றும் கே.தேஸ்மா ஆசிரியர்களுக்கு பாடசாலை அதிபர் எஸ்.ஏ.றம்ஸி நன்றிகளை தெரிவித்துள்ளார்.

# நகர்வலம்



## அநுராதபுரம் சாஹிராவில் 10 பேர் சிறந்த பெறுபேறு

*கல்நேவ தினகரன் விசேட நிருபர்*

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் அநுராதபுரம் சாஹிரா தேசிய பாடசாலையிலிருந்து பரீட்சைக்கு தோற்றிய 63 மாணவர்களில் பத்து பேர் சித்தியடைந்துள்ளதாக பாடசாலை அதிபர் எம்.கே.எம். ஜாபர் தெரிவித்தார். இதன்படி எம்.எப். சயீமா 173 புள்ளிகள், எம். ஆர்.ரய்பா 167 புள்ளிகள், எம்.டீ.சகீ சரப் 159 புள்ளிகள், ஏ. சுரயிப் 156 புள்ளிகள், என். அம்ஜத் 155 புள்ளிகள், எஸ்.சம்ஹா 155 புள்ளிகள்,எம்.எஸ்.சம்ஹா 153 புள்ளிகள்,ஏ.கே.சம்லி 153 புள்ளிகள், எம்.வை.யுஸ்ரி அகமட் 150 புள்ளிகள், எம்.என்.எம்.பிலால் மஹ்மூத் 148 புள்ளிகள் எனப் புள்ளிகளைப் பெற்று பத்து மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

## பிடிப்பன மீன்பிடி படகில் 84 மில். பெறுமதியான கஞ்சாவுடன் ஐவர் கைது

*நீர்கொழும்பு தினகரன் நிருபர்*

துங்கல்பிடிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிடிப்பன மீன்பிடி துறைமுகத்தில் தரித்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் மீன்பிடி படகினை நேற்று முன்தினம் (13) அதிகாலைவேளையில் கோனஹேன, விசேட அதிரடிப் படை வீரர்களின் அலுவலக அதிகாரிகள் திடீர் பரிசீலனையை மேற்கொண்டனர். இதன்போது குறித்த மோட்டார் படகினுள் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 84 மில்லியன் ரூபாய் பெறுமதியான 570 கிலோ கிராம் எடையுள்ள கேரளா கஞ்சா தொகையை அவர்கள் கைப்பற்றியுள்ளனர்.

மேலும் இதனுடன் தொடர்புடைய ஐந்து நபர்களையும் விசேட அதிரடிப் படை வீரர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர். கோனஹேன, விசேட அதிரடிப் படை அலுவலக அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் பேரில் மேற்படி கேரள கஞ்சாவுடன் ஐந்து சந்தேக நபர்களை விசேட அதிரடிப் படை வீரர்கள் கைது செய்துள்ளனர்.

### தற்போதைய நெருக்கடி நிலையில்

# அரசியல் பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

தற்போதைய நெருக்கடி நிலையில் அரசியல் பேதமின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் எனவும் இருப்பவர்களை எப்படி வெளியேற்றுவது, எப்படி பதவிகளை எடுப்பது என்பது முக்கியமல்ல எனவும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஹம்பாந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாட்டில் டொலர்கள் இல்லை. வெளிநாட்டு கையிருப்பு இல்லை. நாம் உண்மையில் மரணத்தின் விளிம்பில் இருக்கிறோம். இப்போது எங்களிடம் அதிக எண்ணிக்கையிலான புற்றுநோயாளிகள் உள்ளனர், இது அதிகரித்து வருகிறது. இதனை குறைக்க வேண்டிய அவசியம் உள்ளது.



தற்போதைய நிலையில் அரசியல் பேதமின்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இருப்பவர்களை எப்படி வெளியேற்றுவது, எப்படி பதவிகளை எடுப்பது என்பது முக்கியமல்ல. ஜனாதிபதியை சந்தித்த போது சர்வகட்சி மாநாட்டை முன்மொழிந்தோம். மனிதர்கள்படும்துன்பங்களைப் பற்றி அவரிடம் எடுத்துக் கூறினோம்.

அண்மைக்காலமாக டீசல் வாங்க மக்கள் வரிசையில் நிற்கின்றனர்.

வரிசையில் போய் இன்னும் விலை உயர்ந்த டீசலை நிரப்பிக்கொண்டு, எரிபொருள் தீரும் வரை எரிவாயு தேடி அலைய வேண்டிய நிலை உள்ளது என்றும் அவர் இதன்போது மேலும் குறிப்பிட்டார்.

## மாத்தறை மாவட்ட அஹதிய்யா சம்மேளன மாநாடும் விழிப்புணர்வும்

*வெலிகம தினகரன் நிருபர்*

மாத்தறை மாவட்ட அஹதிய்யா பாடசாலை சம்மேளன வருடாந்த மாநாடும் விழிப்புணர்வு நிகழ்ச்சியும் எதிர்வரும் 17ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் மாத்தறை இல்மா கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் அஹதிய்யா பாடசாலை மத்திய சம்மேளன தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள்,பள்ளிவாசல் நிர்வாகிகள் மாத்தறை மாவட்ட அஹதிய்யா பாடசாலைகளின் ஆசிரியர்கள், கல்விமான்கள் என பெரும்திரளானோர் கலந்துகொள்ளவுள்ளனர். மாத்தறை மாவட்டத்தில் சுமார் 12 அஹதிய்யா பாடசாலைகள் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


**இலங்கை முதலீட்டு சபை (BOI)**

**பெறுகை அறிவித்தல்**

**2022 மார்ச் 15ஆம் திகதி "தினமின" பத்திரிகையில் பிரசுரமாகும் மற்றும் BOI இன் உத்தியோகபூர்வ இணையத்தளம் (www.investsrilanka.com) இல் காணப்படும், கீழே குறிப்பிடப்படும் பெறுகைக்கான விலைமனு அழைத்தல்**

**2022/2024 ஆம் ஆண்டிற்கான, இலங்கை முதலீட்டு சபையின் ஊழியர்களுக்கான போக்குவரத்து சேவையை வழங்குவதற்கான விலைமனுக்களை அழைத்தல்**

**ஒப்பந்த இல : BOI/S1&S/Q/43/2022**

இந்தப் பெறுகையுடன் தொடர்பான விலைமனு ஆவணங்கள் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளன அத்துடன் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், "தினமின" பத்திரிகையில் பிரசுரமாகும் விளம்பரம் மற்றும் BOI இன் உத்தியோகபூர்வ இணையத்தளம் (www.investsrilanka.com) இன் பிரகாரம் செயற்படலாம்.

விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் (மனிதவளம்) இடமிருந்து 0112332204/0778555125 மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டு சபை**


### இன நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாக

# அஸ்ஸலாஹ் மத்ரஸா நிகழ்வில் பௌத்த மதத்தலைவர்கள் பங்கேற்பு





*அஜ்வாத் பாஸி*

பேருவளை, சீனன்கோட்டை அல் மத்ரஸதுஸ் ஸலாஹ் அரபுக்கல்லூரியின் 20வது வருட பூர்த்தி விழாவின் முக்கிய நிகழ்வான இரு ஹாபிழ் மாணவர்களின் முழு குர்ஆனையும் ஒரே நாளில் பாராயணம் செய்யும் நிகழ்வு ஞாயிறு (13) அதிகாலை 4.15 மணியளவில் தஹஜ்ஜுத் நேரத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இவ் ஆரம்ப நிகழ்வில் மத்ரஸாவின் அதிபர் உட்பட உஸ்தாத்மார்கள் மற்றும் சீனன்கோட்டை பள்ளிச்சங்க நிர்வாகிகள் உட்பட மத்ரஸா நிர்வாக சபை உறுப்பினர்களும் பொது மக்களும் கலந்து கொண்டு சிறப்பாக அல்குர்ஆன் பாராயண நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருந்த போது மத்ரஸாவின் அழைப்பையேற்று பேருவளை மங்கல பிரிவெனாவின் தலைமை விகாராதிபதி ஸ்ரீ சங்க சுமன நாயக்க தேரர் அடங்கிய குழுவினர் நல்லெண்ண விஜயமாக மேற்படி மத்ரஸாவிற்கு வருகை தந்தனர். இவர்களை மத்ரஸா நிர்வாக சபை உபதலைவர் அல்ஹாஜ் ரிப்கான் சித்தீக் தலைமையிலான நிர்வாகிகள் வரவேற்று பிரதான மண்டபத்திற்கு அழைத்துச்சென்றனர்.

இதன்போது இரு ஹாபிழ் மாணவர்களும் சிறப்பான குர்ஆன் பாராயண நிகழ்வுகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். இதனை நல்ல முறையில் அவதானித்து அல் குர்ஆன் பாராயணத்தையும் செவிமடுத்த விகாராதிபதிகள், சில விடயங்களையும் இதன்போது கேட்டுத் தெரிந்து கொண்டனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த தலைமை விகாராதிபதி, எல்லா மதங்களும் நல்லதையே விரும்புகின்றன. இஸ்லாம் மார்க்கமும் அதற்கு விதிவிலக்கல்ல. சிறுபராயத்திலிருந்தே மாணவர்கள் நல்ல முறையில் வழிநடாத்தப்பட வேண்டும். அப்போதுதான் சிறந்த நற்பிரஜைகளை நாட்டில் உருவாக்க முடியும். இஸ்லாம் இன நல்லிணக்கத்தை வரவேற்கும் மார்க்கமாகும். இந்த மத்ரஸா மாணவர்களின் நடத்தைகள், ஒழுக்க செயற்பாடுகள் என்னை மிகவும் கவர்ந்தன. இந்நிகழ்வில் கலந்து கொள்ள கிடைத்தமையை நான் பெரிதும் பாக்கியமாக கருதுகிறேன். மாணவர்களின் குர்ஆன் பாராயணம் நல்ல முறையில் அழகாக இருக்கிறது. ஆசிரியர்கள் மாணவர்களை நன்றாக பயிற்றுவித்திருக்கிறார்கள். இப்படியான நல்ல விடயங்கள் மூலமாக நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும் எனவும் அவர் தெரிவித்தார். இதன் போது

மத்ரஸா நிர்வாக சபை உபதலைவர் ரிப்கான் சித்தீக் ஹாஜியினால் வருகை தந்த பௌத்த மதகுருமார்களுக்கு அல்குர்ஆன் மொழிபெயர்ப்பு பிரதிகள் வழங்கி கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.


**பகிரங்க அறிவித்தல்**

**இலங்கை உள்ளூர் அலுவலகத்தை மூடுதல்**

பாதுகாப்பு அமைச்சின் அரசு சாரா அமைப்புக்கள் செயலகத்தின் கீழ் பதிவீட்டு இல. FL 40516 இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கும் **"MYRIGHT – விஷேட தேவையுடைய நபர்களுக்கு வலுவூட்டுகிறது"** (முன்னர் சியா மன்றம் என அழைக்கப்பட்ட) அமைப்பு சுவீடன் MYRIGHT சபை 23/04/2021 இல் மேற்கொண்ட தீர்மானத்தின் பிரகாரம் **அதன் இலங்கை அலுவலகத்தை 31 மே 2022ம் திகதியிலிருந்து மூடவுள்ளது என்பதை இத்தால் பொதுமக்களுக்கு அறியப்படுத்துகின்றோம்.**

**ஜி. ஏ. ஆர். பெரேரா**
**இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளர் MYRIGHT**
**33, ரஜ மாவத்தை, ரத்மலானை.**
**07.03.2022**



**கொழும்புப் பல்கலைக்கழகம்**

**விலைமனுக்களுக்கான அழைப்பு**

**கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் நிதிப் பீடத்திற்கு சகலவற்றையும் ஒன்றில் உள்ளடக்கிய (All-in-one) கணனிகளை - வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல்**

AHEAD/NCB/RA2/ELTAELSE/FMF/2022/01

1. AHEAD செயற்றிட்ட கிரயச் செலவிற்காக உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி முகவராண்மையிடமிருந்து கடனொன்றை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் நிதிப் பீடத்திற்கு சகலவற்றையும் ஒன்றில் உள்ளடக்கிய (All-in-one) கணனிகளை வழங்குதல், விநியோகித்தல், பொருத்துதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் ஆகியவற்றின் ஒப்பந்தங்களுக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. கீழே விபரிக்கப்பட்டவாறு கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் நிதிப் பீடத்திற்கு சகலவற்றையும் ஒன்றில் உள்ளடக்கிய (All-in-one) கணனிகளை வழங்குதல், விநியோகித்தல், பொருத்துதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் என்பவற்றுக்காக கொழும்பு-03, கொழும்பு பல்கலைக்கழகம், திணைக்கள பெறுகை குழுவின் (உயர் மட்டம்) தலைவர் தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.
3. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் (NCB) நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
4. விலைமனுதாரர் இலங்கையில் ஆகக் குறைந்தது ஐந்து வருட அனுபவத்தை உரிய துறையில் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு பல்கலைக்கழகம், AHEAD செயற்றிட்டம் பெறுகைக்கான பிரதி பணிப்பாளர் (தொடர்பு இல.: 011-2595953/011-2559638) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம் அத்துடன் விலைமனுக்கோரல் ஆவணங்களை பல்கலைக்கழக இயக்கம் தொழில்நுட்ப செயலகத்திலிருந்து (OTS) 2022-03-16ஆம் திகதி முதல் 2022-04-07ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் அல்லது ஆவணங்களை பரீட்சிப்பதற்காக http://www.cmb.ac.lk என்ற இணையத்தை நாடலாம்.
6. மீளளிக்கப்படாத கட்டணமாக 3,500.00 ரூபாவை செலுத்திய பின்னர், கொழும்பு பல்கலைக்கழக AHEAD செயற்றிட்டம் பெறுகைக்கான பிரதிப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். மீளளிக்கப்படாத கட்டணத்தை 505170600013 என்ற இலக்கத்தை பாவித்து பல்கலைக்கழக பிரதான சேகரிப்பு கணக்கிற்கு மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலிருந்தும் பணத்தை வரவு வைக்கலாம். ஆவணங்களை 2022-03-16ஆம் திகதி முதல் 2022-04-07ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரையும் கொள்வனவு செய்யலாம்.
7. விலைமனுக்கள் இரு பிரதிகளில் பின்வரும் முகவரிக்கு 2022.04.07ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒப்படைத்தல் வேண்டும். பின்வரும் அட்டவணையில் கூறப்பட்டவாறு ''கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் நிதிப் பீடத்திற்கு சகலவற்றையும் ஒன்றில் உள்ளடக்கிய (All-in-one) கணனிகளை வழங்குதல், விநியோகித்தல், பொருத்துதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் - AHEAD/NCB/RA2/ELTAELSE/FMF/2022/01'' என்ற சொற்களையும் உரிய தொடர்பீட்டு இலக்கத்தையும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.
8. அனைத்து விலைமனுக்களுடனும் நிபந்தனையற்ற, இலகுவில் ரொக்கப் பணமாக மாற்றக்கூடிய 2022-08-04ஆம் திகதி வரையில் செல்லுபடியாகும் வகையில் மத்திய வங்கியில் பதிவு பெற்ற எந்தவொரு வர்த்தக வங்கியிலிருந்தும் பின்வரும் அட்டவணையில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (பயன்பெறுநர் - துணை வேந்தர் - கொழும்புப் பல்கலைக்கழகம்)

| விலைக் கோரல் இல. | வகுதி | உருப்படி | விலைமனுப் பிணை முறி (ரூபா) |
|---|---|---|---|
| | மேசைக் கணனிகள் (150 எண்ணிக்கை) | கொழும்பு பல்கலைக் கழகத்தின் முகாமைத்துவம் மற்றும் நிதிப் பீடத்திற்கு சகலவற்றையும் ஒன்றில் உள்ளடக்கிய (All-in-one) கணனிகளை வழங்குதல், விநியோகித்தல், பொருத்துதல் மற்றும் செயற்படுத்திக் காண்பித்தல் | 92,000.00 |

9. விலைமனுக்களை கொழும்பு பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள 'கேள்விப் பெட்டியில்' உள்ளிடல் வேண்டும் அல்லது கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு இறுதித் திகதிக்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் 2022.04-07ஆம் திகதியன்று விலைமனுக்களை மூடிய பின்னர், உடனடியாகவே விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவுசெய்யப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (உயர் மட்டம்),**
**கொழும்பு பல்கலைக்கழகம்,**
**94, குமாரதுங்க முனிதாச மாவத்தை,**
**கொழும்பு-03.**


### "தினகரன்" 90 வருட நிறைவுக்கு

# வெலிகம முன்னாள் நகர பிதா வாழ்த்து

*வெலிகம தினகரன் நிருபர்*



இலங்கை திருநாட்டில் தமிழ் பேசும் மக்களின் கலை, கலாசார, இலக்கிய மேம்பாட்டுக்கு எமது தேசிய நாளிதழான தினகரன் பத்திரிகை வழங்கியுள்ள பங்களிப்பு போற்றத்தக்கது. சுமார் 90வருட காலமாக பல வரலாற்று சாதனைகளை படைத்த ஒரே தமிழ் தினசரி பத்திரிகை இதுவாகும். நடுநிலைப் போக்கில் தரமான பல்வகையான செய்திகளையும் பிரசுரித்து வரும் தினசரி பத்திரிகை தினகரன் என வெலிகம நகர சபை முன்னாள் தலைவரும் பொதுஜன பெரமுன முக்கியஸ்தருமான எச்.எச். முஹம்மது தெரிவித்துள்ளார்.

90 வது வருட அகவையில் இன்று காலடியெடுத்து வைக்கும் தினகரன் பத்திரிகை வெற்றிப் பயணத்திற்கு அவர் அனுப்பிய வைத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அந்த வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, வாசகர்களின் உள்ளங்களை ஈர்த்த இப்பத்திரிகை ஏனைய பத்திரிகைகளுக்கும் முன்மாதிரியாக திகழ்கின்றது. அரசியல், பொருளாதார, கலாசார மற்றும் இன்னோரன்ன துறைகளின் வளர்ச்சிக்கு நடுநிலைமையான செய்திகளை வெளியிட்டு தமிழ் பேசும் மக்களினதும் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தினரதும் பாராட்டை பெற்ற ஒருபத்திரிக்கையாக இப்பத்திரிகை காணப்படுகிறது.

ஒருநாடு அதன் பத்திரிகை வளர்ச்சியில் அவற்றுக்கு வழங்கும் சுதந்திரம் தாராளமாக இருக்க வேண்டும். இன, மத, பிராந்தியம் என வேறுபாடின்றி சகல தரப்பினரதும் அபிமானத்துடன் பத்திரிகைகள் திகழவேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கின்ற அதேநேரத்தில் தற்போதைய ஊடக அமைச்சரினதும் எதிர்பார்ப்பாகும். அந்த வகையில் பல தடங்களை எதிர்கொண்டு வளர்ச்சியை நோக்கி வீறுநடை போடும் தினகரன் பத்திரிகை எதிர்காலத்தில் இன்னும் நல்ல காத்திரமான செய்திகளை மக்களுக்கு வழங்க வேண்டுமெனமென்றும் தனது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாச்சியாதீவு மையவாடி வீதியை திருத்தியமைக்க கோரிக்கை

*திறப்பனை தினகரன் நிருபர்*

திறப்பனை பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட நாச்சியாதீவு புதிய நகர் மையவாடி வீதி, உடைந்தும் சிதைந்தும் காணப்படுவதால், இவ் வீதி ஊடாக பிரயாணம் செய்பவர்கள் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக பிரதேச பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மரணச் சடங்குகள் இடம் பெறும் நாட்களில் மரணச் சடங்குகளில் கலந்து கொள்ளவென வெளி மாவட்டங்களிலிருந்தும், உள்ளூரிலிருந்தும் வருபவர்களில் அதிகமானோர் இவ்வீதி ஊடாக தமது பயணத்தை மேற்கொள்வதால் குறிப்பிட்ட இவ் வீதி நீண்ட காலமாக திருத்தியமைக்கப்படாமல் பழுதடைந்த நிலையில் உடைந்து காணப்படுகிறது. குறிப்பிட்ட இவ் வீதியை திருத்தி 'காப்பட் " இட்டு செப்பனிட்டு தருமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் இப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.


**வாகன ஏல விற்பனை கொட்டாவ**

| வாகன இல. | தயாரிப்பு | வகை |
|---|---|---|
| CP CAU - 59XX | TOYOTA | DAA-NHP10 |
| WP CBJ - 13XX | SUZUKI | WAGON R |
| SP KR-15XX | TATA | NANO |
| 63-10XX | NISSAN | CARAVAN |
| CP GA-65XX | NISSAN | CARAVAN |
| WP PD-65XX | TOYOTA | HIACE |
| WP CAR-87XX | RENAULT | KWID |
| WP KK-37XX | TOYOTA | RUSH |
| WP PU-41XX | DFSK | EQ1020 |
| CP LM-87XX | TATA | ULTRA |
| WP NB-89XX | TATA | MARCOPOLO BUS |
| EP ND-68XX | LANKA ASHOK LEYLAND | VIKING |
| CP PF -36XX | TOYOTA | KDH |
| WP PH-02XX | TOYOTA | KDH |
| WP QQ-52XX | BAJAJ | RE |
| WP GY-61XX | BAJAJ | BAJAJ RE 2S |
| WP AAF-80XX | BAJAJ | RE 205 |
| WPYZ-54XX | BAJAJ | 4stroke |
| UP QV-30XX | BAJAJ | BAJAJ 4 S |
| WP ABG-92XX | BAJAJ | RE |
| WP AAH 68XX | BAJAJ | RE 205 |
| SP YY 68XX | BAJAJ | RE 205 |
| WP QI-69XX | BAJAJ | AUTO RE 2 STROKE |
| WP QD 12XX | BAJAJ | BAJAJ RE 2S |
| QU-87XX | BAJAJ | 4stroke |
| WP AAT-28XX | BAJAJ | 4stroke |
| SG QQ-29XX | BAJAJ | RE 205 |
| SG QK 15XX | BAJAJ | RE 205 |
| CP QS-56XX | BAJAJ | RE 205 |
| WP JW-36XX | BAJAJ | 2STROKE |
| WP QI-61XX | BAJAJ | 2STROKE |
| WP QD-39XX | BAJAJ | AUTO RE 2 STROKE |
| CP JP-06XX | BAJAJ | AUTO RE 2 STROKE |
| SG YD 64XX | BAJAJ | AUTO AR4S |
| WP QA 00XX | BAJAJ | RE 2 Stroke |
| WP QJ 82XX | BAJAJ | RE 2 Stroke |

இல.17/1, பின்ஹென ஜங்ஷன், ஹொரண வீதி, கொட்டாவ வாகன சாலையில் 2022 மார்ச் 20 மற்றும் 21ம் திகதியில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை பார்வையிடலாம்.
முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் விற்பனை சந்தையிலிருந்து அகற்றுவதற்கு கம்பனிக்குரிமையுண்டு

071 991 9986
077 478 7096

நுழைவு கட்டணம் ரூ.1000/-

ஏலத் திகதி : 22.03.2022
நேரம்: காலை 10.00 மணி

*நிபந்தனைக்குட்பட்டது
சுகாதார வழிகாட்டுதல்களின்படி வருகை இருக்கும்

AUCTIONEER
Black Tie Service with True Aloha!

ඒ එන් අල්ගෙවත්ත ඩෙන්ඩියා(ර්)
A N ALGEWATHTHA AUCTIONEER
#333, Janajaya City, Rajagiriya.
+94 71 790 5 790 | info@anaauctioneer.com
www.anaauctioneer.com

Associated Motor Finance Company PLC
தலைமை அலுவலகம்
இல. 146, ஹெவலொக் வீதி, திம்பிரிகஸ்யாய.
தொலைபேசி: 0115 553663



# இலங்கைக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட் இந்திய அணி 238 ஓட்டங்களால் வெற்றி

## தொடரையும் 2-0 என கைப்பற்றியது

தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog

இந்தியா இலங்கை அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் 447 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஆடிய இலங்கை அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 208 ஓட்டங்களை பெற்றது. இந்த ஆட்டம் மூன்று நாட்களுக்குள் முடிவடைந்தது. இலங்கை இந்திய அணிகள் மோதிய இரண்டு டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 2-0 என தொடரையும் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. இலங்கை அணி சார்பாக அணியின் தலைவர் திமுத் கருணாரத்ன 107 ஓட்டங்களை பெற்று தனது 14 ஆவது டெஸ்ட் சதத்தை பெற்றமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் குசல் மெண்டிஸ் 54 ஓட்டங்களையும் பெற்றதே இலங்கை அணி சார்பாக பெற்ற அதிகூடுதலான ஓட்ட எண்ணிக்கையாகும். பந்து வீச்சில் இந்திய அணி சார்பாக அஸ்வின் 4 விக்கெட்டையும் பூம்புரா 3, விக்கெட்டையும் பட்டேல் இரண்டு விக்கெட்டையும் ஜடேஜா ஒரு விக்கெட்டையும வீழ்த்தினர்.

இதன்படி இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, இரண்டாம்நாள் ஆட்டநேர முடிவில் 1 விக்கெட் இழப்புக்கு 28 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

ஆட்டநேர முடிவில், திமுத் கருணாரத்ன 10 ஓட்டங்களுடனும் குசல் மெண்டிஸ் 16 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.



இந்தியக் கிரிக்கெட் அணியின் இரண்டாவது இன்னிங்ஸ் ஓட்டங்களுடன் ஒப்பிடுகையில், இலங்கை கிரிக்கெட் அணி 419 ஓட்டங்கள் பின்னிலையில் இருந்தது.

பெங்களூர் மைதானத்தில் கடந்த 12ஆம் திகதி ஆரம்பமான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியக் கிரிக்கெட் அணி, முதல் இன்னிங்ஸிற்காக 252 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஸ்ரேயஸ் ஐயர் 92 ஓட்டங்களையும் ரிஷப்பந்த் 39 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், லசித் எம்புல்தெனிய மற்றும் பிரவீன் ஜயவிக்கிரம ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் தனஞ்சய டி சில்வா 2 விக்கெட்டுகளையும் லக்மால் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய இலங்கை கிரிக்கெட் அணி, 109 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மத்தியூஸ் 43 ஓட்டங்களையும் டிக்வெல்ல 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.



இந்தியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், பும்ரா 5 விக்கெட்டுகளையும் அஸ்வின் மற்றும் ஷமி ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் அக்ஸர் பட்டேல் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

143 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய இந்தியக் கிரிக்கெட் அணி, 303 ஓட்டங்களுக்கு 9 விக்கெட்டுகளை இழந்திருந்த போது, தனது இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது. இதனால், இலங்கை அணிக்கு 447 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, ஸ்ரேயஸ் ஐயர் 67 ஓட்டங்களையும் ரிஷப்பந்த் 50 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், பிரவின் ஜயவிக்கிரம 4 விக்கெட்டுகளையும் எம்புல்தெனிய 3 விக்கெட்டுகளையும் விஷ்வ பெனார்டோ மற்றும் தனஞ்சய டி சில்வா ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.போட்டியின் நாயகனாக சிரேஷ் அய்யர் தெரிவானார்.ரிஷப் பான்ட் தொடரின் நாயனகாக தெரிவானார்.

## டயலொக் ஆசிஆட்டா 'Esports' உத்தியோகப்பூர்வ அனுசரணையாளராக SLESA யுடன் ஒருங்கிணைவு

இலங்கையில் அடுத்த தலைமுறை மாற்றத்தையொட்டிய விளையாட்டை மேம்படுத்துவதற்கான பயணத்தின் சமீபத்திய மைல்கல்லாக, இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்பு இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி நிறுவனமானது "இலங்கை ஈஸ்போர்ட்ஸ் அசோசியேஷன்" (SLESA) சங்கத்துடன் ஒன்றிணைந்து அதன் உத்தியோகபூர்வ அனுசரணையாளராக இரண்டு வருட கால ஒப்பந்தமொன்றை மேற்கொண்டுள்ளது.

இலங்கையில் நுளிமசவள இன் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்கள் என்ற ரீதியில், PUBG Mobile, Free Fire, Valorant, DOTA 2, Counter-Strike: GO, Pro Evolution Soccer மற்றும் Tekken 7 உள்ளிட்ட SLESAவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட தேசிய Esports அணிகளுக்கு டயலொக் அனுசரணை வழங்குகின்றது. டயலொக் வழங்கும் இந்த அனுசரணையின் மூலம் SLESA மேற்கொள்ளும் உள்ளூர் விளையாட்டாளர்களுக்கான பயிற்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்வதற்கு அது உதவிகரமாக அமைவதுடன் மாவட்ட மட்டத்திலான Esports போட்டித் தொடர்களை நடத்தி நாட்டின் அனைத்து மூலைகளிலும் சிறந்ததொரு Esports கட்டமைப்பினை கொண்டு வரவும் அது உதவும் எனவும் கருதப்படுகின்றது. அத்துடன், வருடாந்தம் 'டயலொக் -SLESA தேசிய ஈஸ்போர்ட்ஸ் விருதுகள்' விழாவில் நாட்டின் சிறந்த விளையாட்டாளர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்படுவார்கள். இத்துடன், தெற்காசியாவில் 5G பரீட்சார்த்த வலையமைப்பைப் பயன்படுத்திய முதல் மொபைல் நிறுவனம் என்ற பெருமையையும் டயலொக் பெறுவதுடன், குறைந்தளவு தாமதத்துடன் தடையற்ற கேம்பிளேயை (Gameplay) உறுதிசெய்ய அதிவேக 5G இணைப்புடன் கூடிய நுளிமசவள இயங்குதளங்களையும் டயலொக் எளிதாக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"இலங்கை ஈஸ்போர்ட்ஸ் அசோசியேஷன்" சங்கமானது (SLESA) டயலொக் நிறுவனத்துடன் மேற்கொண்ட முன்னேற்றங்களையும், Esports (ஈஸ்போர்ட்ஸ்) வளர்ச்சிக்கு டயலொக் அனுசரணை வழங்கி ஆதரவளிப்பதில் முக்கிய பங்கினை ஆற்றுவதையும் கண்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்" என இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் மற்றும் டிஜிட்டல் தொழிநுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அவர்கள் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், "இலங்கையில் Esports இன் வளர்ச்சிக்கு ஆதரவளிக்க முன்வந்துள்ள டயலொக் ஆசிஆட்டா நிறுவனத்திற்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன், மேலும் டயலொக் வழங்கும் 5G இணைப்பு வலுவானது இலங்கையை தெற்காசியாவில் நுளிமசவள கேந்திர மையமாக நிலைநிறுத்துவதை இலக்காகக் கொண்டிருக்கும் எனவும் எதிர்பார்க்க முடியும்."என்றார்.

SLESA இன் தலைவர் ரவீன் விஜயதிலக்க அவர்கள் தெரிவிக்கையில், "கடந்த தசாப்தத்தில் இலங்கையில் ஈஸ்போர்ட்ஸ் (Esports) மிகுந்த வேகத்தில் வளர்ச்சியடைந்துள்ளது. மேலும், நாட்டின் பிராந்திய மட்டத்தில் இளைஞர்கள் Esports போட்டிகளில் முன்னணி பாத்திரத்தை வகிக்க தயாராக உள்ளனர். டயலொக் ஆசிஆட்டா மற்றும் SLESA இன் ஒன்றிணைவில், விளையாட்டின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம் அத்துடன் ஆசிய விளையாட்டுகள் மற்றும் "கொமன்வெல்த்" (பொதுநலவாய) விளையாட்டுகள் உட்பட ஈஸ்போர்ட்ஸை (Esports) உத்தியோகபூர்வ பதக்கங்களை வழங்கும் போட்டியாக ஒருங்கிணைத்துள்ள பல சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கும் நமது Esports விளையாட்டாளர்களுக்கு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதை நாங்கள் உறுதிசெய்கிறோம்" என்றார்.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி நிறுவனத்தின் புத்தாக்குனர் பிரிவு அதிகாரி அந்தனி ரொட்ரிகோ அவர்கள் தெரிவிக்கையில், "இலங்கையில் 'Esports இன் உத்தியோகபூர்வ அனுசரணையாளர் என்ற ரீதியில் நாம் மிகுந்த ஆர்வத்துடன் செயற்படுகின்றோம். பெருந்தொற்றிற்கு மத்தியில் கூட, நுளிமசவள ஏராளமான ஈடுபாடு மற்றும் சுறுசுறுப்பான பங்கேற்புடன் பெரும் வளர்ச்சியை காட்டியுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில், 'டயலொக் கேமிங்' விளையாட்டுகளுக்கு ரூபா 16 மில்லியனை டயலொக் வழங்கியுள்ளது. இலங்கையில் ஈஸ்போர்ட்ஸ் (Esports) மேம்பாட்டை நோக்காகக் கொண்டு SLESA உடனான இந்த ஒன்றிணைவின் மூலம், இலங்கையில் பரவிக்கிடக்கின்ற தேசிய மட்டத்திலான சைபர் விளையாட்டு ஆர்வலர்களின் அடுத்த தலைமுறை மத்தியிலும் இப்போட்டிகளை வேரூன்றச்செய்து நாடளாவிய ரீதியில் மேலும் வலுப்படுத்துவதையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைவதுடன், சிறந்த கேமிங் செயல்திறன் கொண்ட உலகத் தரம் மிக்கவர்களாக அவர்களை மிளிரச்செய்து முன்கொண்டு செல்வதில் டயலொக்கின் 5G-ரெடி நெட்வேர்க் முக்கிய பங்களிப்பை வழங்கும். எனவே, SLESA இன் ஆதரவுடன் அனைத்து ஈகேமிங் விளையாட்டாளர்களுக்கும் மேம்படுத்தப்பட்ட மற்றும் உயர்ந்த கேமிங் அனுபவத்தை வழங்குவதில் நாங்கள் உரிய முதலீடுகளை மேற்கொண்டுள்ளோம்" என்றார்.

டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சி இலங்கை தேசிய கிரிக்கெட், கரைப்பந்து மற்றும் வலைப்பந்து மற்றும் அணிகளுக்கான பெருமைமிகு அனுசரணையாளர்களாக செயற்பட்டு வருவதுடன், ஜனாதிபதி தங்கக் கிண்ண கரப்பந்தாட்டம், ஜூனியர் கரப்பந்தாட்டம், தேசிய ஜூனியர் மற்றும் சீனியர் வலைப்பந்து போட்டிகள், பாடசாலை ரக்பி, பிரீமியர் கால்பந்து, மற்றும் பராலிம்பிக் உட்பட இராணுவ பாரா விளையாட்டுக்கள், தேசிய பரா விளையாட்டுகள் மற்றும் உலக பாராலிம்பிக் விளையாட்டுகளில் கலந்து கொள்ளும் இலங்கை அணிஆகிய அனைத்திற்கும் டயலொக் ஆசிஆட்டா நிறுவனம் அனுசரணை வழங்கி நெருங்கிய தொடர்பை பேணி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி நிறுவனத்தின் புத்தாக்குனர் பிரிவு அதிகாரி அந்தனி ரொட்ரிகோ அவர்கள் இளைஞர் மற்றும் விளையாட்டு மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கௌரவ நாமல் ராஜபக்ச அவர்களின் முன்னிலையில் இலங்கை விளையாட்டு சங்கத்தின் தலைவர் ரவீன் விஜயதிலக அவர்களிடம் அனுசரணையினை கையளித்தார்.



படத்தில் இடமிருந்து வலமாக: டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் துணைமாரட், கேமிங் சேவைகள் பிரிவு தயாரிப்பு முகாமையாளர் அமித் பெரேரா, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் துணைமாரட் பொது முகாமையாளர் விரங்க செனவிரத்ன, இலங்கை விளையாட்டு சங்க செயலாளர் ரமேஷ் லியனகே, இலங்கை ஈஸ்போர்ட்ஸ் சங்க பொருளாளர் விருத் ஜயசிங்க

டயலொக் ஆசிஆட்டா மற்றும் இலங்கை ஈஸ்போர்ட்ஸ் சங்கம் ஆகியவற்றுக்கு இடையேயான உத்தியோகபூர்வ பங்காளித்துவத்தின் உத்தியோகபூர்வ அறிமுக விழாவில் தற்போதைய தேசிய ஈஸ்போர்ட் அணியைச் சேர்ந்த வீரர்கள்.



இடமிருந்து வலமாக: நதிஷானி ".பாக்ஸி" ஜெயசிங்க, ஷ்ஹாப் "ஷ்ஹாப்" ரிசான், உஸித் "டோடோமெய்ண்ட்ர்" பீரிஸ், இலங்கை ஈஸ்போர்ட்ஸ் சங்கத்தின் தலைவர் ரவீன் விஜயதிலக, விபுதா 'ChromnZ' டி சொய்சா, சஞ்சீவன் "பென்ஜே" கலைவீசன் மற்றும் சஹ்ரா "நேரட்" தாஜுதீன்.

## நாவலப்பிட்டி மத்திய கல்லூரியின் 'டயலொக் பாடசாலைகள் ரக்பி' அபிவிருத்தி செவன்ஸ் சம்பியன்




Dialog
SCHOOLS RUGBY DEVELOPMENT SEVENS

பல்லேகலவில் உள்ள திருத்துவக் கல்லூரி ரக்பி மைதானத்தில் ஆரம்பமான *Dialog Schools Rugby Development 7s* சம்பியன்ஷிப் போட்டியின் இரண்டாவது லெக்கில் குருநாகல் பாதுகாப்பு சேவைகள் கல்லூரியை தோற்கடித்து நாவலப்பிட்டி மத்திய கல்லூரி ஒட்டுமொத்த வெற்றியாளராக தெரிவானது.

இலங்கையின் முதன்மை இணைப்பு வழங்குனரான *Dialog Axiata PLC* உடன் இணைந்து *SLSRFA* ஆல் நடத்தப்பட்டது. *Dialog Schools Rugby Development 7s 2022* சுற்றுப்பயணத்தின் முக்கிய நோக்கம் இலங்கையின் கிராமப்புறங்களில் இருந்து மறைந்திருக்கும் திறமைகளை கண்டறிந்து மேம்படுத்துவது மற்றும் பாரம்பரியமாக விளையாடப்படும் மற்றும் பின்பற்றப்படும் விளையாட்டு கொழும்பு மற்றும் கண்டி எல்லைகளுக்கு அப்பால் இருந்து ரக்பி விளையாட்டை எடுத்துச் செல்வதாகும்.




க் ஹவுஸில் 2022 மார்ச் மாதம் 15ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

தினகரன்
THINAKARAN
තිනකරන්

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## கொழும்பு மாநகர சபை

**கொழும்பு மாநகர சபையின் மூலம் 2021.09.17ஆம் திகதிய 2245/30ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டது.**

**(1952ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற தரப்படுத்தப்பட்ட துணை விதிச் சட்டம்)
1989.01.20ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி 541/17ஆம் இலக்க துணை விதிச் சட்டத்தின் Vஆம் பாகத்தின் பிரகாரமான கேள்வி அறிவித்தல்**

## விலைக்கோரல் / கேள்விகளுக்கான அழைப்பு

கொழும்பு மாநகர சபையின் மாநகர ஆணையாளரால் பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர் / கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | கேள்வி இலக்கம் | விபரம் | மீளளிக்கப் படாத கட்டணம் ரூபா | விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைமனுதாரர் / கேள்விதாரரின் தகுதிகள் | மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளும் நபர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ME/ME/ ML/15/ 2022 | விஹாரமகாதேவி பூங்காவில் மிதிப் படகு சேவையின் (Pedal Boat Service) செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு | 5,400.00 | 2 வருட காலத்திற்கு கொ.மா.சபைக்குச் செலுத்த உத்தேசிக்கும் மொத்தத் தொகையின் 2% (5 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்) | கம்பனிப் பதிவுடன் இதனையொத்த வேலைகளில் 2 வருட கால அனுபவத்தை ஒப்பந்தக்காரர் கொண்டிருத்தல் வேண்டும். | பொறியியல் பணிப்பாளர் (காணி மற்றும் சுற்றாடல் அபிவிருத்தி) தொலைபேசி: 011-2695475 |
| 2 | ME/ME/ ML/298/ 2021 | மூன்று எண்ணிக்கையான Pelican களை வழங்குதல், நிறுவுதல், செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தல் (சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, ரெக்லமேஷன் வீதி, சங்கராஜ மாவத்தை) | 5,400.00 | 240,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராகவும் இதனையொத்த வேலைகளில் 3 வருட கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் | பொறியியல் பணிப்பாளர் (TDRS) தொலைபேசி: 011-2694593 |
| 3 | ME/USS/ DN/19/ 2022 | கொழும்பு-10, GN 133, கெட்டவலமுல்ல வீதியில் பிரதான உந்துதலை (Main Force) நிர்மாணித்தல் | 5,400.00 | 43,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | C8 மற்றும் C7 CIDA தரத்தைக் கொண்ட நீர் வழங்கல் மற்றும் சாக்கடை ஒப்பந்தக்காரர்கள் | பொறியியல் பணிப்பாளர் (வடிகாலமைப்பு) தொலைபேசி: 011-2674809 |
| 4 | ME/ME/ DR/05/ 2022 | ஸ்ரீ தம்ம மாவத்தை எலியஸ் பிளேஸிலுள்ள வடிகாலமைப்பு முறைமையின் திருத்தவேலைகள் | 5,400.00 | 125,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | C6 மற்றும் C7 CIDA தரத்தைக் கொண்ட மழை நீரை அகற்றுதல் மற்றும் காணி வடிகாலமைப்பு ஒப்பந்தக்காரர்கள் | பொறியியல் பணிப்பாளர் (வடிகாலமைப்பு) தொலைபேசி: 011-2674809 |
| 5 | ME/ME/ DR/04/ 2022 | கொழும்பு-14, G.NO. 233, மகாவத்தை வீதியில் மாதம்பிட்டிய மயானத்திற்கு முன்னாலுள்ள பிரதான வீதி வடிகால் முறைமையின் திருத்தவேலைகள் | 5,400.00 | 195,000.00 ரூபாவுக்கான நிபந்தனையற்ற உடன் பணம் பெற்றுக்கொள்ள முடியுமான பிணை முறி | C6 மற்றும் C7 CIDA தரத்தைக் கொண்ட மழை நீரை அகற்றுதல் மற்றும் காணி வடிகாலமைப்பு ஒப்பந்தக்காரர்கள் | பொறியியல் பணிப்பாளர் (வடிகாலமைப்பு) தொலைபேசி: 011-2674809 |

**விலைமனு ஆவணங்களை (மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி) இரண்டு முறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.**

**முறை 01 - கொழும்பு மாநகர சபையின் இணையதளத்திலிருந்து (www.colombo.mc.gov.lk) தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.**

i. மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத விலைமனு ஆவணக் கட்டணத்தை பின்வரும் வகையில் செலுத்துதல் வேண்டும்.

அ) எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் மக்கள் வங்கி நகர மண்டப கிளையில் பேணப்படும் 167-1-001-6-3169425 எனும் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கலாம்.

ஆ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள பின்வரும் கொடுப்பனவு கருமபீடங்களில் வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை செலுத்தலாம்.

➢ **வட்டார அலுவலகம் 04, இல. 147, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06.**

➢ **வடிகாலமைப்பு மற்றும் நீர் வழங்கல் பிரிவு, மாளிகாகந்த, கொழும்பு-10.**

ii. பற்றுச்சீட்டு / வங்கி வரவுத் துண்டை விலைமனு ஆவணங்களுடன் கட்டாயம் இணைத்தல் வேண்டும்.

**முறை 02 - நகர மண்டப வளவில் பெற்றுக்கொள்ளலாம்.**

அ. ஒவ்வொன்றிற்கும் மீளளிக்கப்படாத விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணக் கட்டணத்தை 2022-04-04ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் (மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.30 வரை) நகர மண்டப காசாளர் கருமபீடத்திற்கு செலுத்தி மற்றும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-07, நகர மண்டபம், கொழும்பு மாநகர சபை, மாநகர பொறியியலாளர் திணைக்களத்தின் செயற்றிட்ட முகாமைத்துவப் பிரிவிலிருந்து விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

அ. விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்கள் 2022-04-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்குப் பின் வழங்கப்படமாட்டாது/ இணையதளத்தில் பெற்றுக்கொள்ள முடியாது.

ஆ. நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்கதான விலைமனுமுறி/ பிணை கேள்விமனுக்கள்/ விலைமனுக்கள் மூடப்படும் திகதியிலிருந்து 210 நாட்கள் வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைமனுமுறி/ பிணை 2022.11.01ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். விலைக்கோரல்கள் 2022.10.02ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும். ரொக்கப் பணமாகச் செலுத்தப்படும் பிணை முறிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

இ. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல் / கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதிகளில் கொழும்பு-07, நகர மண்டபம், மாநகர செயலாளரின் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022-04-05ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் உள்ளிடல் வேண்டும்.

ஈ. 2022-04-05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனு ஏற்றுக்கொள்வது முடிவுறுத்தப்படும் என்பதுடன் இறுதி நேரத்திற்கு பின் கிடைக்கப்பெறும் கேள்வி/ விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதோடு அதன் பின்னர் கேள்வி/ விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். இந்த நாள் பொது விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால், அடுத்து வரும் வேலை நாளில் 10.00 மணிக்கு கேள்வி/ விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும். கேள்வி/ விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் பங்கேற்பதற்கு கேள்விதாரர்கள்/ விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

உ. கேள்விகள்/ விலைமனுக்களின் விபரங்களுடன் கேள்விகள்/ விலைமனு ஆவணங்களுடன் வழங்கப்படும். 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட கேள்விகள்/ விலைமனுக்களுக்கு கேள்விதாரர்/ விலைமனுதாரர் பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் பதிவு செய்து கொண்ட பின் PCA 3 படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**ரோஷனி திசாநாயக்க - சட்டத்தரணி
மாநகர ஆணையாளர்
கொழும்பு மாநகர சபை.**

---

**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு**

## பெறுகைக்கான அழைப்பு

## மருத்துவ உபகரணப்பொருட்கள் வழங்கல் – 2022

பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிராந்திய பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான தகைமை வாய்ந்த மருத்துவ உபகரண பொருட்கள் விநியோகஸ்தர்களிடமிருந்து கீழ்வரும் பொருட்களிற்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றேன்.

| Reference No | Description | Qty | Bid Security | Reference No | Description | Qty | Bid Security |
|---|---|---|---|---|---|---|---|
| PSSP/ MEP/ 2022/ LOT-A | Patient Trolley | 04 | 50,000.00 | PSSP/ MEP/ 2022/ LOT-C | Salter Scale | 04 | 30,000.00 |
| | Oxygen Trolley Medium | 07 | | | Height Board | 04 | |
| | Emergency Trolley | 09 | | | Length Board | 02 | |
| | IV Stand | 09 | | | Adult beam balance | 02 | |
| | Examination Bed Steps | 03 | | | Infant beam balance | 02 | |
| | Dressing Trolley | 04 | | | Vision Chart | 09 | |
| | Medicine Trolley | 04 | | | Bathroom Scale | 13 | |
| PSSP/ MEP/ 2022/ LOT-B | BP Box -Anroid | 13 | 60,000.00 | PSSP/ MEP/ 2022/ LOT-D | Auto clave | 01 | 80,000.00 |
| | Stethoscope | 14 | | | Nebulize Machine | 05 | |
| | ECG Machine | 06 | | | Cardiac Bed | 02 | |
| | Otoscope (Auroscope) | 01 | | | Sterilizer | 03 | |
| | BP Apparatus Digital | 08 | | | Hot Air Oven | 01 | |
| | Fetoscope | 06 | | | | | |
| | Thermometer-Digital | 13 | | | | | |
| | Thermometer for Refrigerator | 05 | | | | | |
| | Patient Monitor-Basic | 01 | | | | | |

❖ விலைக்கேள்விதாரர் மருத்துவ உபகரண பொருட்கள் விநியோகம் தொடர்பில் வியாபார பெயர் பதிவினையுடைய ஒருநபராக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

❖ ஒவ்வொரு பெறுகைக்கும் மேலே சொல்லப்பட்ட பொருத்தமான உத்தரவாத முறி (Bid Security) இணைக்கப்படுதல் வேண்டும். உத்தரவாத முறி இணைக்கப்படாத பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

❖ நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் "Application for Bid documents" என்ற படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 2000/= காசாக செலுத்தி ஆங்கில மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 08.03.2022 தொடக்கம் 28.03.2022 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரையான நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

❖ விலைக்கேள்விகள் 29.03.2022 ஆந் திகதி 10.30 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலிலோ அல்லது நேரடியாகவோ பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, முல்லைத்தீவு நிதிக்கிளை அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். இவ்விலைக்கேள்விகள் 29.03.2022 ஆந் திகதி 10.30 மணிக்கு எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் ( T.P 021 229 0111, Fax : 021 2290 104 ) பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் முல்லைத்தீவிலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

❖ கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியினை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தலைவர்,
பிராந்திய பெறுகைகள் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
முல்லைத்தீவு**

---

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்**

**நெடுஞ்சாலைகள் அமைச்சு**

## வீதி அபிவிருத்தி அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

### அதிவேக நெடுஞ்சாலை செயற்பாட்டு பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவிற்காக இரு கரைகளிலும் அச்சடிக்கப்பட்ட தேர்மல் பேப்பர் ரோல்களை வழங்குவதற்கான அழைப்பு

**Contract No.: RDA/EOM&M/PRC/2022/TOLL/06**

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் 400,000 எண்ணிக்கையான இரு கரைகளிலும் அச்சடிக்கப்பட்ட தேர்மல் பேப்பர் ரோல்களை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பாக, அதிவேக செயற்பாட்டு பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

2. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை, பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்று (தொலைபேசி: 038-2289122. தொலைநகல்: 038-2289560) அலுவலக நேரங்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.

3. விலைமனுக்கள் 300,000 ரூபா தொகைக்கான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

4. 2022.03.15 ஆம் திகதியிலிருந்து 2022.03.28 ஆம் திகதி வரையும் (பௌர்ணமி தினம் மற்றும் வார இறுதிகள் நீங்கலாக) மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,500 ரூபா + 200 (VAT) ஐ செலுத்திய பின்னர், பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கிலம் மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யலாம்.

5. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2022.03.29 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் இரு பிரதிகளில் பணிப்பாளர், (EOM&M பிரிவு), வீதி அபிவிருத்தி சபை, கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரடியாகவே ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"RDA/EOM&M/PRC/2022/TOLL/06"** என குறிப்பிடப்படல் வேண்டும்.

6. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே பண்டாரகம, வல்கம, கஹட்டகஹஹேன, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, அதிவேக நெடுஞ்சாலை செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் பணிப்பாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களுடைய அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,
EOM&M பிரிவின் பெறுகைக் குழு,
பணிப்பாளர் EOM&M பிரிவு மே/பா,
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம்.**

The easiest & convenient way to send your
Marriage Proposal Ads,
classified@lakehouse.lk
SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service
for 15 Words - Rs. 600/-
For each additional word Rs. 25/-
The convenient way to make your payment :- BOC - Acc.No. 000000377
LAKE HOUSE BRANCH
Green light for Online Transfer
For Inquiries - Piyumi - 011 2 429 383 | Ramani - 011 2 429 347 | Gayani - 011 2 429 342 / 343

CSIAP

THE WORLD BANK

# காலநிலைக்குச் சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம்

## கமத்தொழில் அமைச்சு

## செயற்றிட்டப் பணியாட்தொகுதியினரை ஆட்சேர்த்தல்

கமத்தொழில் அமைச்சினால் செயல்படுத்தப்பட்டு உலக வங்கியின் நிதியுதவியுடன் கூடிய காலநிலைக்குச் சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம் (CSIAP) 5 ஆண்டுகளுக்கானதாகும். (2019 முதல் 2024 வரை) வடமேற்கு, வடமத்திய, கிழக்கு, வடக்கு, தெற்கு மற்றும் ஊவா ஆகிய ஆறு மாகாணங்களில் அடையாளம் காணப்பட்டுள்ள காலநிலை பாதிப்புக்குள்ளான வெப்பப் பகுதிகளை காலநிலைக்கு ஏற்றவாறு மேம்படுத்துவதன் மூலம் விவசாய உற்பத்தியை மேம்படுத்துவதே திட்டத்தின் நோக்கமாகும். திட்ட மதிப்பீடு USD 125 மில்லியன்களாகும்.

ஒப்பந்த அடிப்படையில் திட்டத்தின் பின்வரும் பதவிகளுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு வகுதியின் கீழும் பின்வரும் தகைமைகள் மற்றும் அனுபவத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

### 01. பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் (Deputy Project Director) - (PS 2) - வட மத்திய மாகாணத்தில் 01 பதவி

**பின்வரும் (அ) அல்லது (ஆ) அல்லது (இ) தகைமைகள்**

அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விவசாயம்/ பொறியியல்/ முகாமைத்துவம் / பொருளாதாரம்/ சமூகக் கல்வி என்பவற்றில் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ள இளமாணிப் பட்டம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகுதியாக இயைபுடைய துறையில் பட்டப்படிப்புக்கு சமமான தகைமை அல்லது இயைபுடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட இதனையொத்த ஒரு தொழில்சார் தகைமை / இணை அங்கத்துவம் அத்துடன் முகாமைத்துவ மட்டத்தில் தகைமைக்குப் பின்னரான 13 வருட கால அனுபவம். இதில் 06 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மேற்கூறிய துறைகளில் வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ள இளமாணிப் பட்டம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகுதியாக இயைபுடைய துறையில் பட்டப்படிப்புக்கு சமமான தகைமை அல்லது இயைபுடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட இதற்கு நிகரான தகைமை அத்துடன் நிறுவனம் சார்ந்த பட்டய அங்கத்துவம் அல்லது முகாமைத்துவ மட்டத்தில் தகைமைக்குப் பின்னரான 11 வருட கால அனுபவம் சகிதம் இயைபுடைய துறையில் பட்டப்பின் படிப்புத் தகைமை. இதில் 05 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மேற்கூறிய துறைகளில் வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ள இளமாணிப் பட்டம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகுதியாக இயைபுடைய துறையில் பட்டப்படிப்புக்கு சமமான தகைமை அத்துடன் இயைபுடைய துறையில் பட்டப்பின் படிப்புத் தகைமை மற்றும் நிறுவனம் சார்ந்த பட்டய அங்கத்துவம் அல்லது முகாமைத்துவ மட்டத்தில் தகைமைக்குப் பின்னரான 09 வருட கால அனுபவம் சகிதம் இயைபுடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட இதனையொத்த ஒரு தொழில்சார் தகைமை. இதில் 04 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

அகில இலங்கை அரசாங்கச் சேவையின் Iஆம் வகுப்பு அதிகாரி அல்லது இயைபுடைய துறையில் நிகரான நிலைமை அத்துடன் Iஆம் வகுப்பு பதவியில் குறைந்தபட்சம் 5 வருட கால அனுபவம்.

**ஒரு சுருக்கமான வேலை விவரம்:** மாகாணத்தின் அனைத்து தொடர்புடைய பங்குதாரர் நிறுவனங்களுடனும் மிக நெருக்கமான தொடர்பைப் பேணுவதன் மூலம், மாகாணத்தின் உகந்த (hotspot) பகுதிகளில் அடுக்கை மேம்பாட்டைத் திட்டமிடுதல், மேம்படுத்துதல், செயல்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல்.

### 02. நீர் வளங்கள் அபிவிருத்தி நிபுணர் (PS 3) (Water Resources Development Specialist) – வட மத்திய மாகாணத்தில் 01 பதவி

**பின்வரும் (அ) அல்லது (ஆ) அல்லது (இ) தகைமைகள்**

அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியலில் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ள இளமாணிப் பட்டம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகுதியாக இயைபுடைய துறையில் பட்டப்படிப்புக்கு சமமான தகைமை அல்லது இயைபுடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட இதனையொத்த ஒரு தொழில்சார் தகைமை / இணை அங்கத்துவம் மற்றும் முகாமைத்துவ மட்டத்தில் தகைமைக்குப் பின்னரான 12 வருட கால அனுபவம்.

ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சிவில் பொறியியலில் வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ள இளமாணிப் பட்டம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகுதியாக இயைபுடைய துறையில் பட்டப்படிப்புக்கு சமமான தகுதி அல்லது இயைபுடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட இதற்கு நிகரான தகைமை / இணை அங்கத்துவம் மற்றும் முகாமைத்துவ மட்டத்தில் தகைமைக்குப் பின்னரான 09 வருட கால அனுபவம் சகிதம் இயைபுடைய துறையில் பட்டப்பின் படிப்புத் தகைமை.

இ) அகில இலங்கை அரசாங்கச் சேவையின் Iஆம் வகுப்பு அதிகாரி அல்லது இயைபுடைய துறையில் நிகரான நிலைமை அத்துடன் Iஆம் வகுப்பு பதவியில் குறைந்தபட்சம் 4 வருட கால அனுபவம்.

**ஒரு சுருக்கமான வேலை விளக்கம்:** Hotspot பகுதிகளில் நீர்ப்பாசன மேம்பாடு மற்றும் விவசாய நீர் முகாமைத்துவ தலையீடுகளைத் திட்டமிடுவதற்கு தேவையான ஆய்வுகள். நீர்ப்பாசன முகாமைத்துவம் உட்பட விவசாய நீர் முகாமைத்துவத்திற்காக திட்டமிடப்பட்டுள்ள பல்வேறு தலையீடுகளின் வடிவமைப்புகளை மீளாய்வு செய்தல்.

### 03. பொறியியலாளர் (PS 4 வகுதி - A) (Engineer) – மாகாண மட்டத்தில் 03 பதவிகள்

**பின்வரும் (அ) அல்லது (ஆ) தகைமைகள்**

